திருக்குர்ஆனுக்கு திருக்குர்ஆனே தரும் விளக்கம்

# சூரத்துல் – ஆலெ இம்ரான் (இம்ரான் வம்சத்தவர்)

அத்தியாயம் – 3

முன்னுரை: திருக்குர்ஆனின் மூலமொழியான அரபியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றியிருக்கின்றான் (பாாக்க: 15:9). ஆனால் . . . திருக்குர்ஆனை மொழி பெயர்த்தவர்கள் தங்கள் மனதில் ஏற்கனவே உள்ள கருத்திற்கு (mind set) ஏற்ப அல்லது தாங்கள் சார்ந்துள்ள பிரிவுகளின் நம்பிக்கைக்கு ஏற்ப மொழி பெயர்த்துள்ளார்கள். ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு சொல்லுக்கும் பல அர்த்தங்கள் வருகின்றன. அவரவர்கள் தங்களுக்குத் தேவையான, சாதகமான அர்த்தங்களை மட்டும் எடுத்துக் கொள்கின்றனர். இதனால் திருக்குர்ஆனின் உண்மையான விளக்கங்கள் கிடைக்காமல் வெறும் குழப்பங்களும் முரண்பாடுகளும் தான் மிஞ்சுகின்றன. திருக்குர்ஆன் உண்மையான இறை வேதம் என்பதற்கு முதல் ஆதாரமே அதில் முரண்பாடுகள் எதுவும் இல்லை என்பதுதான் (பார்க்க: *4:82*). ஆனால் திருக்குர்ஆன் மொழி பெயர்புகளில் ஏராளனமான முரண்பாடுகள் இருப்பதை காண்கிறோம். இவற்றை தவிர்க்கவும் திருக்குர்ஆனின் உண்மையான விளக்கத்தை பெறவும் நாம் என்ன செய்ய வேண்டும்?

திருக்குர்ஆனின் விளக்கம் பெற திருக்குர்ஆனே போதுமானது. திருக்குர்ஆனின் ஒரு வாசகத்தை அதன் முற்பகுதியில் அல்லது பிற்பகுதியில் வரும் (connected verses) தொடர்புள்ள வாசகங்கள் அழகுபட விளக்குகின்றன. இது திருக்குர்ஆனின் மாபெரும் அற்புதமாகும். திருக்குர்ஆனின் விளக்கும் பொறுப்பையும் அல்லாஹ்வே ஏற்றிருக்கிறான். (பார்க்க: *75:17-19).* யாரும் விளக்கத் தேவையில்லை. ஆகவே இதன் விளக்க உரையில் ஒரு வாசகத்தை விளக்கும் போது அதை ஆதரித்து விளக்கும் மற்ற வாசக எண்களை இணைத்து தந்துள்ளோம். திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பை பக்கத்தில் வைத்துக் கொண்டு இதை புரிந்துக்கொள்ள வேண்டும். திருக்குர்ஆனை சரியாக புரிந்துக் கொள்ள இந்த வழிமுறை பெரிதும் உதவுகிறது. இவ்வாறாக நாம் அளித்துள்ள விளக்கங்களுக்கு திருக்குர்ஆனே ஆதாரமாகும்.

திருக்குர்ஆன் விளக்க உரை தரும்போது மூல மொழி மற்றும் நேரடி மொழி பெயர்ப்பையும் (ஜான் டிரஸ்ட்) தந்துள்ளோம். விளக்க உரையை படிப்பவர்கள் மொழியும் பார்த்து சரி என்று பட்டால் ஏற்றுக் கொள்ளலாம். விரும்பாதவர்கள் நேரடி மொழி பெயர்ப்பையே பின்பற்றலாம்.

திருக்குர்ஆனின் அத்தியாயங்கள் மக்கா அத்தியாயம் மதினா அத்தியாயம் என இரண்டாக பரிக்கப்பட்டுள்ளது. மக்கா அத்தியாயங்கள் அல்லாஹ்வின் கொள்கை கோட்பாடுகளும் வரலாற்றுச் சான்றுகளும் பிரபஞ்ச படைப்பின் சான்றுகளும் வருகின்றன. மதினா அத்தியாயங்களில் ஆட்சி அமைப்பின் சட்டங்களும் கட்டளைகளும் வழிகாட்டுதல்களும் இணைந்து வந்துள்ளன.

மூலமொழி விளக்க உரை – **Gulam Ahmed Parvez**
தமிழாக்கம் – **N.Roohulla, Chennai-82**
சரிபார்த்தல் – **M.P.Rafeeq Ahmed, Chennai-5 & M.Noor Mohamed, Chennai-82**
தேதி : 24-09-2009

## அத்தியாயம் 3
## ஸூரத்துல் ஆல இம்ரான்-இம்ரானின் சந்ததிகள்

ருகூஃ : 20 மதனீ வசனங்கள் : 200

سورة آل عمران مدنية وهي مائتا آية وعشرون ركوعا

### ருகூஃ 1

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால் (துவங்குகின்றேன்).

1. அலிஃப், லாம், மீம். الٓمّٓ ۙ 1

1. எல்லாம் வல்ல இறைவனால் முஹம்மது நபி மூலமாக இறக்கியருளப்பட்ட வேதமிது.

2 اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْحَىُّ الْقَيُّوْمُ ؕ

2. அல்லாஹ் - அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறில்லை; அவன் நித்திய ஜீவன்; என்றும் நிலைத்திருப்பவன்.

2. அல்லாஹ்வைத் தவிர வேறு யாருடைய கட்டளைக்கும் இணங்கி செயல்படுதல் ஆகாது என்பதை அடிப்படையாக கொண்ட வேதமிது. ஏனெனில் அவனே நித்திய ஜீவன். என்றென்றும் நிலைத்திருப்பவன். அகிலங்களையும் அவற்றில் உள்ளவற்றையும் படைத்து பரிபாலிப்பவனும் அவனே.

3 نَزَّلَ عَلَيْكَ الْكِتٰبَ بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَاَنْزَلَ التَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ ۙ

3. (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இந்த வேதத்தைப் (படிப்படியாக) அவன் தான் உம் மீது இறக்கி வைத்தான்; இது - இதற்கு முன்னுள்ள (வேதங்களை) உறுதிப் படுத்தும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் அவனே இறக்கி வைத்தான்.

3. சமுதாயத்தை வழிநடத்திச் செல்பவரே! முற்றிலும் ஆதாரப்பூர்வமாக விளங்கும் இந்த வேதம் இறக்கி அருளப்படுகிறது. இதற்குமுன் இறைவன் புறத்திலிருந்து வந்த வேதங்களை இது உண்மைப்படுத்துகிறது. அதாவது முன் வேதங்களான தவ்ராத் (Old Testament) மற்றும் இன்ஜீல் (Bible) ஆகியவற்றில் சொல்லப்பட்ட உண்மை விஷயங்களை இது எடுத்துரைக்கிறது.

4 مِنْ قَبْلُ هُدًى لِّلنَّاسِ وَاَنْزَلَ الْفُرْقَانَ ؕ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِ اللّٰهِ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ ذُو انْتِقَامٍ ۝

4. இதற்கு முன்னால் மனிதர்களுக்கு நேர் வழி காட்டுவதற்காக (நன்மை, தீமை இவற்றைப் பிரித்தறிவிக்கும்) ஃபுர்க்கா(ன் என்னும் குர்ஆ)னையும் இறக்கி வைத்தான். ஆகவே, எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றார்களோ; அவர்களுக்கு நிச்சயமாகக் கடும் தண்டனையுண்டு; அல்லாஹ் யாவரையும் மிகைத்தோனாகவும், (தீயோரைப்) பழி வாங்குபவனாகவும் இருக்கின்றான்.

4. இதற்கு முன்னுள்ள வேதங்களான இன்ஜீலும் தவ்ராத்தும் மக்களுக்கு நேர்வழியினை காட்டுவதற்காகவும் மனிதனின் தீய செயல்கள் எவை நன்மையான செயல்கள் எவை என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பதற்காகவும் அருளப்பட்டன. அதே அடிப்படையைக் கொண்ட இந்த வேதமான குர்ஆன் இப்போது அருளப்படுகிறது. (பார்க்க–25:1) இந்த அளவிற்கு தெளிவான வழிகாட்டுதல்கள் வந்த பின்பும் அவற்றை ஏற்று நடக்க மறுப்பவர்களுக்கு, அல்லாஹ்வின் மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற நியதிப்படி பேரழிவுகள் ஏற்படுவது நிச்சயம். இது வெறும் அச்சுறுத்தல் அல்ல. மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் இறுதி விளைவுகள் ஏற்படவைக்கும் வல்லமைபெற்ற இறைவனிடமிருந்து வரும் சொல்லாகும்.

5 إِنَّ اللَّهَ لَا يَخْفَىٰ عَلَيْهِ شَيْءٌ فِي
الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ ۝

5. வானத்திலோ, பூமியிலோ உள்ள எப் பொருளும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு மறைந் திருக்கவில்லை.

5. அதுவும் எப்படிப்பட்ட வல்லமை என்றால் வானங்களிலும் பூமியிலும் நடக்கும் எந்த ஒரு செயலும் அவனுடைய ஞானத்திற்கு வெளியே செல்ல இயலாது. ஆக கடுகின் அளவு சிறிய செயலாக இருப்பினும் சரியே. அது அல்லாஹ்வின் கண்காணிப்பிலிருந்து தப்பமுடியாது. (பார்க்க31:16)

6 هُوَ الَّذِي يُصَوِّرُكُمْ فِي الْأَرْحَامِ
كَيْفَ يَشَاءُ ۚ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْعَزِيزُ
الْحَكِيمُ ۝

6. அவன் தான் கர்ப்பக் கோளறைகளில் தான் நாடியபடி உங்களை உருவாக்குகின்றான்; அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறில்லை; அவன் யாவரையும் மிகைத் தோனாகவும், விவேகம் மிக்கோனாகவும் இருக் கின்றான்.

6. அதுமட்டுமின்றி மனிதன் உருவாவதற்கு முன்பே அவனுடைய வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளை தாயின் கர்ப்ப கோளறையில் ஏற்படுத்துபவனும் அவனே. அப்படி அனைத்து வல்லமையையும் பெற்றவன்தான் அல்லாஹ். இந்த பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு படைப்பிற்கும் ஏற்ப அவன் நிர்ணயித்த நடைமுறைச் சட்டங்களைத் (Control System) தவிர வேறு யாருடைய அதிகாரமும் செல்லாது. அதுவும் கண்மூடித்தனமானது அல்ல. ஒவ்வொன்றும் தெளிவான ஞானத்தின் அடிப்படையைக் கொண்டதாகும்.

7 هُوَ الَّذِي أَنْزَلَ عَلَيْكَ الْكِتَابَ
مِنْهُ آيَاتٌ مُحْكَمَاتٌ هُنَّ أُمُّ
الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ ۖ فَأَمَّا
الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ
مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ
وَابْتِغَاءَ تَأْوِيلِهِ ۗ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ
إِلَّا اللَّهُ ۗ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ
يَقُولُونَ آمَنَّا بِهِ كُلٌّ مِنْ عِنْدِ
رَبِّنَا ۗ وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو الْأَلْبَابِ ۝

7. அவன்தான் (இவ்)வேதத்தை உம்மீது இறக் கினான். இதில் விளக்கமான வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப் படையாகும். மற்றவை (பல அந்தரங்கங் களைக் கொண்ட) முதஷாபிஹாத் (என்னும் ஆயத்துகள்) ஆகும்; எனினும் எவர்களுடைய உள்ளங்களில் வழிகேடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக முதஷாபிஹ் வசனங்களின் விளக்கத்தைத் தேடி அதனைப் பின்பற்றுகின்றனர். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதன் உண்மையான விளக்கத்தை அறியமாட்டார்கள். கல்வியில் உறுதிப்பாடு உடையவர்கள் அவை அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான். நாங்கள் அதை நம்பிக்கை கொள்கிறோம், என்று அவர்கள் கூறுவார்கள். அறிவுடையோரைத் தவிர மற்றவர்கள் இதைக்கொண்டு நல்லுப தேசம் பெறமாட்டார்கள்.

7. அகிலங்கள் அனைத்தும் செயல்படும்படி நடைமுறை சட்டங்களை ஏற்படுத்தியது போல் மனிதனுக்கும் சட்டதிட்டங்கள் இறைவனால் இந்த வேதம் மூலமாக உருவாக்கி தரப்பட்டுள்ளன. மனித வாழ்விற்காக வழிகாட்டியாக திகழும் இந்த வேதத்தின் வாக்கிய அமைப்புகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம். ஒன்று தெளிவான நேரடி அர்த்தங்களைத் தரக்கூடிய *ஆயதெ முஹ்கமாத்* வாக்கியங்களாகும். ஒவ்வொரு விஷயமும் தெளிவாகிட வேண்டும் என்பதே இவ்வேதத்தின் அடிப்படை நோக்கமாகும். இரண்டு *முதஷாபிஹாத்* என்னும் பல கருத்துக்களை தரும் வகையில் உவமான வடிவில் சொல்லப்பட்ட வாக்கிய அமைப்புகள் ஆகும். எவர் உள்ளங்களில் வழிகேடு இருக்கின்றதோ அவர்கள் இந்த உவமை வடிவில் சொல்லப்பட்ட வாக்கியங்களின் வார்த்தைகளுக்கு தவறான விளக்கத்தைக் கொடுத்து அதையே பின்பற்றி வருகின்றனர். இவ்வாறாக மக்கள் மத்தியில் குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றனர். அவற்றின் உண்மையான விளக்கங்கள் அல்லாஹ்விற்கு மட்டும் தெரியும். இருப்பினும் கல்விஞானத்தில் முதிர்ச்சி பெற்றவர்கள் அவற்றின் உண்மை நிலையை ஓரளவு கண்டுக் கொள்வார்கள். மேலும் இவர்கள் இந்த உண்மைகள் அனைத்தும் இறைவன் புறத்திலிருந்து வந்தவைதாம் என்பதை கண்டறிந்து ஏற்றுக்கொள்வார்கள். ஆக அறிவுடையோரைத் தவிர மற்றவர்கள் இதைக்கொண்டு நல்லுபதேசம் பெறமாட்டார்கள்.

விரிவாக்கம் : *ஆயத்தெ முஹ்கமாத் என்னும் தெளிவான அர்த்தங்களைத் தரும் வாக்கியங்கள் நிரந்தர கட்டளைகளும் செயல்முறை திட்டங்களும் அடங்கிய வாக்கியங்களாகும். இந்த வாக்கியங்களில் வரும் வார்த்தைகளுக்கு நேரடி அர்த்தம் கொண்டு விளங்கிக்கொள்ளலாம். உதாரணமாக ஹுர்ரிமத் அலைக்கும் உம்மஹாதுக்கும் (4:23) என்ற வாசகத்திற்கு "உங்கள் தாயை மணமுடித்துக்கொள்ள உங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது" என்று பொருள் வரும். இது நேரடி பொருள் தரக்கூடியதாக வாக்கியமாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு வேறு எந்த அர்த்தத்தையும் தர இயலாது. எனவே இவை ஆயாதுன் முஹ்கமாதுன் ஆக இருக்கின்றது. அதாவது தெளிவுபெற்ற வாக்கியங்கள் ஆகும். ஆக குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் தெளிவாக விளங்கவேண்டும் என்பதே குர்ஆனின் நோக்கமாகும்.*

*அதில் இரண்டாவது வகையான வாக்கிய அமைப்புகள் மனித பார்வைப் புலன்களுக்கு அப்பாலுள்ள விஷயங்களைப்பற்றி குறிப்பிடும் வாக்கியங்களாகும். உதாரணத்திற்கு அல்லாஹ்வின் தனித்தன்மை, மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை, நடந்து முடிந்த மனித வரலாறு போன்றவை. இவை உவமான வடிவில் விளக்கப்பட்டுடுள்ளன. இப்படிப்பட்ட வாக்கிய அமைப்புகளும் இந்த வேதத்தில் காணக்கிடைக்கும். ஆக நேரான பாதையை விட்டுவிட்டு தவறான வழியில் செல்பவர்கள் உவமைவடிவில் சொல்லப்பட்ட வாக்கியங்களின் வார்த்தைகளுக்கு நேரடி மொழிபெயர்ப்பு தந்து மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி அவற்றையே பின்பற்றுகின்றனர். உதாரணத்திற்கு அல்லாஹ் அர்ஷின் மீது அமைந்தான் (13:2). இதற்கு விளக்கம் அளிக்கையில் அர்ஷ் என்பது நாற்காலி என்றும் அதன்மீது அல்லாஹ் அமர்ந்துக் கொண்டிருக்கிறான் என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது. ஆனால் அர்ஷ் என்பது கட்டுப்படுத்தும் (Control System) வல்லமையை குறிக்கும் சொல்லாகும். ஆக அல்லாஹ் அகிலங்களனைத்தையும் படைத்து தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இயக்கி வருவதாகவே பொருள் கொள்ளமுடிகிறது. இப்படியாக உவமைவடிவில் சொல்லப்பட்டதை தம் சொந்த கற்பனைகளை சேர்த்து உண்மையில்லாத விஷயங்களை சொல்லி மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்திவிடுகிறார்கள்.*

*இது தவிர பிரபஞ்சபடைப்பு மற்றும் அவற்றின் செயலாக்கத்தைப்பற்றி உள்ள வாக்கியங்களும் ஒன்றை ஒன்று (Synonyms - Similarity in meaning) ஒத்த பொருள்தரக்கூடிய வகையில் சொல்லப்பட்டுள்ளன. இவற்றின் முழு உண்மைநிலை அல்லாஹ்விற்கு தெரியும். ஆனால் மனித சிந்தனையும் கல்வியும் வளர்ச்சி அடையும்போது அதன் உண்மை நிலையை ஓரளவிற்கு மனிதனாலும் அறிந்துக் கொள்ளமுடியும். உதாரணமாக சூரியன் தன்பாதையை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறது. (36:38) பண்டைய காலத்தில் சூரியன் பூமியை சுற்றிவருகிறது என்ற எண்ணம் மக்களிடத்தில் இருந்தது. அதற்கு இந்த வாசகம் சான்றாக இருந்து வந்தது. ஆனால் மனிதன் தன் முயற்சியைக் கொண்டு விஞ்ஞான கண்டுபிடிப்புகளின்படி பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவருவதாகவும். சூரியனும் தனைத்தானே சுற்றிக்கொண்டு தன் குடும்பத்திலுள்ள நவக்கிரகங்களுடன் ஒரு இலக்கை நோக்கி பயணிப்பதாகவும் கண்டுபிடித்துள்ளான். ஆக இப்போது அந்த வாக்கியத்தின் உண்மை நிலை என்ன என்பது தெளிவு கிடைத்துவிட்டது. ஆக முதஷாபிஹாத்தாக இருந்த இந்த வாக்கியம் முஹ்கமாத்தாக மாறிவிட்டது. இப்படியாக திருக்குர்ஆனின் ஒவ்வொரு வாக்கியமும் தெளிவு கிடைத்துக்கொண்டே போவது உறுதி என்று கூறப்படுகிறது. (41:53) இவற்றின் முழு ஞானமும் அல்லாஹ்விற்கு மட்டும்தான் தெரியும். ஆனால் மனிதனுக்கு கிடைக்கும் ஞானம் சொற்பமான அளவில்தான் இருக்கும். (17:85)*

8 رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا
وَهَبْ لَنَا مِن لَّدُنكَ رَحْمَةً
إِنَّكَ أَنتَ الْوَهَّابُ ○

*8. "எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியபின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தவறுமாறு செய்து விடாதே! இன்னும் நீ உன் புறத்திலிருந்து எங்களுக்கு (ரஹ்மத் என்னும்) நல்லருளை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளியாவாய்!" (என்று அவர்கள் பிரார்த்தனை செய்வார்கள்.)*

8. இவ்வாறாக இறைவனுடைய வழிகாட்டுதல்களை அறிவுப்பூர்மாக ஆராய்ந்து அறிந்துக்கொள்ளும் இவர்களின் எண்ணங்கள், "இறைவா! எங்களுக்கு இந்த குர்ஆன் மூலமாக நேர்வழி கிடைத்தபின் அதிலிருந்து விலகி வழிதவறுமாறு செய்துவிடாதே. ஏனெனில் மனிதனின் தனிப்பட்ட அறிவைக்கொண்டு நேர்வழியின் இலக்கை ஒருபோதும் அடையமுடியாது. எனவே இறைத்தூதர்கள் மூலமாக கிடைக்கும் வழிகாட்டுதல்களின் துணையைக் கொண்டுதான் எங்கள் இலக்கை அடைய முடியும் என்பதை நாம் அறிவோம். உன்னுடைய வழிகாட்டுதல்களே எங்களுக்கு அடிப்படையானவை" என்று இருக்கும்.

9 رَبَّنَآ إِنَّكَ جَامِعُ ٱلنَّاسِ لِيَوْمٍ
لَّا رَيْبَ فِيهِ ۚ إِنَّ ٱللَّهَ لَا يُخْلِفُ
ٱلْمِيعَادَ ۝

*9. "எங்கள் இறைவா! நிச்சயமாக நீ மனிதர்களையெல்லாம் எந்த சந்தேகமுமில்லாத ஒரு நாளில் ஒன்று சேர்ப்பவனாக இருக்கின்றாய். நிச்சயமாக அல்லாஹ் வாக்குறுதி மீற மாட்டான்" (என்றும் அவர்கள் பிரார்த்திப்பார்கள்).*

9. மேலும் "இறைவா! உன் வழிகாட்டுதல்களைக் கொண்டே மனிதர்களுள் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் கொண்டுவர முடியும். இப்படிப்பட்ட உயர்ந்த நோக்கம் நிறைவேறியே தீரும் என்பதை நாம் எவ்வித சந்தேகமுமின்றி அறிவோம். ஏனெனில் இந்த திட்டம் உன் புறத்திலிருந்து வரக்கூடியவை ஆகும். உன்னுடைய வாக்கு என்றும் தவறாது." இந்த உலகைத் தவிர மறுஉலகிலும் இந்த ஒருங்கிணைப்பு நடைபெறும். தற்சமயமுள்ள மனித அறிவைக்கொண்டு அது எப்படி நிகழும் என்பதை கணித்து கூற இயலாது. அல்லாஹ்விடமிருந்து வந்த வழிகாட்டுதல் என்பதால் அந்த விஷயத்தை அப்படியே எவ்வித சந்தேகமுமின்றி ஏற்றுக்கொள்கிறோம்." என்பதாக அவர்கள் எண்ணங்களிருக்கும்.

10 إِنَّ ٱلَّذِينَ كَفَرُوا۟ لَن تُغْنِىَ عَنْهُمْ
أَمْوَٰلُهُمْ وَلَآ أَوْلَٰدُهُم مِّنَ ٱللَّهِ
شَيْـًٔا ۖ وَأُو۟لَٰٓئِكَ هُمْ وَقُودُ ٱلنَّارِ ۝

**ருகூஃ 2**

*10. நிராகரிப்போர்களுக்கு அவர்களுடைய செல்வங்களும், குழந்தைகளும் அல்லாஹ் வி(ன் தண்டனையி)லிருந்து எதையும் நிச்சயமாக தடுக்கமாட்டாது; இன்னும் அவர்கள் தாம் (நரக) நெருப்பின் எரிபொருள்களாக இருக்கின்றனர்.*

10. இந்த வழிகாட்டுதல்களின் பேருண்மையை ஏற்க மறுத்து வேறு கொள்கைகளை பின்பற்றுபவர்கள் எவ்வளவுதான் பொருட் செல்வமும் பிள்ளைச் செல்வங்களையும் பெற்றிருந்தாலும் அவர்களுடைய தவறான செயல்களால் ஏற்படும் அழிவிலிருந்து ஒருபோதும் மீளமாட்டார்கள். அவர்களுடைய இந்த போக்கு குழப்பங்களின் நெருப்பை பெருகிடவே செய்கிறது. அதில் அவர்களும் அவர்களை சார்ந்தவர்களும் மடிந்து போவார்கள்.

11 كَدَأْبِ ءَالِ فِرْعَوْنَ وَٱلَّذِينَ مِن
قَبْلِهِمْ ۚ كَذَّبُوا۟ بِـَٔايَٰتِنَا فَأَخَذَهُمُ
ٱللَّهُ بِذُنُوبِهِمْ ۗ وَٱللَّهُ شَدِيدُ
ٱلْعِقَابِ ۝

*11. (இவர்களுடைய நிலை) ஃபிர்அவ்னின் கூட்டத்தாரையும், இன்னும் அவர்களுக்கு முன்னால் இருந்தோரையும் போன்றே இருக்கிறது; அவர்கள் நம் அத்தாட்சிகளைப் பொய்யாக்கினர்; ஆகவே அவர்களை, அவர்களுடைய பாவங்களின் காரணமாகக் (கடுந்தண்டனையில்) அல்லாஹ் பிடித்துக் கொண்டான் - அல்லாஹ் வேதனை கொடுப்பதில் மிகக் கடுமையானவன்.*

11. இறைவனின் இந்த கூற்றிற்கு வரலாறுகளே சான்றுகளாக இருக்கின்றன. உதாரணமாக ஃபிர்அவுனின் கூட்டத்தாருக்கும் அவர்களுக்கு முன்னிருந்தோருக்கும் நேர்ந்த கதி என்ன என்பதை கவனித்துப் பார்க்கட்டும். இறைவனின் வழிகாட்டுதல்களை ஏற்க மறுத்து தவறான செயல்களை செய்துவந்ததால் அல்லாஹ்வின் மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற நியதிப்படி அவர்கள் அழிவை சந்தித்துக்கொண்டார்கள். அவர்களுடைய அழிவு எந்த அளவிற்கு கடுமையானது என்பதை உலகமே பார்த்துக்கொண்டது.

12 قُل لِّلَّذِينَ كَفَرُوا۟ سَتُغْلَبُونَ
وَتُحْشَرُونَ إِلَىٰ جَهَنَّمَ ۚ وَبِئْسَ
ٱلْمِهَادُ ۝

*12. நிராகரிப்போரிடம் (நபியே!) நீர் கூறுவீராக: "வெகு விரைவில் நீங்கள் தோல்வியடைவீர்கள்; அன்றியும் (மறுமையில்) நரகத்தில் சேர்க்கப்படுவீர்கள்; இன்னும், (நரகமான அவ்விரிப்பு) கெட்ட படுக்கையாகும்.*

12. ஆக அல்லாஹ்வின் கொள்கை கோட்பாடுகளுக்கு எதிராக செயல்படுபவர்களிடம் வரலாற்று சம்பவங்களை எடுத்துரையுங்கள். அவர்கள் தம் போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் விரைவில் மோதல் ஏற்பட்டு தோல்வியை சந்திக்க நேரிடும் என்று எச்சரித்துவிடுங்கள். மேலும் வேதனை தரும் நரகத்தில் அவர்கள் புரட்டி எடுக்கப்படுவார்கள் என்பதையும் அது எப்படிப்பட்ட இழிநிலை என்பதையும் சிந்தித்துப் பார்க்கும்படி அறிவுருத்துங்கள்.

13 قَدْ كَانَ لَكُمْ اٰيَةٌ فِىْ فِئَتَيْنِ
الْتَقَتَا ؕ فِئَةٌ تُقَاتِلُ فِىْ سَبِيْلِ
اللّٰهِ وَاُخْرٰى كَافِرَةٌ يَّرَوْنَهُمْ
مِّثْلَيْهِمْ رَاْىَ الْعَيْنِ ؕ وَاللّٰهُ يُؤَيِّدُ
بِنَصْرِهٖ مَنْ يَّشَآءُ ؕ اِنَّ فِىْ ذٰلِكَ
لَعِبْرَةً لِّاُولِى الْاَبْصَارِ ○

*13. (பத்ரு களத்தில்) சந்தித்த இரு சேனைகளிலும் உங்களுக்கு ஓர் அத்தாட்சி நிச்சயமாக உள்ளது; ஒரு சேனை அல்லாஹ்வின் பாதையில் போரிட்டது; பிறிதொன்று காஃபிர்களாக இருந்தது; நிராகரிப்போர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவோரைத் தங்களைப் போல் இரு மடங்காகத் தம் கண்களால் கண்டனர்; இன்னும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குத் தன் உதவியைக் கொண்டு பலப்படுத்துகிறான்; நிச்சயமாக, (அகப்) பார்வையுடையோருக்கு இதில் திடனாக ஒரு படிப்பினை இருக்கிறது.*

13. இந்த வெற்றி தோல்வியின் அடையாளமாக அண்மையில் பத்ரு மைதானத்தில் இரு பிரிவினருக்கிடையே நடந்த மோதலை எடுத்துக்கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கொள்கையை உலகில் நிலைநாட்ட ஆதரிக்கும் வீரர்கள் ஒருபக்கம். அதை எதிர்த்து நிற்கும் பிரிவினர் மறுபக்கம். எண்ணிக்கையில் எதிர்தரப்பினரின் படைபலம் அதிகமாக இருந்தது. இருந்தும் அல்லாஹ்வின் பாதையில் செயல்பட்டவர்கள் உயர் நோக்கங்களைக் கொண்டவர்களாக இருந்ததினால் அவர்களிடம் வேகமும் துணிவும் கூடியிருந்தது. எனவே எதிரிகளின் ஆட்பலம் தம்மைவிட இருமடங்குதான் பெரிதாக இருக்கிறது என்று எண்ணினர். எனவே அவர்களை எளிதில் முறியடித்து விடலாம் என்ற துணிவும் வேகமும் அவர்களிடம் இருந்தது. ஆக அவ்வாறே அவர்கள் அந்த மோதலில் வெற்றி கண்டனர். (8:44) (8:66). இவ்வாறாக யார் நேர்வழியில் நிலைத்துநின்று அதற்காக துணிவுடன் செயல்படுகிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் நிர்ணயித்துள்ள நடைமுறை சட்டங்களின்படி (As per Allah's System) உதவி நிச்சயமாக கிடைக்கும். நிச்சயமாக அகப் பார்வயுடையோருக்கு இதில் திடமான படிப்பினை இருக்கிறது.

14 زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوٰتِ مِنَ
النِّسَآءِ وَالْبَنِيْنَ وَالْقَنَاطِيْرِ
الْمُقَنْطَرَةِ مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ
وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْاَنْعَامِ
وَالْحَرْثِ ؕ ذٰلِكَ مَتَاعُ الْحَيٰوةِ
الدُّنْيَا ۚ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الْمَاٰبِ ○

*14. பெண்கள், ஆண் மக்கள்; பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங்குவியல்கள்; அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள்; (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப் பட்டிருக்கிறது; இவை(யெல்லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருள்களாகும்; அல்லாஹ்விடத்திலோ அழகான தங்குமிடமுண்டு.*

14. மேலே சொன்ன இரு பிரிவினருக்கு இடையே இருந்து வந்த கொள்கை வேறுபாடு என்ன என்பதை தெளிவாக தெரிந்துக் கொள்ளுங்கள். பொதுவாக மனிதனுடைய நிலை என்னவென்றால் அவனை சுற்றியுள்ள கண்கவர் பொருட்களின் மீது அவனுக்கு அளவுகடந்த ஈர்ப்பு ஏற்படுகிறது. உதாரணமாக மனைவி, மக்கள், தங்கம், வெள்ளி போன்ற செல்வக் குவியல்கள், மேலும் பிரத்யேகமாக வளர்க்கப்பட்ட குதிரைகள், ஆடு, மாடு போன்ற கால்நடைகள், சாகுபடி நிலங்கள், ஆகியவற்றின் மீதுள்ள பற்றுதல் மனிதனை கவர்ந்து விடுகின்றன. இப்படி இருப்பது இயல்பானதே. அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அவற்றையே மனித வாழ்வின் இறுதி இலக்கு என்று எண்ணிக்கொள்வதே தவறான கொள்கையாகும். இவையெல்லாம் இந்த உலகில் மனித வாழ்விற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளே ஆகும். இவற்றையே நோக்கமாகக் கொண்டு வாழ்பவர்கள் உயர் இலட்சியத்திற்காக தியாகம் செய்வது ஒரு புறம் இருக்கட்டும், அவர்களுடைய சொகுசு வாழ்வில் சிறு பாதிப்பு ஏற்பட்டாலும் அதை எதிர்கொள்ளவே விரும்பமாட்டார்கள். ஆனால் அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்று நடப்பவர்களிடம் இந்த செல்வங்களின் ஈர்ப்பு மிகைப்பதில்லை. மனித மாண்புகள் கொண்ட சிறந்த சமுதாயம் உருவாக இவற்றை அர்ப்பணிக்க நேரும்போது அவர்கள் தயங்கமாட்டார்கள். ஏனெனில் அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி செயல்படுவதால் இவற்றைவிட பன்மடங்கு சிறப்பான வாழ்வு கிடைக்கும் என்பதை அவர்கள் திடமாக நம்புகிறார்கள். எனவே துணிவும் வீரமும் கூடிவிடுவதால் வெற்றிகிடைப்பதில் எளிதாகிவிடுகிறது.

15 قُلْ أَؤُنَبِّئُكُمْ بِخَيْرٍ مِّنْ ذَٰلِكُمْ ۚ
لِلَّذِينَ اتَّقَوْا عِنْدَ رَبِّهِمْ جَنّٰتٌ
تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهٰرُ خٰلِدِينَ
فِيهَا وَأَزْوٰجٌ مُّطَهَّرَةٌ وَّرِضْوَانٌ
مِّنَ اللّٰهِ ۗ وَاللّٰهُ بَصِيرٌ بِالْعِبَادِ ۚ

*15. (நபியே!) நீர் கூறும்: "அவற்றை விட மேலானவை பற்றிய செய்தியை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? தக்வா - பயபக்தி - உடையவர்களுக்கு, அவர்களுடைய இறைவனிடத்தில் சுவனபதிகள் உண்டு; அவற்றின் கீழ் நீரோடைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன; அவர்கள் அங்கு என்றென்றும் தங்குவார்கள்: (அங்கு அவர்களுக்குத்) தூய துணைகள் உண்டு; இன்னும் அல்லாஹ்வின் திருப் பொருத்தமும் உண்டு. அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குகிறவனாக இருக்கின்றான்.'*

15. தனிப்பட்ட முறையில் தற்காலிக சொகுசு வாழ்வை நோக்கமாக கொண்டு வாழ்பவர்களிடம், " இதைவிட சிறப்பான வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதை காட்டுகிறோம். என்றும் வற்றாத ஜீவநதி போன்ற தாராளமான பொருளாதார வசதிகள் மற்றும் அதில் தூய உள்ளமும் உயர் பண்புகளையும் கொண்ட உற்ற தோழர்களும் இருப்பார்கள். மேலும் அனைவரும் இறைவனுடைய சட்டதிட்டங்களை மட்டும் பின்பற்றி நடக்கும் அழகான சமூகஅமைப்பு. இப்படிப்பட்ட இன்பகரமான சுவன வாழ்க்கை. இவையெல்லாம் இறைவனுடைய வழிகாட்டுதல்களின்படி கடினமாக உழைப்பவர்களுக்கே கிடைக்கும்.'' என்று விளக்கிவிடுங்கள்.

16 اَلَّذِينَ يَقُولُونَ رَبَّنَآ إِنَّنَآ اٰمَنَّا
فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ ۚ

*16. இத்தகையோர் (தம் இறைவனிடம்): "எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் (உன் மீது) நம்பிக்கை கொண்டோம்; எங்களுக்காக எங்கள் பாவங்களை மன்னித்தருள் செய்வாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக!" என்று கூறுவார்கள்.*

16. இது மட்டுமின்றி இறைவனுடைய வழிகாட்டுதலையே தம் வாழ்வின் இலட்சியமாக கொண்டு செயல்படுபவர்கள், "இறைவா! இந்த ஆட்சியமைப்பிற்கு எதிரான பேச்சுக்களால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பாயாக. அதனால் ஏற்படும் சீர்கேடுகளிலிருந்து எங்களை காத்து நாங்கள் சமூக மேம்பாட்டிற்காக பாடுபட வழிவகுப்பாயாக." என்பதாக பிரார்த்தனை இருக்கும்

17 اَلصّٰبِرِينَ وَالصّٰدِقِينَ وَالْقٰنِتِينَ
وَالْمُنْفِقِينَ وَالْمُسْتَغْفِرِينَ
بِالْأَسْحَارِ ۝

*17. (இன்னும் அவர்கள்) பொறுமையுடையோராகவும், உண்மையாளராகவும், அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்படுவோராகவும், (இறைவன் பாதையில்) தான தர்மங்கள் செய்வோராகவும், (இரவின் கடைசி) ஸஹர் நேரத்தில் (வணங்கி, நாயனிடம்) மன்னிப்புக் கோருவோராகவும் இருப்பர்.*

17. இத்தகையவர்கள் தம் இலட்சியத்தில் உறுதியாக நிலைத்து நின்று உழைப்பார்கள். இறை வழிகாட்டுதலை நடைமுறைபடுத்தி உண்மைப்படுத்துவார்கள். இறைவனுடைய சட்டதிட்டங்களை பேணி நடப்பவர்களாக இருப்பார்கள். தம் உழைப்பில் கிடைத்த வாழ்வதாரங்களை சமுராய மேம்பாட்டிற்காக பயன்படுத்துவார்கள். எதிர் அணியினரின் சூழ்ச்சிகளிலிருந்து பாதுகாப்பு பெற எல்லா வகையான முன்னேற்பாடுகளையும் செய்துக்கொள்வார்கள்.

18 شَهِدَ اللّٰهُ أَنَّهُ لَآ إِلٰهَ إِلَّا هُوَ ۙ
وَالْمَلٰٓئِكَةُ وَأُولُوا الْعِلْمِ قَآئِمًا
بِالْقِسْطِ ۚ لَآ إِلٰهَ إِلَّا هُوَ الْعَزِيزُ
الْحَكِيمُ ۚ

*18. அல்லாஹ் நீதியை நிலைநாட்டக்கூடியவனாக உள்ள நிலையில் அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று சாட்சி கூறுகிறான். மேலும் மலக்குகளும் அறிவுடையோரும் (இவ்வாறே சாட்சி கூறுகின்றனர்.) அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; அவன் மிகைத்தவன், ஞானமிக்கவன்.*

18. அகிலங்களனைத்தும் ஏகஇறைவனாகிய அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு செயல்படுகின்றன என்ற விஷயத்தை முன்வைத்து இந்த அத்தியாயம் ஆரம்பமானது. அவ்வாறின்றி பல தெய்வங்களின் கட்டுப்பாட்டில் செயல்படுவதாக இருந்திருந்தால் அவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டு அழிந்தே போயிருக்கும். (21:22) ஆக அகிலங்களின் செயல்பாடுகளும் மற்றும் அதை செயல்பட வைக்கும் பிரபஞ்ச சக்திகளான மலக்குகளும் ஒரே சீராக அழகியமுறையில்

செயல்படுவதே இதற்கு சாட்சியாக இருக்கின்றன. அதே போல் அல்லாஹ்வின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு சமச்சீரான சமூகஅமைப்பை ஏற்படுத்தும்போது அறிவுடையோர்களும் இதற்கு சாட்சியாளர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆக இந்த சாட்சிகள் எல்லாம் அனைத்தையும் மிகைத்தவனும் ஞானமிக்கவனுமாகிய அல்லாஹ்வின் வழிமுறைகளுக்கு ஈடு இணையான வேறு எந்த வழிமுறைகளும் இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

19 إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ ۗ
وَمَا اخْتَلَفَ الَّذِينَ أُوتُوا الْكِتَابَ
إِلَّا مِن بَعْدِ مَا جَاءَهُمُ الْعِلْمُ
بَغْيًا بَيْنَهُمْ ۗ وَمَن يَكْفُرْ بِآيَاتِ اللَّهِ
فَإِنَّ اللَّهَ سَرِيعُ الْحِسَابِ ○

*19. நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும்; வேதம் கொடுக்கப்பட்டவர்கள் (இதுதான் உண்மையான மார்க்கம் என்னும்) அறிவு அவர்களுக்குக் கிடைத்த பின்னரும் தம்மிடையேயுள்ள பொருமையின் காரணமாக (இதற்கு) மாறுபட்டனர்; எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்தார்களோ, நிச்சயமாக அல்லாஹ் (அவர்களுடைய) கணக்கைத் துரிதமாக முடிப்பான்.*

19. இப்படி தலைசிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே இஸ்லாமிய மார்க்கத்தின் நோக்கமாகும். அகிலங்களின் அனைத்து படைப்புகள் மற்றும் மனிதர்களுக்காகவும் சட்டதிட்டங்களை உருவாக்கிய ஏகஇறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமும் இதுவே ஆகும். இப்படிப்பட்ட வழிகாட்டுதல்களை ஏற்படுத்துவது புதிதான ஒன்றல்ல. முன்சென்ற எல்லா இறைத்தூதர்களும் இதனடிப்படையிலேயே மக்களை வழிநடத்திச் சென்றார்கள். ஆனால் தூதரின் மறைவிற்குப்பின் அவரை பின்பற்றியவர்கள் காலப்போக்கில் தங்களிடையே ஏற்பட்ட போட்டி, பொறாமையின் காரணமாக மாறுபட்டுக் கொண்டனர். இப்படியாக இந்த மார்க்கம் தன் உண்மையான உயர் நோக்கங்களை இழந்து, மக்களும் திசைமாறி சென்றுவிட்டனர். அல்லாஹ்வின் மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற நியதிப்படி அவர்களின் செயலுக்கு ஏற்ப பலன்களை அவர்கள் பெற்றுக்கொண்டனர். இதுவே மனிதர்களிடையே காலம்காலமாக நடந்து வந்த உண்மை விஷயங்களாகும்.

20 فَإِنْ حَاجُّوكَ فَقُلْ أَسْلَمْتُ وَجْهِيَ
لِلَّهِ وَمَنِ اتَّبَعَنِ ۗ وَقُل لِّلَّذِينَ
أُوتُوا الْكِتَابَ وَالْأُمِّيِّينَ أَأَسْلَمْتُمْ ۚ
فَإِنْ أَسْلَمُوا فَقَدِ اهْتَدَوا ۖ وَّإِن
تَوَلَّوْا فَإِنَّمَا عَلَيْكَ الْبَلَاغُ ۗ وَاللَّهُ
بَصِيرٌ بِالْعِبَادِ ○

*20. (இதற்குப் பின்னும்) அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்தால் (நபியே!) நீர் கூறுவீராக: "நான் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்டிருக்கின்றேன்; என்னைப் பின்பற்றியோரும் (அவ்வாறே வழிப்பட்டிருக்கின்றனர்.)" தவிர, வேதம் கொடுக்கப்பட்டோரிடமும், பாமர மக்களிடமும்: "நீங்களும் (அவ்வாறே) வழிப்பட்டீர்களா?" என்று கேளும்; அவர்களும் (அவ்வாறே) முற்றிலும் வழிப்பட்டால் நிச்சயமாக அவர்கள் நேரான பாதையை அடைந்து விட்டார்கள்; ஆனால் அவர்கள் புறக்கணித்து விடுவார்களாயின் (நீர் கவலைப்பட வேண்டாம்,) அறிவிப்பதுதான் உம் மீது கடமையாகும்; மேலும், அல்லாஹ் தன் அடியார்களை உற்றுக் கவனிப்பவனாகவே இருக்கின்றான்.*

20. இந்த தூயமார்க்கத்தை இப்போது எதிர்ப்பவர்களின் நிலைமையும் இதுவே ஆகும். இறைத்தூதரே! மார்க்க சம்பந்தமாக இனியும் அவர்கள் தர்க்கம் செய்தால் அவர்களிடம், " நான் அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு முற்றிலும் அடிபணிந்து செயல்படுபவனாக இருக்கின்றேன். மேலும் என்னை பின்பற்றுபவர்களும் அவ்வாறே செயல்படுகிறார்கள்.'' என்று அறிவித்துவிடு. வேதக்காரர்கள் மற்றும் இதுவரையில் இறைவழிகாட்டுதல்கள் கிடைக்காதவர்களிடமும், "நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்படுகிறீர்களா?" என்று கேளும். அப்படி அவர்களும் அடிபணிந்து வந்தால் அவர்கள் நேர்வழியினை நிச்சயமாக பெற்றுவிடுவார்கள். மாறாக அவர்கள் அவற்றை புறக்கணித்துவிட்டால் அதற்கு நீர் பொறுப்பாளி அல்ல. நேர்வழியினை எடுத்துச் சொல்வதுதான் உன்மீது கடமை. அவற்றை ஏற்று நடப்பதும் நடக்காததும் அவரவர் விருப்பத்திற்குள்ளான விஷயமாகும். (18:29) ஆக எது எப்படி இருந்தாலும் ஒவ்வொருடைய செயலையும் அல்லாஹ்வின் இந்த நடைமுறை அமைப்பு (Allah`s System) கண்காணித்துக்கொண்டே இருக்கும்.

21 إِنَّ الَّذِيْنَ يَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَ
يَقْتُلُوْنَ النَّبِيّٖنَ بِغَيْرِ حَقٍّ ۙ وَّيَقْتُلُوْنَ
الَّذِيْنَ يَاْمُرُوْنَ بِالْقِسْطِ مِنَ
النَّاسِ ۙ فَبَشِّرْهُمْ بِعَذَابٍ اَلِيْمٍ ○

ருகூஃ 3

21. "நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்துக் கொண்டும் நீதமின்றி நபிமார்களைக் கொலை செய்து கொண்டும், மனிதர்களிடத்தில் நீதமாக நடக்கவேண்டும் என்று ஏவுவோரையும் கொலை செய்து கொண்டும் இருக்கின்றார்களோ அவர்களுக்கு நோவினை மிக்க வேதனையுண்டு" என்று (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!

21. அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்க மறுப்பதுடன் அல்லாஹ்வின் ஆட்சியமைப்பு ஏற்படாதவாறு இடையூறல்களை ஏற்படுத்தியும் வருகிறார்கள். மேலும் இறைத்தூதர்கள் மற்றும் நீதமான ஆட்சிஅமைப்பு ஏற்படுத்த தம்மை அர்ப்பணித்தவர்களின் உயிர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கவே சூழ்ச்சிகளை செய்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பெரும் தண்டனை கிடைக்கும் என்பதை எச்சரித்துவிடு. அவர்களுடைய முயற்சிகளெல்லாம் பலனளிக்காது. இறுதியில் அவர்கள் பெரும் அழிவினை சந்திப்பார்கள் என்பதை எடுத்துரைத்துவிடு.

22 اُولٰٓئِكَ الَّذِيْنَ حَبِطَتْ اَعْمَالُهُمْ
فِى الدُّنْيَا وَ الْاٰخِرَةِ ۘ وَمَا لَهُمْ
مِّنْ نّٰصِرِيْنَ ○

22. அவர்கள் புரிந்த செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் (பலனற்றவையாக) அழிந்து விட்டன; இன்னும் அவர்களுக்கு உதவியாளர்கள் எவருமிலர்.

22. இப்படி செயல்படுபவர்கள் இந்த உலகிலோ மரணத்திற்குப் பின்னுள்ள மறுஉலக வாழ்விலோ எதற்கும் பயன்படாதவர்களாக ஆகிவிடுவார்கள். அவர்களுக்கு உதவிபுரிவோர் எவரும் இருக்கமாட்டார்கள்.

23 اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ اُوْتُوْا نَصِيْبًا
مِّنَ الْكِتٰبِ يُدْعَوْنَ اِلٰى كِتٰبِ
اللّٰهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ ثُمَّ يَتَوَلّٰى
فَرِيْقٌ مِّنْهُمْ وَهُمْ مُّعْرِضُوْنَ ○

23. வேதத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர் (களான யூதர்)களை நீர் கவனிக்கவில்லையா? அவர்களிடையே (ஏற்பட்ட விவகாரத்தைப் பற்றி) அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிக்க அவர்கள் அழைக்கப்பட்டார்கள்; ஆனால் அவர்களில் ஒரு பிரிவார் (இதைப்) புறக்கணித்து விலகிக் கொண்டனர்.

23. வேதத்தின் ஒரு பகுதி மட்டும் அளிக்கப்பட்ட வேதக்காரர்கள் (யூதர்கள்), முழு வாழ்க்கை நெறிமுறைகள் அடங்கிய வேதமான குர்ஆனினை ஏற்று நடக்க உடனே முன் வந்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அவர்களை கவனித்தீர்களா? தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளை அல்லாஹ்வின் சட்டங்களின்படியே தீர்த்துக்கொள்ளும்படி கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் அவர்களின் மத குருமார்கள் அவற்றை புறக்கணித்து வருவதோடு குர்ஆனின் வழிகாட்டுதலையும் எதிர்ப்பதிலேயே முன்னோடியாக இருக்கிறார்கள் (2:41)

24 ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لَنْ تَمَسَّنَا النَّارُ
اِلَّآ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ۖ وَّغَرَّهُمْ
فِىْ دِيْنِهِمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ○

24. இதற்குக் காரணம்: எண்ணிக் கணக்கிடப்பட்ட (சில) நாட்களை தவிர (நரக) நெருப்பு எப்போதைக்கும் எங்களைத் தீண்டாது என்று அவர்கள் கூறிக் கொண்டிருப்பதுதான்; (இது) தவிர அவர்கள் தம் மார்க்க(விஷய)த்தில் பொய்யாகக் கற்பனை செய்து கூறிவந்ததும் அவர்களை ஏமாற்றி விட்டது.

24. இவ்வாறு அல்லாஹ் நிர்ணயித்துள்ள வழிகாட்டுதலுக்கு எதிராக செயல்பட அவர்களுக்கு எப்படி தைரியம் வந்தது. அதற்குக் காரணம் என்ன? தம்மை நரக நெருப்பு தீண்டாது. நாங்கள்தாம் சுவர்க்கத்திற்கு சொந்தக்காரர்கள் (2:111) அப்படியே நரகத்தில் தள்ளப்பட்டாலும் ஒரு சில காலம்வரைதான் இருக்க நேரிடும்.

அதன்பின் நாம் சுவர்க்கத்திற்கு சென்றுவிடுவோம் (2:80) இப்படி அல்லாஹ் சொல்லாதவற்றை எல்லாம் தாங்களே இட்டுக்கட்டிக் கொண்டு அல்லாஹ் சொன்னதாக மக்களிடம் சொல்லி வருதால் (2:79) இப்படி மாற்றமாக செயல்பட தைரியம் வந்துவிட்டது. ஆக மார்க்க விஷயத்தில் அவர்கள் பொய்யாக கற்பனை செய்து கூறி வருவதெல்லாம் இறுதியில் ஏமாற்றத்தையே தரும்.

25 فَكَيْفَ إِذَا جَمَعْنَٰهُمْ لِيَوْمٍ لَّا رَيْبَ
فِيهِ وَوُفِّيَتْ كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ
وَهُمْ لَا يُظْلَمُونَ ۝

*25. சந்தேகமில்லாத அந்த (இறுதி) நாளில் அவர்களையெல்லாம் நாம் ஒன்று சேர்த்து ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது சம்பாதித்ததற்கு உரியதை முழுமையாகக் கொடுக்கப்படும் போது (அவர்களுடைய நிலை) எப்படியிருக்கும்? அவர்கள் (தம் வினைகளுக்குரிய பலன் பெறுவதில்) அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.*

25. ஆக அவர்கள் செய்துவரும் செயல்களெல்லாம் அல்லாஹ்வின் மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற சட்டத்தின் பிடியிலிருந்து ஒருகாலும் தப்பமுடியாது. அதே சமயம் அவர்கள் அநியாயமும் செய்யப்படமாட்டார்கள். அதாவது அவர்கள் செய்த செயல்களின் பலன்களையே பெற்றுக்கொள்வார்கள்.

இவர்கள் செய்துவரும் செயல்களின் நிலை களத்தில் சந்திக்கும் போது தெரிந்துவிடும். அப்போது அல்லாஹ்வின் பாதையில் இடையூறுகளை விளைவிப்பவர்கள் தோல்வியுற்று வேதனையும் இழி நிலைக்கும் தள்ளப்படுவார்கள். இப்படி நடப்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. (59:2) மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்விலும் இதே நிலை தொடரும்.

26 قُلِ ٱللَّهُمَّ مَٰلِكَ ٱلْمُلْكِ تُؤْتِى ٱلْمُلْكَ
مَن تَشَآءُ وَتَنزِعُ ٱلْمُلْكَ مِمَّن
تَشَآءُ وَتُعِزُّ مَن تَشَآءُ وَتُذِلُّ
مَن تَشَآءُ بِيَدِكَ ٱلْخَيْرُ إِنَّكَ
عَلَىٰ كُلِّ شَىْءٍ قَدِيرٌ ۝

*26. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய்; இன்னும் ஆட்சியை நீ விரும்புவோரிடமிருந்து அகற்றியும் விடுகிறாய்; நீ நாடியோரை கண்ணியப்படுத்துகிறாய்; நீ நாடியவரை இழிவு படுத்தவும் செய்கிறாய்; நன்மைகள் யாவும் உன் கைவசமேயுள்ளன; அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய்."*

26. அல்லாஹ்வின் செல்லப் பிள்ளைகள் என்பதோ, தனிச்சிறப்பு பெற்ற சமுதாயம் என்றோ இந்த உலகில் யாரும் கிடையாது. எல்லோரும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டவர்களே. அனைவரும் சமமானவர்களே. (5:18) அல்லாஹ்வின் மஷீயத் என்னும் நிலைமாறா நிரந்தர சட்டத்தின்படியே எல்லாமே நிகழ்கின்றன. ஒவ்வொருடைய முயற்சிக்கும் உழைப்பிற்கும் ஏற்ற பலன்களையே பெறவேண்டும் என்பதே அந்த சட்டமாகும். (53:39) ஒவ்வொரு சமுதாயமும் செய்துவரும் செயல்களுக்கு ஏற்ற வகையில் அதன் தகுதிகளும் பதவிகளும் கிடைத்து வரும் (46:19) இந்த சட்டத்தின் பிரகாரம் யார் தம் ஆற்றல்களை வளர்த்துக் கொண்டு தகுதியுடையவர்களாக ஆகிறார்களோ அவர்களுக்கு ஆட்சி அதிகாரங்கள் கிடைக்கும் (2:248) (21:105) (24:55) இதற்கு மாற்றமாக எந்த சமுதாயங்கள் செயல்படுமோ அவை தம் ஆற்றல்களை இழந்து மதிப்பும் கண்ணியமின்றி இழிவுக்குள்ளாகும். (8:53) (13:11) இதுவே அல்லாஹ்வின் நாட்டமும் நிரந்தர சட்டமுமாகும். ஆக இதற்கு மாறாக எதுவும் நடைபெற முடியாது. எல்லா படைப்புகளின் செயல்பாடுகளை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவனும் அவனே.

27 تُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ وَ تُوْلِجُ
النَّهَارَ فِي الَّيْلِ وَ تُخْرِجُ الْحَيَّ
مِنَ الْمَيِّتِ وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ
وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ○

*27. (நாயனே!) நீ தான் இரவைப் பகலில் புகுத்துகின்றாய்; நீ தான் பகலை இரவிலும் புகுத்துகின்றாய்; மரித்ததிலிருந்து உயிருள்ளதை நீயே வெளியாக்குகின்றாய்; நீயே உயிருள்ளதிலிருந்து மரித்ததையும் வெளியாக்குகின்றாய்; மேலும், நீ நாடியோருக்குக் கணக்கின்றிக் கொடுக்கின்றாய்.*

27. அல்லாஹ்வின் செயல்திட்டங்களுக்கு மாற்றமாக எதுவும் நடைபெற முடியாது என்பதற்கு இந்த பிரபஞ்ச செயல்பாடுகளே (System) ஆதாரமாக விளங்குகிறது. இருள் சூழ்ந்துக்கொள்ளும் இரவை வெளிச்சத்தைக் கொண்டு பளிச்சிட செய்வதும், பளிச்சிடும் பகலை இருள் சூழவைப்பதும் முறைப்படி நடந்துவருகிறது. அதே போல் வாழ்வும் மரணமும் ஏற்படுகிறது. பூமியில் விளையும் செடிகொடிகள் மற்றும் தாவரங்கள் எல்லாம் அவற்றிற்கு உயிரளிக்கும் பூமியோடு தொடர்பு இருக்கும் வரையில் உயிர்பெற்று செழிப்பாகவும் அழகாகவும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றை பூமியிலிருந்து பிடுங்கிவிட்டால் அது தன் செழிப்பை இழந்து உயரற்றதாக ஆகிவிடுகிறது. அதே போல் இறைச் வழிகாட்டுதலின்படி சமுதாயம் தொடர்ந்து செயல்படும்போது செழிப்பான சுவன வாழ்வு கிடைத்து வரும். அதுவும் நீங்கள் எண்ணிபார்திராத அளவிற்கு வாழ்க்கை வசதிகள் கிடைத்துவரும் இறை வழிகாட்டுதலின் தொடர்பை அந்த சமுதாயம் துண்டித்துக்கொண்டால் அது நாளடைவில் தம் ஆற்றல்களை இழந்து அழிந்துப் போகும். (மரணமடைந்து விடும்)

28 لَا يَتَّخِذِ الْمُؤْمِنُوْنَ الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ
مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ وَمَنْ يَّفْعَلْ
ذٰلِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِيْ شَيْءٍ اِلَّآ
اَنْ تَتَّقُوْا مِنْهُمْ تُقٰىةً وَ
يُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ وَاِلَى اللّٰهِ
الْمَصِيْرُ ○

*28. முஃமின்கள் (தங்களைப் போன்ற) முஃமின்களையன்றி காஃபிர்களைத் தம் உற்ற துணைவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம்; அவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி (உங்களில்) எவரேனும் அப்படிச் செய்தால், (அவருக்கு) அல்லாஹ்விடத்தில் எவ்விஷயத்திலும் சம்பந்தம் இல்லை; இன்னும், அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களை எச்சரிக்கின்றான்; மேலும், அல்லாஹ்விடமே (நீங்கள்) மீள வேண்டியதிருக்கிறது.*

28. இறைவனின் ஆட்சியமைப்பு ரீதியாக கவனிக்கும்போது மக்கள் இரு பிரிவினர்களாக ஆகிவிடுகின்றனர். ஒன்று இறைச் சட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுபவர்கள். இவர்கள் மூஃமின்கள் எனப்படுவர். இரண்டாவது வகையினர் இறைச் சட்ட திட்டங்களுக்கு எதிராக செயல்படுபவர்கள். இவர்கள் காஃபிர்கள் எனப்படுவர். ஆக இந்த இரண்டு பிரிவினரும் ஒருங்கிணைந்து செயல்பட சாத்தியமில்லை. எனவே ஆட்சியமைப்பு விவகாரங்களில் மூஃமின்கள் காஃபிர்களை உற்ற நண்பர்களாக்கிக் கொள்வது கூடாது. காரணம் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டால் ஆட்சியமைப்பிற்கு பாதிப்பு ஏற்படும். (3:117-119)(58:22)(60:4) இறைநெறிமுறைகளை ஏற்றுக்கொண்டவர்கள் இப்படிப்பட்ட தொடர்புகளை விட்டுவிட்டு தற்காப்பு விஷயத்தை கவனத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையுடன் செயல்படவேண்டும். அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பின்பற்றி ஒரு தலைசிறந்த சமுதாயத்தை உருவாக்க பாடுபட வேண்டும். உங்களுடைய இறுதி இலக்கு இதுவேயாகும்.

29 قُلْ اِنْ تُخْفُوْا مَا فِيْ صُدُوْرِكُمْ
اَوْ تُبْدُوْهُ يَعْلَمْهُ اللّٰهُ وَيَعْلَمُ
مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ
وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ○

29. இந்த அளவிற்கு தெளிவாக்கிய பின் யார் சமூக விரோதிகளோடு உள்ள தொடர்பை துண்டித்துக்கொள்ள முடியாது என்று எண்ணுகிறார்களோ அல்லது துண்டித்துக்கொள்ள விருப்பமில்லையோ அவர்கள் வெளிப்படையாகவே தொடர்பு வைத்துக் கொள்ளட்டும். ஏனெனில் மறைமுகமாக அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டாலும் வெளிப்படையாக வைத்துக் கொண்டாலும் அல்லாஹ்வின் ஆட்சியமைப்பை பொறுத்தவரை

*29. (நபியே!) நீர் கூறும்: "உங்கள் உள்ளத்திலுள்ளதை நீங்கள் மறைத்தாலும், அல்லது அதை வெளிப்படையாகத் தெரியப்படுத்தினாலும் அதை அல்லாஹ் நன்கறிகின்றான்; இன்னும், வானங்களில் உள்ளதையும், பூமியில் உள்ளதையும் அவன் நன்கறிகின்றான்; அல்லாஹ் அனைத்துப் பொருட்கள் மீதும் ஆற்றலுடையவன் ஆவான்."*

இரண்டும் சமமானதே. அல்லாஹ்விடம் எதுவும் மறைக்கலாகாது நீங்கள் செய்வது மட்டுமின்றி வானங்களிலும் பூமியிலும் நடப்பவை யாவும் அவனுடைய ஞானத்திற்கு வெளியே செல்ல இயலாது. ஏனெனில் அவன் படைத்த ஒவ்வொரு பொருளும் அவனுடைய கட்டுப்பாட்டிற்குள் செயல்படுகின்றன.

30 يَوْمَ تَجِدُ كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ
مِنْ خَيْرٍ مُّحْضَرًا ۖ وَمَا عَمِلَتْ مِن
سُوٓءٍ تَوَدُّ لَوْ أَنَّ بَيْنَهَا وَبَيْنَهُۥٓ
أَمَدًۢا بَعِيدًا ۗ وَيُحَذِّرُكُمُ ٱللَّهُ
نَفْسَهُۥ ۗ وَٱللَّهُ رَءُوفٌۢ بِٱلْعِبَادِ ۝

*30. ஒவ்வோர் ஆத்மாவும், தான் செய்த நன்மைகளும்; இன்னும், தான் செய்த தீமைகளும் அந்த(த் தீர்ப்பு) நாளில் தன்முன் கொண்டு வரப்பட்டதும், அது தான் செய்த தீமைக்கும் தனக்கும் இடையே வெகு தூரம் இருக்க வேண்டுமே என்று விரும்பும்; அல்லாஹ் தன்னைப்பற்றி நினைவு கூருமாறு உங்களை எச்சரிக்கின்றான்; இன்னும் அல்லாஹ் தன் அடியார்கள் மீது கருணை உடையோனாக இருக்கின்றான்.*

30. அல்லாஹ்வின் நியதிப்படி அவரவர் செய்து வரும் நன்மையான செயல்களோ அல்லது தீமையான செயல்களோ அதற்கேற்ற பலன்களின் விளைவுகள் அதற்குரிய காலக் கட்டத்தில் பெற்றுக் கொள்வார். தான் செய்த தீமையின் விளைவுகள் தமக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று அவன் ஆயிரம் முறை விரும்பினாலும் அது நடக்காது. ஏனெனில் அல்லாஹ்வின் நடைமுறை சட்ட திட்டங்கள் யாருக்கும் அடிபணியாது. தனிப்பட்ட முறையில் சிந்திக்கும்போது அல்லாஹ்வின் தண்டனைகளின் கடினத்தன்மை வெறுக்கத் தக்கதாய் இருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்த சமுதாயத்தை முன் வைத்து பார்க்கும்போது, தீயச்செயல்களால் ஏற்படும் விளைவுகளை தடுக்க இப்படிப்பட்ட சட்டங்களை உருவாக்கி இருப்பது அவனது கருணையே என்பதை புரிந்துக்கொள்ள முடியும். ஏனெனில் சட்டம் ஒழுங்கு சீர்கெடும்போது சமுதாயம் நிம்மதியற்று சீரழிந்து போகும்.

31 قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى
يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ
وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ۝

ருகூஉ 4

*31. (நபியே!) நீர் கூறும்: "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.*

31. இறைவனின் ஆட்சியமைப்பின் விஷயம் சம்பந்தமாக இறைத் தூதரே! இறை வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொண்டவர்களிடம், "இறைவனின் இந்த ஆட்சியமைப்பை நீங்கள் உண்மையிலேயே நேசிப்பவர்களாக இருந்தால் அதன் சட்டதிட்டங்களை முழு அளவில் பின்பற்றுங்கள். இறை வழிகாட்டுதலின் அடிப்படையில் நான் நடைமுறைப்படுத்தி வரும் சட்ட உட்பிரிவுகளின்படி (By Laws) செயல்படுங்கள்." என்று பிரகடனம் செய்துவிடு. மேலும் அவர்களிடம், "அல்லாஹ்வின் இந்த ஆட்சியமைப்பு உங்களுடைய முழு வளர்ச்சியை கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எனவே உங்களுடைய எந்த உழைப்பும் வீண் போகாது. உங்களிடமிருந்த தீய பழக்கவழக்கங்கள் நீங்கி அதனால் ஏற்படவிருந்த தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்க வழிகள் பிறக்கும். ஏனெனில் அனைவரின் பாதுகாப்பை கருதில்கொண்டே இந்த ஆட்சிமுறை அமைக்கப் பட்டுள்ளது." என்று கூறிவிடுவீராக.

32 قُلْ أَطِيعُوا۟ ٱللَّهَ وَٱلرَّسُولَ ۖ فَإِن
تَوَلَّوْا۟ فَإِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ ٱلْكَٰفِرِينَ ۝

*32. (நபியே! இன்னும்) நீர் கூறும்: "அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் வழிப்படுங்கள்." ஆனால் அவர்கள் புறக்கணித்துத் திரும்பி விடுவார்களானால் - நிச்சயமாக அல்லாஹ் காஃபிர்களை நேசிப்பதில்லை.*

32. எனவே அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பின்பற்றுங்கள். மேலும் அதனடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள ஆட்சியமைப்பின் நடைமுறை சட்டங்களுக்கும் அடிபணியுங்கள். இவ்விரண்டில் எதை புறக்கணித்தாலும் நிராகரிப்பவர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவீர்கள். ஆக நடைமுறை சட்டங்களுக்கு எதிராக செயல் படுபவர்களுக்கு அல்லாஹ்வின் நேசம் கிடைக்காது.

33 إِنَّ اللّٰهَ اصْطَفٰىٓ اٰدَمَ وَنُوْحًا وَّ
اٰلَ اِبْرٰهِيْمَ وَاٰلَ عِمْرٰنَ عَلَى
الْعٰلَمِيْنَ ۙ

*33. ஆதமையும், நூஹையும், இப்ருஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாகத் தேர்ந்தெடுத்தான்.*

33. ஏற்கனவே 3:18–ல் சொன்னது போல இப்படி ஒரு ஆட்சியமைப்பை ஏற்படுத்துவது புதிதான ஒன்றல்ல. அந்தந்த காலக்கட்டங்களில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிலை நிறுத்தப்பட்டதே ஆகும். அந்த வரிசையில் மனிதனின் ஆரம்பக்கால நாகரீக வாழ்க்கைமுறை — அதை ஆதமின் சுவன வாழ்வை உதாரணமாக விளக்கப்பட்டது. (2:30–38), அதன்பின் உலக வரலாறில் முத்திரை படைத்த நூஹ், இப்ராஹிம் சந்ததியர்கள், அவரின் ஒரு கிளையான மூசா மற்றும் ஹாரூனின் சந்ததியர்களில் ஆலெ இம்ரான் – ஆகியோர் அழகிய ஆட்சியமைப்பை ஏற்படுத்தி அக்காலத்தில் வாழ்ந்த மற்ற சமுதாயங்களைவிட வளத்துடன் சுபிட்சமாக வாழ்ந்து காட்டினர். அதன்பின் இப்போது இப்ராஹிமின் மற்ற கிளையான இஸ்மாயிலின் சந்ததியரில் இறுதியாக முஹம்மது நபி சரித்திரம் படைக்க வந்துள்ளார். (2:129)

34 ذُرِّيَّةًۢ بَعْضُهَا مِنْۢ بَعْضٍ ۗ وَاللّٰهُ
سَمِيْعٌ عَلِيْمٌ ۚ

*34. (அவர்களில்) ஒருவர் மற்றவரின் சந்ததியாவார் - மேலும், அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.*

34. அவர்கள் அனைவரும் ஒருவர் மற்றவரின் சந்ததியர்களாவார்கள். யாவற்றையும் கேட்பவனும் நன்கறிபவனுமாகிய அல்லாஹ்வின் மாபெரும் செயல்திட்டப்படி நடைபெற்றவையாகும்.

35 اِذْ قَالَتِ امْرَاَتُ عِمْرٰنَ رَبِّ اِنِّىْ
نَذَرْتُ لَكَ مَا فِىْ بَطْنِىْ مُحَرَّرًا
فَتَقَبَّلْ مِنِّىْ ۚ اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ
الْعَلِيْمُ

*35. இம்ரானின் மனைவி: "என் இறைவனே! என் கர்ப்பத்திலுள்ளதை உனக்கு முற்றிலும் அர்ப்பணிக்க நான் நிச்சயமாக நேர்ந்து கொள்கிறேன்; எனவே (இதை) என்னிடமிருந்து நீ ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ யாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய்" என்று கூறியதையும் -*

35. ஆலெ இம்ரான் சந்ததியரில் வந்த நபிமார்களின் வரிசையில் இறுதியாக ஈசா நபியின் வாழ்க்கை வரலாறு வருகிறது. யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் அவருடைய பிறப்பு இறப்பு பற்றி பல கற்பனைக் கதைகளை உருவாக்கி மக்கள் மத்தியில் பரப்பி இருக்கிறார்கள். அதில் அவருடைய வாழ்க்கைப் பற்றியும் விதவிதமாக கூறி வருகிறார்கள். இதில் அவர்கள் அவரது தாயாரையும் விட்டு வைக்கவில்லை. அந்த கட்டுக்கதைகளை எல்லாம் கவனித்துப் பார்க்கும்போது அவர் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி எந்த சீர்த்திருத்தங்களையும் செய்ததாக தெரிவதில்லை. அவர் ஏதோ ஒரு வானுலக தேவன்மகன். ஆன்மீக பாடங்களை கற்றுத்தந்தவர் போல் சித்தரிக்கப்படுகிறார். எனவே அவரைப்பற்றிய தவறான கருத்துக்களை போக்குவது மிகமிக அவசியமாகிறது. அவருடைய வாழ்க்கை வரலாறு இவ்வாறு ஆரம்பமாகிறது.

இம்ரானின் சந்ததியரில் ஒரு பெண்மணி தனக்கு பிறக்கப்போகும் குழந்தை உலக வாழ்வை துறந்து இறைவனின் பாதையில் முற்றிலும் வழிபட இறை இல்லத்திற்கே அர்ப்பணம் செய்வேன் என்று உறுதி கொண்டிருந்தாள். அதாவது அக்காலத்தில் துறவிகளின் மடமாக செயல்பட்டு வந்த ஆசிரமத்தில் அவளது குழந்தையை சிறு பிராயத்திலேயே விட்டுவிட எண்ணினாள். தன்னுடைய சமர்ப்பணத்தை ஏற்றுக்கொள்ளும்படி இறைவனிடம் வேண்டியும் வந்தாள். "இறைவா! நிச்சயமாக நீ அனைத்தையும் கேட்பவனாகவும் நன்கறிபவானவும் இருக்கின்றாய்" என்றாள்.

36 فَلَمَّا وَضَعَتْهَا قَالَتْ رَبِّ إِنِّي وَضَعْتُهَا أُنثَىٰ وَاللَّهُ أَعْلَمُ بِمَا وَضَعَتْ وَلَيْسَ الذَّكَرُ كَالْأُنثَىٰ وَإِنِّي سَمَّيْتُهَا مَرْيَمَ وَإِنِّي أُعِيذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝

*36. (பின், தான் எதிர்பார்த்ததற்கு மாறாக) அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும்: "என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றிருக்கின்றேன்" எனக் கூறியதையும் நினைவு கூருங்கள்; அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ் நன்கறிவான்; ஆண், பெண்ணைப் போலல்ல; (மேலும் அந்தத்தாய் சொன்னாள்:) "அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன்; இன்னும் அவளையும், அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானி(ன் தீங்குகளி)லிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன்.*

36. தனக்கு பிறக்கப்போகும் குழந்தை ஆண் குழந்தையாக இருக்கும் என்றும் தன் வாழ்நாள் முழுதும் அந்த ஆசிரமத்தின் சேவகனாக பணியாற்றுவான் என்றும் எண்ணியிருந்தாள். ஆனால் அவளுக்கு பிறந்ததோ ஒரு பெண் குழந்தை. ஆண் குழந்தை பிறந்திருந்தால் சிறந்ததாக இருந்திருக்குமே என்று மனம் வெதும்பினாள். ஆனால் அவளுக்கு பிறந்த குழந்தையைப் பற்றியும் அக்குழந்தை வளர்ந்து பெரியவளாகும் போது எந்த அளவிற்கு ஆற்றல் மிக்கவளாக வருவாள் என்பதும், அந்த ஆசிரமத்தில் நடந்து வரும் முறைகேடுகளை உடைத்து எறிவதில் எவ்வாறு துணிந்து செயல்படுவாள் என்பதும் அல்லாஹ்விற்கு தெரியும். ஆக ஆசிரமங்கள் என்ற பெயரால் பெண்களுக்கு எதிராக நடைபெறும் முறைகேடுகளுக்கு எதிராக போர்க்கொடி தொடுப்பதற்கு ஒரு பெண்தான் பொருத்தமானவள் என்பதும் அல்லாஹ்விற்கு நன்கு தெரியும். எனவே அந்த பணிக்கு ஆணைவிட பெண்ணே சிறந்தவள். ஆக அப்பெண்மணி தன்னுடைய குழந்தைக்கு மர்யம் என்று பெரிட்டுள்ளதாகவும் அந்த ஆலயத்தில் தொண்டு செய்ய அர்பணிப்பதாகவும் கூறினாள். அவளையும் அவளுக்கு திருமணாகி குழந்தைகள் பிறந்தால் அந்த குழந்தைகளையும் முறைதவறி நடப்பவர்களின் (ஷைத்தானின்) தீங்கிலிருந்து பாதுகாப்பாக வைக்கும்படி இறைவனிடம் வேண்டினாள்.

37 فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُولٍ حَسَنٍ وَأَنبَتَهَا نَبَاتًا حَسَنًا وَكَفَّلَهَا زَكَرِيَّا ۖ كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيَّا الْمِحْرَابَ وَجَدَ عِندَهَا رِزْقًا ۖ قَالَ يَا مَرْيَمُ أَنَّىٰ لَكِ هَٰذَا ۖ قَالَتْ هُوَ مِنْ عِندِ اللَّهِ ۖ إِنَّ اللَّهَ يَرْزُقُ مَن يَشَاءُ بِغَيْرِ حِسَابٍ ۝

*37. அவளுடைய இறைவன் அவள் பிரார்த்தனையை அழகிய முறையில் ஏற்றுக் கொண்டான்; அக்குழந்தையை அழகாக வளர்த்திடச் செய்தான்; அதனை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா ஏற்றுக்கொள்ளும்படி செய்தான். ஜகரிய்யா அவள் இருந்த மிஹ்ராபுக்குள் (தொழும் அறைக்குப்) போகும் போதெல்லாம், அவளிடம் உணவு இருப்பதைக் கண்டார், "மர்யமே! இ(வ்வுணவான)து உனக்கு எங்கிருந்து வந்தது?" என்று அவர் கேட்டார்; "இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது - நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றி உணவளிக்கின்றான்" என்று அவள் (பதில்) கூறினாள்.*

37. அவ்வாறே அவளுடைய வேண்டுதலின்படி அச்சிறுமி மர்யம் ஆசிரமத்தில் அழகியமுறையில் விடப்பட்டாள். மேலும் அவளை பாதுகாத்து வளர்த்துவர ஜக்ரியா நபி நியமிக்கப்பட்டார். இப்படியாக மர்யம் தன் சிறு வயதிலேயே நற்பண்பும் நல்லொழுக்கமும் பெற்று விளங்கியதால் சுற்று வட்டாரங்களில் அச்சிறுமியின் பெயரும் புகழும் பரவியது. எனவே அந்த ஆலயத்திற்கு வருபவர்கள் அவள் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து விதவிதமான உணவுப் பொருட்களை அன்பளிப்பாக கொண்டுவந்து தருவது வழக்கமாகிவிட்டது. அவற்றைப் பார்த்து அவைகள் எங்கிருந்து வந்தன என்று ஜக்ரியா நபி வியந்து கேட்கும் போதெல்லாம் அல்லாஹ்விடத்திலிருந்து வந்தவைகள் என அவள் அடக்கமாக பதில் சொல்லிவிடுவாள். இப்படியாக எந்த சிரமுமின்றி சிறப்பாக வளர்ந்து வந்தாள். ஆக அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை நாடி செயல்படுவோருக்கு வசதி வாய்ப்புக்கள் அளவின்றி கிடைத்துவிடுகின்றன.

38 هُنَالِكَ دَعَا زَكَرِيَّا رَبَّهُ ۖ قَالَ رَبِّ هَبْ لِي مِن لَّدُنكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۖ إِنَّكَ سَمِيعُ الدُّعَاءِ ۝

*38. அந்த இடத்திலேயே ஜகரிய்யா தம் இறைவனிடம் பிரார்த்தனை செய்தவராகக் கூறினார்: "இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுத்தருள்வோனாக இருக்கின்றாய்."*

38. ஜக்ரியா நபிக்கு அதுவரையில் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருந்தது. சிறுமி மர்யமை வளர்த்து வந்ததால் அவளுடைய மழலைப் பேச்சும் செயல்களும் அவரை வெகுவாக கவர்ந்தன. தனக்கும் இப்படி ஒரு குழந்தை வேண்டும் என்ற ஆசை அவர் மனதில் தோன்றியது. அவருடைய இந்த ஆசை, "இறைவா! எனக்கு சிறந்ததொரு குழந்தையை கொடுத்தருள்வாயாக. நிச்சயமான நீ பிரார்த்தனைகளை கேட்பவனாக இருக்கின்றாய்.'' என்று வார்த்தைகளாக உதிர்ந்தன. (19:1-5)

39 فَنَادَتْهُ الْمَلٰٓئِكَةُ وَهُوَ قَآئِمٌ يُّصَلِّىْ فِى الْمِحْرَابِ ۙ اَنَّ اللّٰهَ يُبَشِّرُكَ بِيَحْيٰى مُصَدِّقًا بِكَلِمَةٍ مِّنَ اللّٰهِ وَسَيِّدًا وَّحَصُوْرًا وَّنَبِيًّا مِّنَ الصّٰلِحِيْنَ ○

39. அவர் தம் அறையில் நின்று தொழுது கொண்டிருந்தபோது, மலக்குகள் அவரை சப்தமாக அழைத்து: "நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா (எனும் பெயருள்ள மகவு குறித்து) நன்மாராயங் கூறுகிறான்; அவர் அல்லாஹ்விடமிருந்து ஒரு வார்த்தையை மெய்ப்பிப்பவராகவும், கண்ணியமுடையவராகவும், ஒழுக்க நெறி பேணிய (தூய)வராகவும், நல்லோர்களிலிருந்தே நபியாகவும் இருப்பார்" எனக் கூறினர்.

39. ஜக்ரியா நபி தம் இருப்பிடத்தில் தன் கடமைகளை ஆற்றி வந்த போது அவரை நோக்கி, "நிச்சயமாக அல்லாஹ் உனக்கு ஒரு குழந்தைப் பாக்கியம் அளிக்க விருக்கின்றான். அவருக்கு யஹ்யா என்று பெயரிட்டுள்ளான். அந்த பெயரைக் கொண்ட நபி இது வரையில் யாரும் பிறந்ததில்லை (19:7) அவர் அல்லாஹ்வின் கோட்பாடுகளை உண்மைபடுத்தி காட்டுபவராக விளங்குவார். மேலும் அவர் ஒரு பெருங்கூட்டத்திற்கு கண்ணியமிக்க தலைவராகவும் ஒழுக்கமாண்புகளை பேணி நடப்பவரகவும் மக்களை வழிநடத்திச் செல்பவராகவும் இருப்பார்." என்ற இறைச்செய்தி வந்தது.

40 قَالَ رَبِّ اَنّٰى يَكُوْنُ لِىْ غُلٰمٌ وَّقَدْ بَلَغَنِىَ الْكِبَرُ وَامْرَاَتِىْ عَاقِرٌ ؕ قَالَ كَذٰلِكَ اللّٰهُ يَفْعَلُ مَا يَشَآءُ ○

40. அவர் கூறினார்: "என் இறைவனே! எனக்கு எப்படி மகன் ஒருவன் உண்டாக முடியும்? எனக்கு வயது அதிகமாகி (முதுமை வந்து) விட்டது; என் மனைவியும் மலடாக இருக்கின்றாள்;" அதற்கு (இறைவன்), "அவ்வாறே நடக்கும்; அல்லாஹ் தான் நாடியதைச் செய்து முடிக்கின்றான்" என்று கூறினான்.

40. ஜக்ரியா இதை கேட்டதும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தார். இருப்பினும் தன் முதுமையை எண்ணி இந்த வயதில் தனக்கு குழந்தை எவ்வாறு பிறக்கும் என்ற மனச்சஞ்சலத்தில் இருந்தார். எனவே அவர், "இறைவா! நான் முதுமையை அடைந்துவிட்டேன். மேலும் என் மனைவியும் மலடாக இருக்கின்றாள். எனவே மர்யம் என் பராமரிப்பில் தத்தெடுத்த குழந்தையாக கிடைத்தது போல குழந்தை கிடைக்குமா? இல்லை முறைப்படி பிறக்குமா?" என வினவினார். அதற்கு, "குழந்தைகள் பிறக்க எல்லோருக்கும் எவ்வாறு விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அதன்படியே பிறக்கும்'' என்று அல்லாஹ்விடமிருந்து பதில் வந்தது.

41 قَالَ رَبِّ اجْعَلْ لِّىْٓ اٰيَةً ؕ قَالَ اٰيَتُكَ اَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلٰثَةَ اَيَّامٍ اِلَّا رَمْزًا ؕ وَاذْكُرْ رَّبَّكَ كَثِيْرًا وَّسَبِّحْ بِالْعَشِىِّ وَالْاِبْكَارِ ○

41. "என் இறைவனே! (இதற்கான) ஓர் அறிகுறியை எனக்குக் கொடுத்தருள்வாயாக!" என்று (ஜகரிய்யா) கேட்டார். அதற்கு (இறைவன்), "உமக்கு அறிகுறியாவது: மூன்று நாட்களுக்குச் சைகைகள் மூலமாக அன்றி நீர் மக்களிடம் பேசமாட்டீர்! நீர் உம் இறைவனை அதிகமதிகம் நினைவு கூர்ந்து; அவனைக் காலையிலும், மாலையிலும் போற்றித் துதிப்பீராக!" என்று கூறினான்.

41. இது குறித்து தான் என்ன செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு கூறும்படி இறைவனிடம் ஜக்ரியா கேட்டுக்கொண்டதற்கு, "நீ உன் முழு கவனத்தையும் மக்களை போதிப்பதிலும் அவர்களை நல்வழி படுத்துவதிலும் செலவிட்டு வருகின்றாய். இல்லறத்தை மறந்து வாழ்ந்துக் கொண்டிருக்கும் நீ மூன்று நாட்களுக்கு மக்களிடம் போதனை செய்வதை நிறுத்திக்கொள். ஏதாவது சொல்வதாக இருந்தால் சைகைகள் மூலமாக சொல்லிவிடு. அந்த குழந்தை பிறப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட நியதிகளைப் பற்றி கவனம் செலுத்தி அதற்கான முயற்சியை மேற்கொள். மற்றபடி காலை முதல் மாலை வரையிலுள்ள மற்ற அலுவல்களை முறைப்படி கவனித்து வா.'' என்று பதில் வந்தது. அவ்வாறே அவருடைய மனைவியிடத்தில் இருந்த மலட்டுதனம் நீங்க சிகிச்சிகை செய்து அந்த தம்பதியருக்கு குழந்தை பிறந்தது. ( 21:90)

*விரிவாக்கம்: தன் குழந்தையையும் ஆசிரமத்திலிருந்த மர்யமையும் அவர் நன்றாக வளர்த்து வந்தார். ஆண்டுகள் பல உருண்டோட மர்யமும் பருவ மங்கையானார். ஆசிரமத்திலிருந்த மற்ற கன்னி ஸ்திரிகளோடு (Nuns) வாழ்ந்து வந்தார். ஆனால் அங்கு மற்ற கன்னிஸ்திரிகளுடன் மடாதிபதிகளும் மதகுருமார்களும் நடந்துக்கொள்ளும் தகாத செயல்களைப் பற்றி கொஞ்சம் கொஞ்சமாக அவருக்கு தெரிய வந்தது. அது போக அவர்களுடைய பார்வை மர்யம் மீதும் விழாமல் இல்லை. ஜக்ரியா நபி மிகவும் பரிசுத்தமானவராக இருந்து அவரை வளர்த்து வந்ததோடு தவ்ராத்தின் வழிகாட்டுதல்களையும் தெள்ளத் தெளிவாக் மர்யமிற்கு கற்றுக் கொடுத்தார். எனவே மர்யமும் மிகவும் பரிசுத்தமானவராக இருந்து வந்தார். அங்கு நடந்துவந்த முறைக்கேடுகளை வெறுத்தார். ஏனெனில் துறவரத்தில் இப்படிப்பட்ட தகாத உறவுகளுக்கு இடமே இல்லை. எனவே அங்கு மர்யமும் பயந்த நிலையில் வாழலானார். அந்த காலக் கட்டத்தில் மர்யமுக்கு ஜக்ரியா நபி மூலமாக இறைவனிடமிருந்து செய்தி வந்தது.*

42 وَاِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ اِنَّ
اللّٰهَ اصْطَفٰكِ وَطَهَّرَكِ وَاصْطَفٰكِ
عَلٰى نِسَآءِ الْعٰلَمِيْنَ ○

ருகூஃ 5

42. (நபியே! மர்யமிடத்தில்) மலக்குகள்: மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்; உம்மைத் தூய்மையாகவும் ஆக்கியிருக்கிறான்; இன்னும் உலகத்திலுள்ள பெண்கள் யாவரையும் விட (மேன்மையாக) உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்" (என்றும்),

43 يٰمَرْيَمُ اقْنُتِىْ لِرَبِّكِ وَاسْجُدِىْ
وَارْكَعِىْ مَعَ الرّٰكِعِيْنَ ○

43. "மர்யமே! உம் இறைவனுக்கு ஸுஜூது செய்தும், ருகூஃ செய்வோருடன் ருகூஃ செய்தும் வணக்கம் செய்வீராக" (என்றும்) கூறினர்.

44 ذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ الْغَيْبِ نُوْحِيْهِ اِلَيْكَ
وَمَا كُنْتَ لَدَيْهِمْ اِذْ يُلْقُوْنَ اَقْلَامَهُمْ
اَيُّهُمْ يَكْفُلُ مَرْيَمَ وَمَا كُنْتَ
لَدَيْهِمْ اِذْ يَخْتَصِمُوْنَ ○

44. (நபியே!) இவை(யெல்லாம்) மறைவானவற்றில் நின்றுமுள்ள விஷயங்களாகும்; இவற்றை நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிக்கின்றோம்; மேலும், மர்யம் யார் பொறுப்பில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி (குறி பார்த்தறிய) தங்கள் எழுதுகோல்களை அவர்கள் எறிந்த போது நீர் அவர்களுடன் இருக்கவில்லை; (இதைப்பற்றி) அவர்கள் விவாதித்த போதும் நீர் அவர்களுடன் இருக்கவில்லை.

42. "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உன்னை உயர்நிலைக்கு எடுத்துச் செல்வான். அதாவது நீ பயப்படுவதுபோல் அவர்களுடைய தவறான ஆசைகளின் வலையில் சிக்கமாட்டாய். நீ பரிசுத்தமாகவே இருக்க அவன் பாதுகாப்பான். மேலும் உலகிலுள்ள மற்ற சாதாரண பெண்களைப் போல் நீ இல்லை. அவர்களை விட நீ பல வகையில் மேலோங்கியவளாக விளங்குவாய்."

43. "மர்யமே! நீ தைரியமாக இரு. ஆசிரமத்தில் நடக்கும் முறைகேடான செயல்களைவிட்டு விலகி இரு. ஜக்ரியா நபி மூலமாக கிடைத்த அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருவதில் உறுதியாக இரு. ஒரு சில நன்மையான காரியங்களும் அந்த ஆசிரமத்திலுள்ள சில நல்லவர்களால் நடந்து வருகின்றன. நீ தனித்திருந்து வாழாமல், நற்காரியங்களை செய்பவர்களோடு சேர்ந்து நீயும் பணியாற்றி வா." என்று ஜக்ரியா நபி மூலமாக ஆறுதலான செய்தி வந்தது.

44. மர்யமுடைய பயம் நியாயமானதே. ஏனெனில் அவள் பெரியவளானதும் ஜக்ரியா நபியின் பராமரிப்பிலிருந்து அவரை விடுவித்து விட்டு தம்மில் ஒருவருடைய பொறுப்பில் கொண்டு வரவேண்டும் என்பதில் அந்த ஆசிரம மடாதிபதிகளும் குருமார்களும் தீவரமாக இருந்தனர். அந்த விஷயத்தில் அவர்களுள் போட்டியும் நிலவி வந்தது. எனவே மர்யம் யார் பொருப்பில் இருக்கவேண்டும் என்பதை கண்டறிய குலுக்குச் சீட்டு போட்டு பார்த்துவிடுவது என்று முடிவெடுத்தனர். அந்த அளவிற்கு அவர்களுடைய எண்ணங்களும் செயல்களும் சீர்கெட்டு போயிருந்தன. நடந்துப் போன இந்த உண்மையான விஷயங்களை எல்லாம் மக்கள் மறந்துவிட்டனர். இப்போது யாருக்கும் எந்த உண்மையும் தெரியாது. நபியே! அது சமயம் நீயும் அங்கு இல்லை. அங்கு நடந்த உண்மை விவரங்களை இறைவன் உனக்கு வஹீ மூலமாக தெரியப்படுத்தியுள்ளான். உண்மை நிலை தெரியாமல் மக்கள் மர்யமைப்பற்றி விதவிதமான கட்டுக்கதைகளை கூறிவருகின்றனர். அவற்றை நீக்கி உண்மை விஷயத்தை எடுத்துரைப்பதே இதன் நோக்கமாகும்.

*(அதன்பின் மர்யம் யூசு:ப் (Joseph) என்பவரின் பராமரிப்பில் இருந்து வந்ததாக பர்னபாஸ் (Barnaboss) போன்ற பைபிளில் குறிப்பு வருகிறது. அவருடன் மர்யம் திருமணம் செய்துக்கொண்டதாகவும் பைபிள்கள் கூறுகின்றன. அவர் திருமணம் செய்துக்கொண்டாலும் இல்லறத்தில் ஈடுபடக்கூடாது என்பது ஆசிரமத்தின் விதிமுறையாக இருந்து வந்தது. ஆனால் அந்த ஆசிரமத்தில் பெண் துறவிகளிடம் (Nuns) மதகுருமார்களும் மடாதிபதிகளும் செய்கின்ற தகாத செயல்களை பார்த்த மர்யம் அவர்களுக்கு எதிராக போர்க் கொடி தொடுத்தார். எனவே அவருக்கு எதிராக எதிர்ப்புகள் வலுக்கவே அங்கு தொடர்ந்து இருந்தால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என அஞ்சி அங்கிருந்து இரகசியமாக தன் கணவருடன் வெளியேறி விட்டார். (66:12) அவ்வாறு அந்த அசிரமத்தை விட்டு வெளியேறியதால் மக்கள் மத்தியில் பெரும் அமளி ஏற்பட்டு விட்டது. எனவே அவர் அதற்கு அஞ்சி நசீரியா என்ற ஊரக்குச் சென்று மறைவாக வாழலானார். (19:16&17) ஆசிரமத்தில் இருந்துக் கொண்டுதான் துறவரத்தை தொடர முடியும் என்பதல்ல. உலகில் எங்கிருந்தாலும் இல்லறத்தில் ஈடுபடாமல் பரிசுத்தமாக இருக்க முடியும் என்று மரியம் கருதியதும் அதற்கு ஒரு காரணமாகும். அவ்வாறு வாழ்ந்து வந்த சமயத்தில் அவருக்கு ஒரு மகன் பிறக்கப் போகும் செய்தி ஜக்ரியா நபி மூலமாக வருகிறது.)*

45 إِذْ قَالَتِ الْمَلَٰٓئِكَةُ يَٰمَرْيَمُ إِنَّ اللَّهَ
يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ اسْمُهُ الْمَسِيحُ
عِيسَى ابْنُ مَرْيَمَ وَجِيهًا فِي الدُّنْيَا
وَالْآخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِينَ ۝

45. மலக்குகள் கூறினார்கள்: "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ்; மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார்;

45. , " நிச்சயமாக உனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது என்ற நற்செய்தியை அல்லாஹ் அனுப்பியுள்ளான். அக்குழந்தையின் பெயர் மஸீஹ் மர்யமின் குமாரர் ஈஸா என்பதாக இருக்கும். உனக்கு பிறக்கப் போகும் அக்குழந்தை இவ்வுலகிலும் மறுவுலகிலும் மிகவும் கண்ணியம் மிக்கவராகவும் இறைவனுக்கு நெருக்கமானவராகவும் இருப்பார்." என்று அச்செய்தியாளர் கூறினார்.

46 وَيُكَلِّمُ النَّاسَ فِي الْمَهْدِ وَكَهْلًا
وَمِنَ الصَّٰلِحِينَ ۝

46. "மேலும், அவர் (குழந்தையாகத்) தொட்டிலில் இருக்கும்போதும், (பால்யம் தாண்டி) முதிர்ச்சியடைந்த பருவத்திலும் அவர் மக்களுடன் பேசுவார்; இன்னும் (நல்லொழுக்கமுடைய) சான்றோர்களில் ஒருவராகவும் அவர் இருப்பார்."

46. மேலும் அவர், "மர்யமே! உனக்கு பிறக்கப்போகும் அக்குழந்தை இளமைப் பருவத்திலும் முதுமையிலும் மக்கள் மத்தியில் சிறந்த போதகராக வருவார். எல்லா ஆற்றல்களுடன் கூடிய சிறந்த செயல் வீரராகவும் இருப்பார்" என்று அவர் கூறினார். அதாவது ஒரு கன்னிஸ்திரி ஆசிரமத்தின் விதிமுறைகளை மீறி குழந்தையை பெற்றெடுத்துக் கொண்டால் அக்குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமே என்ற மர்யமின் பயத்தை நீக்குவதாக இச்செய்தி அமைகிறது. துறவறத்தை மேற்கொள்ளும் ஒரு கன்னிஸ்திரி இல்லறத்தில் ஈடுபடுவதை கற்பனைகூட செய்துப்பார்க்க முடியாது. விஷயம் இவ்வாறிருக்க ஒரு குழந்தையின் நற்செய்தி அதுவும் இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் - அவருக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தது. இந்த செய்தியை ஏற்றுக்கொள்ள அவரது மனம் ஒப்பவில்லை. எனவே அவர்-

47 قَالَتْ رَبِّ أَنَّىٰ يَكُونُ لِي وَلَدٌ
وَلَمْ يَمْسَسْنِي بَشَرٌ قَالَ كَذَٰلِكِ
اللَّهُ يَخْلُقُ مَا يَشَاءُ إِذَا قَضَىٰ أَمْرًا
فَإِنَّمَا يَقُولُ لَهُ كُن فَيَكُونُ ۝

47. (அச்சமயம் மர்யம்) கூறினார்: "என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும்போது எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?" (அதற்கு) அவன் கூறினான்: "அப்படித்தான் அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால்,

47. "அடக்கடவுளே! எனக்கு எவ்வாறு குழந்தை பிறக்கும் துறவறத்தைமேற்கொள்ளும் என்னை எந்த ஆடவரும் தீண்டுவதற்கு இல்லை என்றிருக்க எனக்கு குழந்தை எவ்வாறு பிறக்கும்?" என்று ஆச்சரியப்பட்டு கேட்டார். அதற்கு "துறவறம் என்பதெல்லாம் அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட வழிமுறைகளே அன்றி வேறில்லை. அல்லாஹ் அவ்வாறு விதிக்கவுமில்லை (57:27)

அவன் அதனிடம் 'ஆகுக' எனக் கூறுகிறான் உடனே அது ஆகி விடுகிறது."

குழந்தை பெற அல்லாஹ் எல்லோருக்கும் எவ்வாறு விதிமுறைகளை நிர்ணயித்துள்ளானோ அவ்வாறே உனக்கும் குழந்தை பிறக்கும்'' என்று பதிலளிக்கப்பட்டது. அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி மர்யமிற்கு கட்டளையிடப்பட்டது. அவ்வாறே அந்த கட்டளையும் நிறைவேறியது.

48 وَيُعَلِّمُهُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَالتَّوْرٰىةَ
وَالْاِنْجِيْلَ ۚ

*48. இன்னும் அவருக்கு அவன் வேதத்தையும், ஞானத்தையும், தவ்ராத்தையும் இன்ஜீலையும் கற்றுக் கொடுப்பான்.*

48. மர்யமிடமிருந்த மனச் சஞ்சலத்தைப் போக்க பிறக்கப்போகும் அக்குழந்தையைப் பற்றி மேல்கொண்டு விவரங்களை அந்தச் செய்தியை கொண்டு வந்தவர் விளக்கினார். அவர், " மர்யமே! உனக்கு பிறக்கப்போகும் குழந்தை சாதாரண குழந்தை அல்ல. அக்குழந்தை பெரியவனானதும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறை நெறிமுறைகள் – அதாவது தவ்ராத் மற்றும் பைப்பிள் உடைய ஞானம் முழு அளவில் அவருக்கு கிடைக்கும்'' என்றார்.

49 وَرَسُوْلًا اِلٰى بَنِىْٓ اِسْرَآءِيْلَ ۙ۬ اَنِّىْ
قَدْ جِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ ۙ اَنِّىْٓ
اَخْلُقُ لَكُمْ مِّنَ الطِّيْنِ كَهَيْـَٔةِ
الطَّيْرِ فَاَنْفُخُ فِيْهِ فَيَكُوْنُ طَيْرًاۢ
بِاِذْنِ اللّٰهِ ۚ وَاُبْرِئُ الْاَكْمَهَ
وَالْاَبْرَصَ وَاُحْىِ الْمَوْتٰى بِاِذْنِ
اللّٰهِ ۚ وَاُنَبِّئُكُمْ بِمَا تَاْكُلُوْنَ وَمَا
تَدَّخِرُوْنَ ۙ فِىْ بُيُوْتِكُمْ ؕ اِنَّ فِىْ ذٰلِكَ
لَاٰيَةً لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۚ

*49. இஸ்ராயீலின் சந்ததியினருக்குத் தூதராகவும் (அவரை ஆக்குவான்; இவ்வாறு அவர் ஆகியதும் இஸ்ரவேலர்களிடம் அவர்:) "நான் உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன்; நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி நான் அதில் ஊதுவேன்; அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகி விடும். பிறவிக் குருடர்களையும், வெண் குஷ்ட ரோகிகளையும் குணப்படுத்துவேன்; அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு இறந்தோரையும் உயிர்ப்பிப்பேன்; நீங்கள் உண்பவற்றையும், நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரம் செய்து வைப்பவற்றையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். நீங்கள் முஃமின்கள் (நம்பிக்கையாளர்) ஆக இருந்தால் நிச்சயமாக இவற்றில் உங்களுக்குத் திடமான அத்தாட்சி இருக்கிறது" (என்று கூறினர்).*

49. மேலும் அவர் பனீஇஸ்ராயீல் சமூகத்தவர்க்கு இறைத்தூதராக வருவார். நடைபிணங்களாக வாழும் தன் சமூகத்தவர்களை ஜீவனுள்ள சமுதாயமாக மாற்றியமைக்க இறைவன் புறத்திலிருந்து நற்செய்திகளை கொண்டு வந்துள்ளதாக கூறுவார். மேலும் அவர் மக்களிடம், "இறைவனின் வழிகாட்டுதலைக் கொண்டு உங்கள் அனைவரையும் புத்துயிர் பெற வழி செய்வேன். களிமண்ணாக புதைந்து கிடக்கும் உங்கள் சிந்தனை மற்றும் ஆற்றல்களை வளர்த்து வானில் பறக்கும் பறவைகளைப் போல் உயர் நிலைக்கு கொண்டு வருவேன். உங்களுடைய நற்செயல்களைக் கொண்டு உங்கள் வாழ்வை வளமாக்குவேன்'' (7:176) என்பார். மேலும் அவர், "நீங்கள் கண்ணிருந்தும் குருடர்களாக வாழ்ந்து வருகிறீர்கள் (7:179) அதனால் சமுதாயமே அருவறுக்கத்தக்க குஷ்டத்தைப்போல் சீர்கெட்டுவிட்டது. எனவே இறை வழிகாட்டுதலைக் கொண்டு உங்கள் அனைவரையும் நேர்வழி என்னும் வெளிச்சத்திற்கு கொண்டுவருவேன்." என்பார். சுருங்கச்சொன்னால், "உங்களின் தீயச் செயல்களால் வாழ்வின் இழிநிலை என்ற மரணத்தின் பால் இழுத்துச் செல்லப்படுகிறீர்கள். (3:112) அதிலிருந்து உங்களை மீட்டு புத்துயிர் பெறச் செய்வேன்'' என்பார். "சட்டவிரோதமாக செயல்படும் பதுக்கல் போர்வழிகளைப் (Hoarding) பற்றியும் அதனால் சமுதாயத்தில் ஏற்படும் சீர்கேடுகளைப் பற்றியும் உங்களிடம் எடுத்துரைக்கின்றேன். மேலும் இறைவனின் வழிகாட்டுதலை ஏற்று நடந்தால் நிச்சயமாக உங்களுக்கு பல நன்மைகள் கிடைக்கும் என்பதை உணர்வீர்கள்'' என்பார்.

50 وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَىَّ مِنَ
التَّوْرٰىةِ وَلِاُحِلَّ لَكُمْ بَعْضَ الَّذِىْ
حُرِّمَ عَلَيْكُمْ وَجِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ
رَّبِّكُمْ ۟ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ○

50. மேலும் அவர் பனீஇஸ்ராயில் சமூகத்தவரிடம், " எனக்கு வஹீ மூலமாக கிடைத்துள்ள வழிகாட்டுதல்கள் புதிதான ஒன்றல்ல. ஏற்கனவே உங்களிடமுள்ள தவ்ராத்தில் கூறப்பட்டவையே. அவற்றை

50. "எனக்கு முன் இருக்கும் தவ்ராத்தை மெய்ப்பிக்கவும், உங்களுக்கு விலக்கி வைக்கப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும் உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் நான் கொண்டு வந்திருக்கிறேன்; ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; என்னைப் பின் பற்றுங்கள்."

உண்மைபடுத்தி வழிநடத்திச் செல்லவே வந்துள்ளேன். ஷரீயத் என்ற பெயரில் நீங்களே உருவாக்கி வைத்துள்ள தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்களை நீக்கிவிடவே வந்துள்ளேன். ஆக இறைவனிடமிருந்து உங்களுக்கான வாழ்க்கை நெறிமுறைகளை கொண்டுவந்துள்ளேன். அவற்றை பின்பற்றுங்கள். அதனடிப்படையில் நான் உருவாக்கும் நடைமுறை சட்டங்களுக்கு (By-Laws) அடிபணியுங்கள்" என்பார்.

51 إِنَّ اللَّهَ رَبِّي وَرَبُّكُمْ فَاعْبُدُوهُ
هَٰذَا صِرَاطٌ مُّسْتَقِيمٌ ○

51. "நிச்சயமாக அல்லாஹ்வே என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனும் ஆவான்; ஆகவே அவனையே வணங்குங்கள் இதுவே (ஸிராத்துல் முஸ்தகீம் என்னும்) நேரான வழியாகும்."

51. "நான் உருவாக்கி வரும் சமுதாய அமைப்பு, உங்களையும் என்னையும் படைத்து பரிபாலிப்பவனாகிய இறைவன் வகுத்து தந்துள்ள கொள்கை கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டவையாகும். எனவே அதற்கு முற்றிலும் அடிபணிந்து வாழுங்கள். அதுவே உங்கள் அனைவரையும் நேரான பாதைக்கு அழைத்துச் செல்லும்" என்பார்.

*இப்படிப்பட்ட உயர் பண்புகளையும் பேராற்றல்களையும் கொண்டு விளங்கப்போகும் குழந்தையை பெற்றெடுக்க தயக்கம் காட்டுகிறாயா? இறைவனின் மாபெரும் செயல்திட்டத்தை நிறைவேற்ற இறைவன் விதியாக்காத துறவித்தனத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வின் நடைமுறைச் சட்டங்களின்படி (சுன்னத்தல்லாஹ்) இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளும்படி மர்யமிடம் இறைச்செய்தியை கொண்டுவந்தவர் கூறினார். அவ்வாறே அவரும் முறைப்படி குழந்தையை பெற்றெடுத்தார். அதுமட்டுமின்றி ஈசா நபிக்கு ஒரு தம்பியும் இரண்டு தங்கைகளும் இருந்தனர் என்று வரலாறுகள் கூறுகின்றன. மர்யம் திருமணம் செய்துகொண்டு இல்லத்தரசியாக வாழ்ந்துவந்தார் என்றும் குறிப்புகள் கிடைக்கின்றன. எனவே ஈசா நபி தந்தையின்றி பிறந்தார் என்ற கூற்றிற்கு இடமே இல்லை. திருக்குர்ஆனில் எல்லா நபிமார்களின் தாய் தந்தையரின் பெயர்கள் இடம் பெறவுமில்லை.*

*ஈசா இப்னு மர்யமா — அதாவது மர்யமின் குமாரர் ஈசா என்று பெயர் வந்ததற்குக் காரணம் உலகில் நிலவிவந்த "துறவித்தனம்" என்ற தவறான கொள்கையை வேரறுத்துக் காட்டிய புரட்சிகரமான பெண்மணி அவர். ஆசிரமம் என்ற பெயரில் நடக்கும் முறைகேடுகளுக்கு பலியாகாமல் தன்னந் தனியாக நின்று எதிர்ப்பது என்பது சாதாரண விஷயமல்ல. ஆசிரமத்தை சார்ந்தவர்களால் சிறிது காலத்திற்கு மர்யம் அவச்சொல்லுக்கு ஆளானாலும், காலப்போக்கில் அவருடைய புரட்சிகர செயலும் அவர் தம் மகன் ஈசாவை வளர்த்து அவர் கற்றிருந்த தவ்ராத்தின் போதனைகளை ஈசாவிற்கு விளக்கமளித்து பெரும் சீர்திருத்தங்களை கொண்டுவருவதில் ஆணி வேராக திகழ்ந்தார். எனவே அவர் உலக வரலாற்றில் தலைச்சிறந்த பெண்மணி என்ற முத்திரையை பதித்துவிட்டு சென்றார் (66:12). எனவே ஈசா மர்யமின் குமாரர் ஈசா என்ற பெயரை பெற்றார்.*

52 فَلَمَّا أَحَسَّ عِيسَىٰ مِنْهُمُ الْكُفْرَ
قَالَ مَنْ أَنصَارِي إِلَى اللَّهِ ۖ قَالَ
الْحَوَارِيُّونَ نَحْنُ أَنصَارُ اللَّهِ آمَنَّا
بِاللَّهِ وَاشْهَدْ بِأَنَّا مُسْلِمُونَ ○

52. அவர்களில் குஃப்ரு இருப்பதை (அதாவது அவர்களில் ஒரு சாரார் தம்மை நிராகரிப்பதை) ஈஸா உணர்ந்த போது: "அல்லாஹ்வின் பாதையில் எனக்கு உதவி செய்பவர்கள் யார்?" என்று அவர் கேட்டார்; (அதற்கு அவருடைய சிஷ்யர்களான) ஹவாரிய்யூன்: "நாங்கள் அல்லாஹ்வுக்காக (உங்கள்) உதவியாளர்களாக இருக்கிறோம், நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டுள்ளோம்; திடமாக நாங்கள் (அவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக இருக்கின்றோம், என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்" எனக் கூறினர்.

52. அதன்படி அந்த குழந்தை பிறந்து வளர்ந்து வாலிப வயதை அடைந்தபோது அவருக்கு தவ்ராத் (Old Testament) மற்றும் இன்ஜீல் (New Testament) என்கிற பைப்பளின் ஞானம் முழுஅளவில் கிடைத்தது. அதன்படி ஒரு சமுதாயத்தை உருவாக்கிட மக்களுடைய ஆதரவை திரட்ட தீர்மானித்து இறை வழிகாட்டுதலின் பலன்களைப்பற்றி மக்களிடம் போதித்தார். அவருடைய போதனைகள் மக்களிடையே பரவியது. ஆனால் இந்த கொள்கைகள் அங்கிருந்த அரசியல் தலைவர்களுக்கும் யூத மதகுருமார்களுக்கும் எதிராக இருந்தன. இந்த போதனைக்கு எதிர்ப்புகள் வளரவே தம் சமுதாயத்திலுள்ள அனைவரும் இறை வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்பதை உணர்ந்தார். எனவே அல்லாஹ்வின் அமைப்பிற்கு துணை நிற்பவர்கள் யார் என்று அரைகூவல் விடுத்தார். அதற்கு அவரை முழு அளவில் ஏற்றுக் கொண்டவர்கள் நாம் அல்லாஹ்வின் ஆட்சியமைப்பு ஏற்படுத்திட துணை நிற்போம் என்றும் அல்லாஹ்வின் கொள்கை கோட்பாடுகளை

53 رَبَّنَا آمَنَّا بِمَا أَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُولَ فَاكْتُبْنَا مَعَ الشّٰهِدِينَ ○

*53. "எங்கள் இறைவனே! நீ அருளிய (வேதத்)தை நாங்கள் நம்புகிறோம், (உன்னுடைய) இத்தூதரை நாங்கள் பின்பற்றுகிறோம்; எனவே எங்களை (சத்தியத்திற்கு) சாட்சி சொல்வோருடன் சேர்த்து எழுதுவாயாக!" (என்று சிஷ்யர்களான ஹவாரிய்யூன் பிரார்த்தித்தனர்.)*

முற்றிலும ஏற்று அடிபணிந்து நடப்போம் என்றும் கூறி ஒரு சிலர் அவரிடம் வந்து இணைந்தனர்.

53. அவ்வாறு வந்து இணைந்தவர்கள், தம்மைப் படைத்து பரிபாலிப்பவனாகிய இறைவன் வகுத்துத் தந்துள்ள சட்ட திட்டங்களை முற்றிலும் ஏற்றுக் கொள்வதாகவும் அதனடிப்படையில் வழி நடத்திச் செல்ல வந்துள்ள இறைத்தூதரின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதாகவும் உறுதியளித்தனர். இறைவனின் வழிகாட்டுதலை உண்மைப்படுத்திக் காட்டியவர்கள் பட்டியலில் தம்மை இணைத்துக் கொள்ளும்படி இறைவனிடம் பிரார்த்தித்தனர்.

54 وَمَكَرُوا وَمَكَرَ اللّٰهُ ۖ وَاللّٰهُ خَيْرُ الْمٰكِرِينَ ○

*54. (ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத்) திட்டமிட்டுச் சதி செய்தார்கள்; அல்லாஹ்வும் சதி செய்தான்; தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான்.*

54. இப்படியாக அந்த சமுதாயம் இரண்டாக பிரிந்தது. அதில் ஒன்று சத்திய வாக்குகளை ஏற்று நடப்பவர்கள் மற்றொன்று அதை எதிர்ப்பவர்கள். ஈசா நபியை எதிர்த்து வந்த தலைவர்களும் மதகுருமார்களும் அவருக்கெதிராக விதவிதமான சூழ்ச்சிகளை செய்து வந்தனர். இந்த போதனைகளை விட்டுவிட அவரிடம் தர்க்கமும் செய்து பார்த்தனர் (19:28–33). இவைகள் எல்லாம் பலன் அளிக்காததால் அவரை கொன்றுவிட திட்டமிட்டனர். ஆனால் அதிலிருந்து தப்பிச் செல்ல அல்லாஹ்வின் ஏற்பாடுகளில் சிறந்த வழிகள் பல உண்டு. எனவே அவரும் அந்த சதியிலிருந்து தப்பிச் சென்றார். அவர் ஹிஜ்ரத் செய்து வெறு ஊருக்கு சென்றுவிட்டார்.

55 إِذْ قَالَ اللّٰهُ يٰعِيسٰى إِنِّي مُتَوَفِّيكَ وَرَافِعُكَ إِلَيَّ وَمُطَهِّرُكَ مِنَ الَّذِينَ كَفَرُوا وَجَاعِلُ الَّذِينَ اتَّبَعُوكَ فَوْقَ الَّذِينَ كَفَرُوا إِلٰى يَوْمِ الْقِيٰمَةِ ۚ ثُمَّ إِلَيَّ مَرْجِعُكُمْ فَأَحْكُمُ بَيْنَكُمْ فِيمَا كُنْتُمْ فِيهِ تَخْتَلِفُونَ ○

**ருகூஃ 6**

*55. "ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன்; இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்; நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன்; மேலும் உம்மைப் பின்பற்றுவோரை கியாம நாள் வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன்; பின்னர் உங்களுடைய திரும்புதல் என்னிடமே இருக்கிறது; (அப்போது) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன்" என்று அல்லாஹ் கூறியதை (நபியே! நினைவு கூர்வீராக)!*

55. எனவே அவரை சிறைபிடித்து சிலுவையில் ஏற்றி கொடூரமான முறையில் கொன்றுவிடுவது என்று எதிர்தரப்பினர் தீர்மானித்தனர். ஆனால் அவர்களுடைய சதி திட்டத்தை அல்லாஹ் ஈசா நபிக்கு வெளிப்படுத்தி விட்டான். அல்லாஹ், "ஈசாவே! அவர்களுடைய சதி திட்டங்களுக்கு நீ பலியாகமாட்டாய். உனக்கு நாம் நிர்ணயித்துள்ள சட்ட விதிமுறைகளின் படி இயற்கையான மரணமே ஏற்படும். உனக்கு உயர்வும் கண்ணியமும் கிடைக்க என் புறத்திலிருந்து வழிகள் பிறக்கும். உனக்கு எதிராக உன்னைப் பற்றி விதவிதமான அவதூறுகளை அவர்கள் பரப்பி வருகிறார்கள். அவற்றை எல்லாம் போக்கி உன்னை ஒரு உயர் நிலைக்கு கொண்டுச் செல்வேன். தற்சமயம் உன்னை ஏற்றுக் கொண்டவர்கள் மிகவும் பலம் குறைவாக இருக்கிறார்கள். உன்னை பின்பற்றுவதில் அவர்கள் எதுவரையில் நிலைத்து இருக்கிறார்களோ அதுவரையில் எதிர் தரப்பினரை விட மேலோங்கியவர்களாக வரச் செய்வேன். இது விஷயமாக ஒருவரையொருவர் தர்க்கித்துக் கொண்டு இருப்பதில் பலனில்லை. அவரவர் செயல்களின் இறுதி முடிவுகள் என்பதெல்லாம் நாம் நிர்ணயித்துள்ள சட்ட விதிமுறைகளின் படியே நடைபெறும். இதில் யாருடைய விருப்பு வெறுப்பு என்ற பேச்சிற்கும் இடமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்." என்று அறிவித்தான்.

56 فَأَمَّا الَّذِينَ كَفَرُوا فَأُعَذِّبُهُمْ عَذَابًا
شَدِيدًا فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَ
مَا لَهُمْ مِنْ نَاصِرِينَ ○

56. எனவே, நிராகரிப்போரை இவ்வுலகிலும், மறுமையிலும் கடினமான வேதனையைக் கொண்டு வேதனை செய்வேன்; அவர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இருக்கமாட்டார்கள்.

56. ஆக யார் அல்லாஹ் வகுத்துத் தந்துள்ள சட்ட ஒழுங்குமுறைகளை ஏற்க மறுத்து தம் மனம் போன போக்கில் வாழ்ந்து வருகிறார்களோ அவர்கள் இறுதியில் இவ்வுலகிலும் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்விலும் கடினமான வேதனைக்கு ஆளாவார்கள். அது சமயம் அவர்களை அதிலிருந்து மீட்டுவோர் எவரும் இருக்கமாட்டார்கள்.

57 وَأَمَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ
فَيُوَفِّيهِمْ أُجُورَهُمْ وَاللَّهُ لَا يُحِبُّ
الظَّالِمِينَ ○

57. ஆனல் எவர் ஈமான் கொண்டு நற்கருமங்களும் செய்கிறார்களோ, அவர்களுக்குரிய நற்கூலிகளை (அல்லாஹ்) முழுமையாகக் கொடுப்பான்; அல்லாஹ் அக்கிரமம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

57. மாறாக தனி நபரோ அல்லது சமுதாயமோ எவர் அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்று ஆக்கப்பூர்வமான ஆற்றல்மிக்க செயல்களை செய்து வருகிறார்களோ அவர்களுக்கு நற்பலன்கள் கிடைத்த வண்ணமிருக்கும். அதில் சிறிதளவும் குறை இருக்காது. ஆக உண்மை என்னவென்றால் உலகில் அநியாயம் அட்டூழியங்களை செய்து வருபவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை.

58. (நபியே!) நாம் உம் மீது ஓதிக் காட்டிய இவை (நற்சான்றுகளைக் கொண்ட) இறை வசனங்களாகவும்; ஞானம் நிரம்பிய நற்செய்தியாகவும் இருக்கின்றன.

58. இவையே ஈசா நபியின் உண்மை வரலாறும் ஞான உபதேசங்களும் ஆகும். இவைகள் வஹீ மூலமாக நபிக்கு இறக்கி அளப்படுகின்றன.

*ஆக ஈசா நபி மற்ற ஏனைய நபிமார்களைப் போன்றே (5:75) இவ்வுலகில் பிறந்து வளர்ந்து இறை வழிகாட்டுதலைப் பெற்று மக்களுக்கு அவற்றை போததித்து தலைசிறந்த சமுதாயமாக உருவாக்கி காட்டிவிட்டு (61:14) காலமாகிவிட்டார்(5:117). எல்லா நபிமார்களும் மனிதர்களே அன்றி வேறில்லை. (21:7) அதே போன்றுதான் இவரும். ஆனால் கிறிஸ்தவர்களைப் பாருங்கள். அவரை தேவகுமாரன் என்றும் (2:116) அவர் தந்தையின்றி பிறந்தவர் என்றும் அவர் ஒரு மலக்கு என்றும் (17:95) கூறி வருகிறார்கள். மனிதர்கள் செய்யும் பாவங்களை மன்னிக்கும் இரட்சகர் என்றும் கூறுகிறார்கள். அவையெல்லாம் கற்பனை கதைகளே. இவர்களின் இந்த கூற்றிற்கு ஈசா நபி பொறுப்பு ஏற்கமாட்டார். (5:117)*

59 إِنَّ مَثَلَ عِيسَىٰ عِنْدَ اللَّهِ كَمَثَلِ
آدَمَ خَلَقَهُ مِنْ تُرَابٍ ثُمَّ قَالَ
لَهُ كُنْ فَيَكُونُ ○

59. அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே; அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப்பின் "குன்" (ஆகுக) எனக் கூறினான்; அவர் (மனிதர்) ஆகிவிட்டார்.

59. ஆக அல்லாஹ்வைப் பொருத்தவரை ஈசா நபியின் பிறப்பு வளர்ப்பு எல்லாம் மற்ற மனிதர்களைப் போன்றதே ஆகும். அவன் நிர்ணயித்த சட்ட விதிமுறைகளின் படியே அவருடைய பிறப்பின் ஆரம்பமும் மண்ணின் சத்திலிருந்து (விந்து) உருவாகி தாயின் வயிற்றில் கருவுற்று (19:22) அதன்பின் பலப்படித்தரங்களை கடந்து (22:5) (30:20) பிறந்தவரே ஆவார். எனவே அவர் கடவுளும் இல்லை கடவுளுடைய குமாரனும் இல்லை.

60 الْحَقُّ مِنْ رَبِّكَ فَلَا تَكُنْ مِنَ
الْمُمْتَرِينَ ○

60. (நபியே! ஈஸாவைப் பற்றி) உம் இறைவனிடமிருந்து வந்ததே உண்மையாகும்; எனவே (இதைக் குறித்து) ஐயப்படுவோரில் நீரும் ஒருவராகிவிடாதீர்.

60. இதுவே ஈசா நபி விஷயமாக இறைவனிடமிருந்து வந்த உண்மை வரலாறாகும். அதுபற்றிய விவாதத்திற்கு இனி அவசியமில்லை.

61 فَمَنْ حَآجَّكَ فِيْهِ مِنْ بَعْدِ مَا
جَآءَكَ مِنَ الْعِلْمِ فَقُلْ تَعَالَوْا
نَدْعُ اَبْنَآءَنَا وَاَبْنَآءَكُمْ وَنِسَآءَنَا
وَنِسَآءَكُمْ وَاَنْفُسَنَا وَاَنْفُسَكُمْ
ثُمَّ نَبْتَهِلْ فَنَجْعَلْ لَّعْنَتَ اللّٰهِ
عَلَى الْكٰذِبِيْنَ ○

*61. (நபியே!) இதுபற்றிய முழு விபரமும் உமக்கு வந்து சேர்ந்த பின்னரும் எவரேனும் ஒருவர் உம்மிடம் இதைக் குறித்து தர்க்கம் செய்தால்: "வாருங்கள்! எங்கள் புதல்வர்களேயும், உங்கள் புதல்வர்களேயும்; எங்கள் பெண்களேயும், உங்கள் பெண்களேயும்; எங்களேயும் உங்களேயும் அழைத்து (ஒன்று திரட்டி வைத்துக் கொண்டு) 'பொய்யர்கள் மீது அல்வாஹ்வின் சாபம் உண்டாகட்டும்' என்று நாம் பிரார்த்திப்போம்!" என நீர் கூறும்.*

62 اِنَّ هٰذَا لَهُوَ الْقَصَصُ الْحَقُّ ۚ وَ
مَا مِنْ اِلٰهٍ اِلَّا اللّٰهُ ۚ وَاِنَّ اللّٰهَ
لَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ○

*62. நிச்சயமாக இதுதான் உண்மையான வரலாறு; அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லே; நிச்சயமாக அல்லாஹ் - அவன் யாவரையும் மிகைத்தோன்; மிக்க ஞானமுடையோன்.*

63 فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ عَلِيْمٌ
بِالْمُفْسِدِيْنَ ○

*63. அவர்கள் புறக்கணித்தால் - திடமாக அல்லாஹ் (இவ்வாறு) குழப்பம் செய்வோரை நன்கறிந்தவனுகவே இருக்கின்றுன்.*

64 قُلْ يٰۤاَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ
سَوَآءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ اَلَّا نَعْبُدَ
اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهٖ شَيْـًٔا وَّ
لَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا اَرْبَابًا مِّنْ
دُوْنِ اللّٰهِ ؕ فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا
اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ ○

**ருகூஉ 7**

*64. (நபியே! அவர்களிடம்) "வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்; (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக்*

61. இந்த அளவிற்கு தெளிவாக அறிவிப்பூர்வமான ஆதாரங்களை அவர்கள் முன் சமர்ப்பித்த பின்பும் அவர்கள் இது விஷயமாக சச்சரவு செய்ய நாடினால், அவர்களிடம், "இது குறித்து இனியும் நான் உங்களிடம் தர்க்கம் செய்ய தாயாராக இல்லை. மேலும் இப்படி ஆதாரமற்ற கற்பனைக் கதைகளை பேசி வருபவர்களிடம் நாம் தொடர்பு வைத்துக் கொள்ளவும் மாட்டோம். எனவே நீங்கள் உங்களை சார்ந்த ஆண்களையும் பெண்களையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொள்ளுங்கள். நாங்களும் இறைக்கொள்கை ஏற்றுக்கொண்ட ஆண்களையும் பெண்களையும் அழைத்துக் கொள்கிறோம். நீங்கள் உங்கள் வழக்கப்படி செயல்பட்டு வாருங்கள். நாமும் நம் செயல் திட்டங்களின்படி செயல்பட்டு வருகிறோம். ஒருவர் மற்றவரின் எந்த விஷயத்திலும் தலையீடு வேண்டாம். (73:10) இறுதியில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதையும் யார் வாழ்வின் சுபிட்சங்களை இழந்து விடுகிறார்கள் என்பதையும் பார்த்துக்கொள்ளலாம்" (6:135) என்று அறிவித்துவிடுங்கள்.

62. இந்த சவாலை பகிரங்கமாகவே அறிவித்துவிடுங்கள். ஏனெனில் பிரபஞ்சத்தின் ஆட்சி அதிகாரம் என்பதெல்லாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. அந்த அதிகாரத்தில் பங்குபெறுவோர் வேறு எவரும் இல்லை. எனவே ஈசாவையோ அல்லது வேறு எவரையோ இறைவனுக்கு இணையாக வைத்து பேசுவதில் நியாயமில்லை. மேலும் இறைவனுடைய செயல்திட்டங்கள் எல்லாவற்றையும் மிகைத்து நிற்கும் தெளிவான ஞானத்தின் அடிப்படையிலானவை ஆகும். இதில் மூடநம்பிக்கைகளுக்கு இடமேது?

63. இந்த பகிரங்க அறிவிப்பிற்குப் பின்பும் அவர்கள் குழப்பங்களை ஏற்படுத்துவதை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பதை அல்லாஹ்வின் ஆட்சியமைப்பு முடிவெடுக்கும்.

64. வேதக்காரர்களான யூதர்களிடமும் கிறிஸ்தவர்களிடமும், "தேவையற்ற சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் நீங்கள் நம்மிடம் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். அவற்றை விட்டுவிட்டு பொதுப்படையான விஷயங்களின் பக்கம் வாருங்கள். அதாவது அந்த கொள்கையின்படி நாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருடைய கட்டளைக்கும் அடிபணிந்து நடக்கமாட்டோம். அல்லாஹ்வை விட்டுவிட்டு வேறு எவரையும் அதிகாரம் செலுத்தும் கடவுளாக எடுத்துக் கொள்ள மாட்டோம்" என்று அறிவிப்பு செய்துவிடுங்கள். இந்த அழைப்பை அவர்கள் ஏற்க மறுத்தால் அவர்கள் போக்கில் விட்டுவிடுங்கள். "நாம் ஏக இறைவனாகிய அல்லாஹ்வின்

*கொள்ள மாட்டோம்" எனக் கூறும்; (முஃமின் களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால்: "நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!" என்று நீங்கள் கூறிவிடுங்கள்.*

65 يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لِمَ تُحَآجُّونَ فِىٓ إِبْرَٰهِيمَ وَمَآ أُنزِلَتِ ٱلتَّوْرَىٰةُ وَٱلْإِنجِيلُ إِلَّا مِنۢ بَعْدِهِۦٓ ۚ أَفَلَا تَعْقِلُونَ ○

*65. வேதத்தையுடையோரே! இப்ராஹீமைப் பற்றி (அவர் யூதரா, கிறிஸ்தவரா என்று வீணாக) ஏன் தர்க்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவருக்குப் பின்னரேயன்றி தவ்ராத்தும், இன்ஜீலும் இறக்கப்படவில்லையே; (இதைக்கூட) நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லையா?*

66 هَٰٓأَنتُمْ هَٰٓؤُلَآءِ حَٰجَجْتُمْ فِيمَا لَكُم بِهِۦ عِلْمٌ فَلِمَ تُحَآجُّونَ فِيمَا لَيْسَ لَكُم بِهِۦ عِلْمٌ ۚ وَٱللَّهُ يَعْلَمُ وَأَنتُمْ لَا تَعْلَمُونَ ○

*66. உங்களுக்குச் சிறிது ஞானம் இருந்த விஷயங்களில் (இதுவரை) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தீர்கள்; (அப்படியிருக்க) உங்களுக்குச் சிறிதுகூட ஞானம் இல்லாத விஷயங்களில் ஏன் விவாதம் செய்ய முற்படுகிறீர்கள்? அல்லாஹ்தான் அறிவான்; நீங்கள் அறியமாட்டீர்கள்.*

67 مَا كَانَ إِبْرَٰهِيمُ يَهُودِيًّا وَلَا نَصْرَانِيًّا وَلَٰكِن كَانَ حَنِيفًا مُّسْلِمًا وَمَا كَانَ مِنَ ٱلْمُشْرِكِينَ ○

*67. இப்ராஹீம் யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை; ஆனால் அவர் (அல்லாஹ்விடம்) முற்றிலும் (சரணடைந்த) நேர்மையான முஸ்லிமாக இருந்தார்; அவர் முஷ்ரிக்குகளில் (இணைவைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை.*

68 إِنَّ أَوْلَى ٱلنَّاسِ بِإِبْرَٰهِيمَ لَلَّذِينَ ٱتَّبَعُوهُ وَهَٰذَا ٱلنَّبِىُّ وَٱلَّذِينَ ءَامَنُوا۟ ۗ وَٱللَّهُ وَلِىُّ ٱلْمُؤْمِنِينَ ○

*68. நிச்சயமாக மனிதர்களில் இப்ராஹீமுக்கு மிகவும் நெருங்கியவர்கள், அவரைப் பின்பற்றியோரும், இந்த நபியும், (அல்லாஹ்வின் மீதும், இந்த நபியின் மீதும்) ஈமான் கொண்டோருமே ஆவார்; மேலும் அல்லாஹ் முஃமின்களின் பாதுகாவலனாக இருக்கின்றான்.*

கட்டளைகளுக்கு மட்டும் அடிபணிந்து ஒட்டுமொத்த சமூக நலனை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுபவர்களாக இருக்கிறோம். அதை நீங்களே கண்கூடாக பார்த்து வருகிறீர்கள்" என்று கூறிவிடுங்கள்.

65. "அது போகட்டும். குறைந்தது வரலாற்று உண்மைகளையாவது நன்கு ஆராய்ந்து அறிந்துக்கொள்கிறீர்களா என்றால் அதுவுமில்லை. தேவையில்லாமல் நீங்கள் இப்ராஹீம் நபி யூதரா கிறிஸ்தவரா என்ற தர்க்கத்தில் மூழ்கி இருக்கிறீர்கள். அவர் எப்படி யூதராகவோ கிறிஸ்தவராகவோ இருக்கமுடியும்? இந்த பிரிவுகளெல்லாம் அவருடைய மறைவிற்குப் பிற்காலத்தில் தோன்றியவை ஆயிற்றே. மேலும் தவ்ராத்தும் இன்ஜீலும் பிற்காலத்தில் இறக்கியருளப்பட்டவையே. இதையும் நீங்கள் அறிந்தவர்களாக இல்லையே.'' என்று அவர்களுக்கு எடுத்துரையுங்கள்.

66. "இப்ராஹீம் நபியைப் பற்றி நீங்கள் தர்க்கம் செய்து வருகிறீர்கள். மேலும் அவர் படைத்த சாதனைகளைப் பற்றி எந்த விஷயமும் உங்களுக்கு தெரியாது. அப்படிப்பட்ட நிலையில் உங்களிடம் எவ்வாறு நாம் விவாதிப்பது? அதைப் பற்றிய முழு ஞானமும் அல்லாஹ்விடம் உள்ளது. உங்களிடம் இல்லை'' என்று சொல்லிவிடுங்கள்.

67. இப்ராஹீம் நபி யூதராகவோ அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை. இவர்களாகவே இப்படிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆனால் அவர் அல்லாஹ்விற்கு முற்றிலும் அடிபணிந்து செயல்பட்ட தலைச் சிறந்த முஸ்லிமாக இருந்தவர். அதாவது உலகில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட அரும்பாடுபட்டவர் ஆவார் (2:125). அவர் ஒருபோதும் மார்க்கத்தில் பிளவுகளை ஏற்படுத்தியதில்லை (30:31–32) மேலும் அல்லாஹ்விற்கு மாற்றமான வழிமுறைகளை பின்பற்றியதும் இல்லை.

68. இப்போது இப்ராஹீம் நபியோடு உங்களுக்கு இருக்கும் தொடர்புதான் என்ன? யார் அவருடைய சொல்லுக்கு மதிப்பு கொடுத்து அவரை பின்பற்றி வந்தார்களோ அவர்கள்தான் அவருக்கு நெருக்கமானவர்களாக இருந்தனர். (14:36) இப்போது அவர் கொண்டு வந்த அதே ஓரிறைக் கொள்கையை இந்த இறைத்தூதர் கொண்டு வந்துள்ளார். எனவே இவரும் அவருக்கு நெருக்கமானவர் ஆகின்றார். ஆக யார் இறைத்தூதர் கொண்டு வந்துள்ள அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்று அதன்படி நடந்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கே அல்லாஹ்வின் உதவியும் நெருக்கமும் கிடைக்கும்.

69 وَدَّتْ طَّآئِفَةٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ
لَوْ يُضِلُّوْنَكُمْؕ وَمَا يُضِلُّوْنَ اِلَّآ
اَنْفُسَهُمْ وَمَا يَشْعُرُوْنَ ○

*69. வேதத்தையுடையோரில் ஒரு சாரார் உங்களை வழி கெடுக்க விரும்புகிறார்கள்; ஆனால் அவர்கள் தங்களையே அன்றி வழி கெடுக்க முடியாது; எனினும், (இதை) அவர்கள் உணர்கிறார்களில்லை.*

69. வேதமுடையோரில் ஒரு சாரார் இறைச் சட்டங்களில் சிலவற்றை தளர்த்தி திருத்தங்களை கொண்டு வர விரும்புகின்றனர். (10:15) அவ்வாறு மாற்றியமைத்துக் கொண்டால் அவர்கள் மார்க்கத்தில் இணைந்துக் கொள்ள தயார் என்கின்றனர் (68:9). அவ்வாறு திருத்தங்களை கொண்டு வருவதில் என்ன பயன் இருக்கப் போகிறது? சத்திய உண்மை என்பது என்றென்றைக்கும் தன்னுடைய இடத்தில் நிலைத்து நிற்கக் கூடியவை. அவை எப்போதும் யாருக்காகவும் விட்டு கொடுக்காது. உன்னை வழி கெடுக்கவே அவர்கள் இப்படிப்பட்ட கோரிக்கைகளை முன் வைக்கின்றனர். இவ்வாறாக அவர்கள் நேர்வழியினை விட்டு வெகுதூரம் சென்று விட்டனர். ஆனால் அதை அவர்கள் புரிந்துக் கொள்வதில்லை.

70 يٰٓاَهْلَ الْكِتٰبِ لِمَ تَكْفُرُوْنَ بِاٰيٰتِ
اللّٰهِ وَاَنْتُمْ تَشْهَدُوْنَ ○

*70. வேதத்தையுடையவர்களே! நீங்கள் தெரிந்து கொண்டே அல்லாஹ்வின் வசனங்களை ஏன் நிராகரிக்கின்றீர்கள்?*

70. வேதமுடையோர்களே! நீங்கள் அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்க மறுப்பதற்கு காரணம் என்ன? இவைகள் யாவும் உங்களுக்கு தெரிந்த உண்மைகள்தானே. அவ்வாறு தெரிந்திருந்தும் நிராகரிப்பதற்குக் காரணம் என்ன?

71 يٰٓاَهْلَ الْكِتٰبِ لِمَ تَلْبِسُوْنَ الْحَقَّ
بِالْبَاطِلِ وَتَكْتُمُوْنَ الْحَقَّ وَ
اَنْتُمْ تَعْلَمُوْنَ ○

*71. வேதத்தையுடையோரே! சத்தியத்தை அசத்தியத்துடன் ஏன் நீங்கள் கலக்குகிறீர்கள்? இன்னும் நீங்கள் அறிந்து கொண்டே ஏன் உண்மையை மறைக்கிறீர்கள்?*

71. நிரூபணம் ஆகக்கூடிய சத்திய உண்மைகளை ஏற்க மறுப்பதோடு மட்டுமின்றி உண்மைக்கு புரம்பான விஷயங்களையும் மார்கத்தில் கலந்து விடுகிறீர்கள். மேலும் இந்த உண்மைகளை மறைக்கவும் செய்கிறீர்கள். இது மாபெரும் குற்றமல்லவா? மேலும் நிரூபணம் ஆகக்கூடிய உண்மைகளில் அவநம்பிகை ஏற்படும்படி செய்துவிடுகிறீர்கள். இவற்றை எல்லாம் தெரிந்துக் கொண்டே இவ்வாறு ஏன் செய்து வருகிறீர்கள்? இதன் உள்நோக்கம் தான் என்ன?

72 وَقَالَتْ طَّآئِفَةٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ
اٰمِنُوْا بِالَّذِيْٓ اُنْزِلَ عَلَى الَّذِيْنَ
اٰمَنُوْا وَجْهَ النَّهَارِ وَاكْفُرُوْٓا
اٰخِرَهٗ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ○

ருகூஃ 8

*72. வேதத்தையுடையோரில் ஒரு சாரார் (தம் இனத்தாரிடம்): "ஈமான் கொண்டோர் மீது இறக்கப்பட்ட (வேதத்)தைக் காலையில் நம்பி, மாலையில் நிராகரித்து விடுங்கள்; இதனால் (ஈமான் கொண்டுள்ள) அவர்களும் ஒரு வேளை (அதை விட்டுத்) திரும்பி விடக்கூடும்" என்று கூறுகின்றனர்.*

72. இறை வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டவர்களே! வேதக்காரர்களின் ஒரு சாராரான மதகுருமார்கள் எப்படியெல்லாம் சூழ்ச்சிகளை செய்து வருகிறார்கள் என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். அவர்கள் தம் சமூகத்தவர்களிடம், "அல்லாஹ்விடமிருந்து இறக்கி அருளப்படுகின்ற வழிகாட்டுதலை காலையில் ஏற்றுக்கொண்டு மூஃமின்களோடு சேர்ந்திருந்து மார்க்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி மாலையில் அதை ஏற்க மறுப்பதாக அறிவித்து விடுங்கள். அதனால் அவர்களில் ஒரு சிலர் உங்களோடு சேர்ந்து விடக்கூடும்.'' என்று சொல்லி வருகிறார்கள். இதுவே அவர்களின் உள்நோக்கமாகும்.

73 وَلَا تُؤْمِنُوٓا إِلَّا لِمَنْ تَبِعَ دِيْنَكُمْ
قُلْ إِنَّ الْهُدٰى هُدَى اللّٰهِ أَنْ
يُّؤْتٰٓى أَحَدٌ مِّثْلَ مَآ أُوْتِيْتُمْ
أَوْ يُحَآجُّوْكُمْ عِنْدَ رَبِّكُمْ قُلْ
إِنَّ الْفَضْلَ بِيَدِ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ
يَّشَآءُ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

*73. "உங்கள் மார்க்கத்தைப் பின்பற்றுவோரைத் தவிர (வேறு எவரையும்) நம்பாதீர்கள்" (என்றும் கூறுகின்றனர். நபியே!) நீர் கூறும்: "நிச்சயமாக நேர்வழியென்பது அல்லாஹ்வின் வழியே ஆகும்; உங்களுக்கு (வேதம்) கொடுக்கப்பட்டதுபோல் இன்னொருவருக்கும் கொடுக்கப்படுவதா அல்லது அவர்கள் உங்கள் இறைவன் முன் உங்களை மிகைத்து விடுவதா?" (என்று அவர்கள் தங்களுக்குள் பேசி கொள்கிறார்கள்.) நிச்சயமாக அருட் கொடையெல்லாம் அல்லாஹ்வின் கையிலேயே உள்ளது; அதை அவன் நாடியோருக்கு வழங்குகின்றான்; அல்லாஹ் விசாலமான (கொடையளிப்பவன்; யாவற்றையும்) நன்கறிபவன் என்று கூறுவீராக.*

73. மேலும் அவர்கள் தம் சமூகத்தவர்களிடம் மத விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கும்படி எச்சரித்து வருகிறார்கள். அவர்களின் வழிமுறைகளை விட்டு வேறு எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்கின்றனர். அவர்களுக்கு கிடைத்திருக்கும் மார்க்கத்தை விட சிறந்த வழிமுறை வேறு யாருக்காவது கிடைக்க முடியுமா என்றும், தாங்கள் வழிபடும் இறைவன் முன் அவர்களுடைய வாதம் மிஞ்சிவிடுமா என்றும் தங்களுக்குள் புகழ்ந்து பேசிக் கொள்கிறார்கள்.

அவர்களிடம் இவ்வாறு கூறிவிடுங்கள் : "யாருடைய வழிமுறைகளை ஏற்று நடப்பது என்ற கேள்வி எழும்போது அது உங்களுடையதா எங்களுடையதா என்பதில்லை. மனித நல வாழ்விற்கு ஏற்ற சரியான வழிமுறை எவை என்பதேயாகும். எனவே எந்த வழிமுறைகள் அல்லாஹ்விடமிருந்து இறக்கியருளப்படுகின்றதோ அதுவே நேரான பாதையாக இருக்க முடியும்."

இறைத்தூதர்கள் தேர்வு பற்றி அவர்களிடம், "இறை வழிகாட்டுதலுக்காக தேர்வு செய்வது என்பதெல்லாம் அல்லாஹ்வின் செயல் திட்டங்கள் சம்பந்தப் பட்டவையாகும். அந்த திட்டத்தின்படி யார் அதற்கு தகுதியானவர்களோ அவரை வழிகாட்டுதலுக்காக அவன் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். நீங்கள் நினைப்பது போல குலம் கோத்திரம் என்ற அடிப்படையில் இந்த தேர்வு நடைபெறுவதில்லை. ஏனெனில் இதற்கெல்லாம் அப்பாற்பட்டது தான் அல்லாஹ்வின் ஞானத்தின் விசாலத்தன்மை. " என்று கூறிவிடுங்கள்.

74 يَخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ وَاللّٰهُ
ذُو الْفَضْلِ الْعَظِيْمِ

*74. அவன் தன் ரஹ்மத்தை (அருளை)க் கொண்டு தான் நாடியோரைச் சொந்தமாக்கிக் கொள்கின்றான்; இன்னும் அல்லாஹ் மகத்தான கிருபையுடையவன்.*

74. இறை வழிகாட்டுதல் பணிக்காக யாரிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்தால் அதை சிறப்பாக செயல்படுத்துவார் என்பது அல்லாஹ்விற்கு நன்கு தெரியும். இதுவே அல்லாஹ்வின் கிருபையும் மகத்துவமும் ஆகும்.

75 وَمِنْ أَهْلِ الْكِتٰبِ مَنْ إِنْ
تَأْمَنْهُ بِقِنْطَارٍ يُّؤَدِّهٖٓ إِلَيْكَ وَ
مِنْهُمْ مَّنْ إِنْ تَأْمَنْهُ بِدِيْنَارٍ
لَّا يُؤَدِّهٖٓ إِلَيْكَ إِلَّا مَا دُمْتَ عَلَيْهِ
قَآئِمًا ذٰلِكَ بِأَنَّهُمْ قَالُوْا لَيْسَ
عَلَيْنَا فِي الْأُمِّيّٖنَ سَبِيْلٌ وَ
يَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ وَ
هُمْ يَعْلَمُوْنَ

*75. (நபியே!) வேதத்தையுடையோரில் சிலர் இருக்கிறார்கள்; அவர்களிடம் நீர் ஒரு (பொற்) குவியலை ஒப்படைத்தாலும், அவர்கள் அதை (ஒரு குறைவும் இல்லாமல் கேட்கும்போது) உம்மிடம் திருப்பிக் கொடுத்து*

75. வேதக்காரர்கள் இறை வழிகாட்டுதலின்படி ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்துவதும் இல்லை, அதன்படி செயல்படுவதும் இல்லை. எனவே அவரவர் விரும்பியவாறு செயல்படலாம் என்ற நிலை உருவாகி விடுகிறது. இதனால் அவர்களுடைய செயல்பாடுகளில் சமச் சீர்நிலை இருப்பதில்லை. சமுதாயத்தில் ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு போற் குவியலையே ஒப்படைத்தாலும் அதை அவர்கள் தவறாக பயன்படுத்த மாட்டார்கள். அதற்கு உரியவர்களிடம் திருப்பி ஒப்படைத்து விடுவார்கள். இன்னும் ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்களை நம்பி ஒரு ரூபாயை ஒப்படைத்தாலும் அதை திருப்பித் தர மிரட்டி கேட்டாலொழிய திருப்பித் கொடுக்க மாட்டார்கள். இதற்கு காரணம் தவறான சமூக அமைப்பே ஆகும்

*விடுவார்கள்; அவர்களில் இன்னும சிலா இருக்கிறூர்கள். அவர்களிடம் ஒரு (காசை) தீனரை ஒப்படைத்தாலும், நீர் அவர்களிடம் தொடர்ந்து நின்று கேட்டாலொழிய, அவர்கள் அதை உமக்குத் திருப்பிக் கொடுக்க மாட்டார்கள்; அதற்குக் காரணம், 'பாமரர்களிடம் (இருந்து நாம் எதைக் கைப்பற்றிக் கொண்டாலும்) நம்மைக் குற்றம் பிடிக்க (அவர்களுக்கு) வழியில்லை' என்று அவர்கள் கூறுவதுதான்; மேலும், அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வின் பேரில் பொய் கூறுகிறூர்கள்.*

76 بَلٰى مَنْ اَوْفٰى بِعَهْدِهٖ وَاتَّقٰى
فَاِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَّقِيْنَ○

*76. அப்படியல்ல! யார் தம் வாக்குறுதியை நிறைவேற்றுகின்றூர்களோ, (அல்லாஹ்வுக்கு) அஞ்சியும் நடக்கின்றூர்களோ (அவர்கள் தாம் குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள்); நிச்சயமாக அல்லாஹ் (தனக்கு) அஞ்சி நடப்போரை நேசிக்கின்றுன்.*

77 اِنَّ الَّذِيْنَ يَشْتَرُوْنَ بِعَهْدِ اللّٰهِ
وَاَيْمَانِهِمْ ثَمَنًا قَلِيْلًا اُولٰٓئِكَ
لَا خَلَاقَ لَهُمْ فِى الْاٰخِرَةِ وَلَا
يُكَلِّمُهُمُ اللّٰهُ وَلَا يَنْظُرُ اِلَيْهِمْ
يَوْمَ الْقِيٰمَةِ وَلَا يُزَكِّيْهِمْ وَلَهُمْ
عَذَابٌ اَلِيْمٌ○

*77. யார் அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதியையும் தம் சத்தியப்பிரமாணங்களையும் அற்ப விலைக்கு விற்கிறூர்களோ, அவர்களுக்கு நிச்சயமாக மறுமையில் யாதொரு நற்பாக்கியமும் இல்லை; அன்றியும், அல்லாஹ் அவர்களுடன் பேச மாட்டான்; இன்னும் இறுதி நாளில் அவன் அவர்களை (கருணையுடன்) பார்க்கவுமாட்டான்; அவர்களைப் (பாவத்தைவிட்டுப்) பரிசுத்தமாக்கவு மாட்டான்; மேலும் அவர்களுக்கு நோவினை ரிக்க வேதனையும் உண்டு.*

78 وَاِنَّ مِنْهُمْ لَفَرِيْقًا يَّلْوٗنَ اَلْسِنَتَهُمْ
بِالْكِتٰبِ لِتَحْسَبُوْهُ مِنَ الْكِتٰبِ
وَمَا هُوَ مِنَ الْكِتٰبِ ۚ وَيَقُوْلُوْنَ
هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ وَمَا هُوَ مِنْ
عِنْدِ اللّٰهِ ۚ وَيَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ
الْكَذِبَ وَهُمْ يَعْلَمُوْنَ○

*78. நிச்சயமாக அவர்களில் ஒரு பிரிவார் இருக்கின்றூர்கள் - அவர்கள் வேதத்தை ஓதும்போதுத் தங்கள் நாவுகளைச் சாய்த்து ஓதுகிறூர்கள் - (அதனுல் உண்டாகும் மாற்றங்களையும்) வேதத்தின் ஒரு பகுதிதானென்று நீங்கள் எண்ணிக் கொள்வதற்காக; ஆனுல் அது வேதத்தில் உள்ளதல்ல; "அது அல்லாஹ*

இதனால் ஏழை எளிய பாமர மக்களிடம் எதை அபகரித்துக் கொண்டாலும் அதை தட்டிக்கேட்க ஆளில்லை என்ற தைரியம் வந்து விடுகிறது. அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட மாட்டாது என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. வேடிக்கை என்னவென்றால் இறைவனே இதற்கு அனுமதி அளித்துள்ளதாகவும் சொல்லி வருகிறார்கள். ஆனால் இது அல்லாஹ்வின் பெயரில் இட்டுக் கட்டப்படும் பொய்யான தகவலாகும். இதுவும் அந்த மத குரமார்களுக்குத் தெரியும். தெரிந்திருந்து என்ன பயன்?

76. உண்மை நிலை என்னவென்றால் அல்லாஹ் நிர்ணயித்துள்ள சட்டங்கள் எல்லோருக்கும் பொதுவானவை ஆகும். அவை குலம் கோத்திரம் என்ற அடிப்படையில் வேறு படுவதில்லை. அவரவர் செய்து வரும் செயல்களுக்கு ஏற்ற பலன்கள் கொடுக்கப்படும். யார் முறைதவறி நடப்பதால் ஏற்படும் சீர்கேடுகளைப் பற்றி அஞ்சி, தம் வாக்குறுதிகளையும் கடமைகளையும் சிறப்பாக செய்து அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பேணி நடக்கிறார்களோ அவர்கள் தண்டனைக்கு ஆளாகமாட்டார்கள். அல்லாஹ்வின் பார்வையில் அவர்கள் அவனுக்கு நேசமானவர்கள் ஆவார்கள்.

77. அல்லாஹ்விடம் செய்துக்கொண்ட வாக்குறுதி பற்றி ஏற்கனவே 2:83-ல் தெளிவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருந்தும் யார் இந்த வாக்குறுதிகளையும் சத்திய பிரமாணங்களையும் அற்ப ஆதாயங்களுக்காக புறந்தள்ளி விடுகிறார்களோ அவர்களுக்கு குறுகியகாலப் பலன்கள் கிடைத்திடலாம். ஆனால் வருங்கால வாழ்வில் அவர்களுக்கு எவ்வித நற்பாக்கியமும் கிடைக்காது. எனவே குறுகிய காலப் பலன்களுக்காக வருங்கால நிரந்தர பலன்களை பாழாக்குவது அறிவுடமையாகாது. ஆக அல்லாஹ்வின் நடைமுறை சட்டங்கள் இப்படிப்பட்டவர்களுக்கு சாதகமாக செயல்படாது. அவர்கள் மீது அக்கறையும் காட்டாது. அதாவது அவர்கள் காலப்போக்கில் ஆற்றல்கள் அனைத்தையும் இழந்து இறுதியில் எதற்கும் பயன்படாதவர்களாக ஆகிவிடுவார்கள். அவர்கள் முன்னேற்றம் அடைய எந்த முகாந்திரமும் இருக்காது. நாளுக்கு நாள் அவர்களுடைய நிலமை மோசமடைந்து அழிவு என்னும் பாழ்குழியில் விழுந்துவிடுவார்கள்.

78. அவர்களில் மதகுருமார்கள் இருக்கிறார்கள். அவர்கள் தம் புறத்திலிருந்து விஷயங்களை தயாரித்து இறை வேதத்தோடு சேர்த்து தம் பேச்சுத் திறமையால் மக்களிடம் அவை அனைத்தும் இறைக் கட்டளைப் போலவே எடுத்துரைக்கிறார்கள். இவ்வாறாக மனித கரங்களால் உருவாக்கப்பட்ட வழிமுறைகள் காலப்போக்கில் இறைச் சட்டங்களாக மாறிவிடுகின்றன. உண்மை அறியாத மக்களும் அவைகளை இறைக் கட்டளைகள் என எண்ணி அவற்றையே கடைபிடித்து வருகிறார்கள். யாராவது இது விஷயமாக மத குருமார்களிடம் கேட்டால் அவையாவும் அல்லாஹ்விடமிருந்து வந்தவையே என்று தைரியமாக பதில் அளித்துவிடுகிறார்கள்.

விடம் இருந்து (வந்தது)" என்றும் அவர்கள் கூறுகிருர்கள்; ஆனல் அது அல்லாஹ்விடமிருந்து (வந்ததும்) அல்ல; இன்னும் அறிந்து கொண்டே அவர்கள் அல்லாஹ்வின்மீது பொய் கூறுகின்ருர்கள்.

ஆனால் உண்மையில் அவை அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளைகளாக இருப்பதில்லை. இந்த உண்மையை அவர்கள் அறிந்துக்கொண்டே அல்லாஹ்வின் பெயரில் இட்டுக்கட்டி சொல்கிறார்கள். அல்லாஹ்வை விட்டுவிட்டு மக்களை தமக்கு அடிபணிய வைக்கவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாகும்.

79 مَا كَانَ لِبَشَرٍ أَنْ يُؤْتِيَهُ اللّٰهُ
الْكِتٰبَ وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ ثُمَّ
يَقُوْلَ لِلنَّاسِ كُوْنُوْا عِبَادًا لِّيْ مِنْ
دُوْنِ اللّٰهِ وَلٰكِنْ كُوْنُوْا رَبّٰنِيّٖنَ
بِمَا كُنْتُمْ تُعَلِّمُوْنَ الْكِتٰبَ وَبِمَا
كُنْتُمْ تَدْرُسُوْنَ ۙ

79. ஒரு மனிதருக்கு அல்லாஹ் வேதத்தையும், ஞானத்தையும், நபிப் பட்டத்தையும் கொடுக்க, பின்னர் அவர் "அல்லாஹ்வை விட்டு எனக்கு அடியார்களாகி விடுங்கள்" என்று (பிற) மனிதர்களிடம் கூற இயலாது; ஆனல் அவர் (பிற மனிதரிடம்) "நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டும், அ(வ்வேதத்)தை நீங்கள் ஓதிக் கொண்டும் இருப்பதனல் ரப்பானீ (இறைவனை வணங்கி அவனையே சார்ந்திருப்போர்)களாகி விடுங்கள்" (என்று தான் சொல்லுவார்).

79. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மட்டுமே அடிபணிந்து செயல்பட வேண்டும் என்பது மார்க்கத்தின் அடிப்படை கொள்கை கோட்பாடாகும். இவர்களுடைய போக்கு இந்த அடிப்படையையே தகர்த்து விடுகிறது. அதாவது அடிபணிய வைக்கும் அதிகாரம் எந்த தனி மனிதனுக்கும் அளிக்கப்படவில்லை. அந்த அதிகாரங்கள் அல்லாஹ்வின் சட்ட திட்டங்களுக்கே உரியதாகும். எந்த மனிதராக இருந்தாலும், ஆட்சிஅதிகாரம், நபித்துவம் ஆகிய அனைத்தும் கிடைத்திருந்தாலும் சரியே, தன் கட்டளைகளுக்கு அடிபணிந்து செயல்பட அவர் மக்களிடம் கூறக்கூடாது. மாறாக அவர் மக்களிடம் இந்த வேதத்தின் மூலமாக கிடைக்கும் வழிகாட்டுதல்படி செயல்படும்படியும் அதன் அடிப்படையில் உருவாக்கப்படும் ஆட்சியமைப்பிற்கு துணை நின்று சிறந்த தொண்டர்களாக விளங்கும்படியுமே அறிவுரை செய்வார்.

*(மக்களே! இப்போது இந்த குர்ஆன் இறக்கியருளப்பட்ட இறைத்தூதரான முஹம்மது நபி(ஸல்) நம்மிடையே இல்லை. ஆனால் அவர் மூலமாக அருளப்பட்ட இறைவேதமான குர்ஆன் நம்மிடையே உள்ளது. இதன் போதனைகளை மட்டும் மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டும். வேறு சித்தாந்தங்களை இத்துடன் இணைத்து சொல்லக்கூடாது.* (6:89)

80 وَلَا يَأْمُرَكُمْ أَنْ تَتَّخِذُوا الْمَلٰٓئِكَةَ
وَالنَّبِيّٖنَ أَرْبَابًا ۗ أَيَأْمُرُكُمْ بِالْكُفْرِ
بَعْدَ إِذْ أَنْتُمْ مُّسْلِمُوْنَ ۟

80. மேலும் அவர், "மலக்குகளையும், நபிமார்களையும் (வணக்கத்திற்குரிய இரட்சகர்களாக) ரப்புகளாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்றும் உங்களுக்குக் கட்டளையிடமாட்டார் - நீங்கள் முஸ்லிம்களாக (அல்லாஹ்விடமே முற்றிலும் சரணடைந்தவர்கள்) ஆய்விட்ட பின்னர் (நீங்கள் அவனை) நிராகரிப்போராகி விடுங்கள் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிடுவாரா?

80. பிரபஞ்ச இயற்கை சக்திகளான மலக்குகளையும் இறைத்தூதர்களையும் கடவுளாக ஆக்கிக்கொள்ள மக்களிடம் இறைத்தூதர் ஒருபோதும் சொல்லமாட்டார். இப்படியாக இறைவனுக்கு கட்டுபட்டு வாழ்வதற்கு பதிலாக மனித வழிபாட்டில் மூழ்கிடவும் கட்டளை இடமாட்டார். இறைவனுடைய கட்டளைகளுக்கு மட்டுமே அடிபணிந்து செயல்படுபவர்களாக நீங்கள் ஆகிவிட்ட பின்னர், இறைவனுக்கு எதிரான கொள்கையை பின்பற்ற அவர் எவ்வாறு கட்டளையிடுவார்?

81 وَإِذْ أَخَذَ اللّٰهُ مِيْثَاقَ النَّبِيّٖنَ لَمَآ
اٰتَيْتُكُمْ مِّنْ كِتٰبٍ وَّحِكْمَةٍ ثُمَّ
جَآءَكُمْ رَسُوْلٌ مُّصَدِّقٌ لِّمَا مَعَكُمْ
لَتُؤْمِنُنَّ بِهٖ وَلَتَنْصُرُنَّهٗ ۗ قَالَ

81. இறை வழிகாட்டுதல்கள் என்பது பதிதான ஒன்றல்ல. காலம் காலமாக வந்த வழிமுறையே ஆகும். (42:13) அந்தந்த காலக் கட்டங்களில் வந்த ஒவ்வொரு இறைத் தூதரும், இறைச் சட்டங்களையும் அதன் நோக்கங்களைப் பற்றியும் மக்களிடம்

ءَاَقْرَرْتُمْ وَاَخَذْتُمْ عَلٰى ذٰلِكُمْ
اِصْرِىْ ؕ قَالُوْٓا اَقْرَرْنَا ؕ قَالَ فَاشْهَدُوْا
وَاَنَا مَعَكُمْ مِّنَ الشّٰهِدِيْنَ ○

(ருகூஉ 9

*81. (நினைவு கூருங்கள்:) நபிமார்(கள் மூலமாக அல்லாஹ் உங்கள் முன்னோர்)களிடம் உறுதிமொழி வாங்கியபோது, "நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ரஸூல் (இறை தூதர்) வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களாக" (எனக் கூறினன்). "நீங்கள் (இதை) உறுதிப்படுத்துகிறீர்களா? என்னுடைய இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா?" என்றும் கேட்டான்; "நாங்கள் (அதனை ஏற்று) உறுதிப்படுத்துகிறோம்" என்று கூறினார்கள்; (அதற்கு அல்லாஹ்) "நீங்கள் சாட்சியாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் (ஒருவனாக) இருக்கிறேன்" என்று கூறினன்.*

எடுத்துரைத்து அதனடிப்படையில் சமுதாய அமைப்பை உருவாக்க பாடுபடுவார். பின் தன் வாழ்நாள் முடியும் தருவாயில் சமுதாயத்தை வழிநடத்திச் செல்ல பொருப்பு ஏற்பவர்களிடம் இந்த மார்க்கத்தை கட்டிக் காப்பாற்றி வரும்படி அறிவுருத்தி அவர்களிடம் உறுதிமொழி வாங்கிக் கொள்வதும் மரபாக இருந்து வந்தது. (33:7) அது மட்டுமின்றி சமுதாயம் வழி தவறிச் சென்றுவிட்ட நிலையில் மீண்டும் இறை வழிகாட்டுதல் கொடுக்கப்பட்டு இந்த மார்க்கத்தை உண்மைப் படுத்தக்கூடிய ஒரு தூதர் வரும்போது, போட்டி பொறாமையோடு எதிர்த்து நிற்காமல் அவரை ஆதரித்து துணை புரியும்படி உறுதிமொழி வாங்கிக் கொள்வதும் வழக்கமாக இருந்து வந்தது.

இந்த உறுதிமொழி எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் அவர்கள் அனைவரையும் அழைத்து, இந்த உறுதி மொழியை கட்டிக் காப்பாற்றுவீர்களா என்று அவர் கேட்பார். அவர்களும் அதை காப்பாற்றுவதாக உறுதிமொழி அளித்து விடுவார்கள். இந்த உறுதிமொழிக்கு அல்லாஹ்வும் சாட்சியாக இருப்பதாக அவர்களிடம் சொல்வார். அதாவது அவர்கள் எந்த அளவிற்கு அதை பேணி நடக்கிறார்கள் என்பதை அல்லாஹ் கண்காணித்து வருவதாக சொல்வார்.

*இதே போன்று முஹம்மது நபி (ஸல்)அவர்களும் அல்லாஹ்வை சாட்சியாக வைத்து சஹாபா பெருமக்களிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டார் . ஹஜ்ஜதுல் விதாவில் முஹம்மது நபி (ஸல்)அவர்கள் தம் சொற்பொழிவின் சமயம் அங்கு கூடி இருந்த அனைத்து சஹாபாக்களிடமும், சாட்சியாளர்களாக இருக்கிறீர்களா என்று கேட்டபோது அவ்வாறே சாட்சியாக இருப்பதாக அனைவரும் பதிலளித்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. ஆக நபித்துவத்தொடர் முற்று பெற்றுவிட்ட நிலையில் (33:40) உலகம் இயங்கிவரும் காலம்வரை அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டுதல்கள் நேரடியாக எந்த மனிதருக்கும் வராது என்றிருக்க (42:51) குர்ஆனின் போதனைகளை மக்களிடம் எடுத்துரைத்து உலக மக்கள் அனைவரும் பயன்பெற பாடுபடுவோம் என்று அல்லாஹ்விடம் உறுதிமொழி அளித்ததற்கிணங்க (3:187) அனைவரும் செயல்படுவோமாக.*

82 فَمَنْ تَوَلّٰى بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ
الْفٰسِقُوْنَ ○

*82. எனவே, இதன் பின்னரும் எவரேனும் புறக்கணித்து விடுவார்களானால் நிச்சயமாக அவர்கள் தீயவர்கள்தாம்.*

82. எனவே இதற்கு பின்னரும் எவரேனும் அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை புறக்கணித்து விடுவார்களானால் நிச்சயமாக அவர்கள் வழிதவறிச் செல்பவர்கள் ஆகிறார்கள்.

83 اَفَغَيْرَ دِيْنِ اللّٰهِ يَبْغُوْنَ وَلَهٗٓ
اَسْلَمَ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ
طَوْعًا وَّكَرْهًا وَّاِلَيْهِ يُرْجَعُوْنَ ○

83. இதுதான் காலம்காலமாக நடந்து வந்த உண்மை விஷயங்களாகும். இறை வழிகாட்டுதல்கள் இப்போது இந்த குர்ஆன் மூலமாக முழுமை பெற்றுவிட்டது (5:3) இதை மட்டுமே பின்பற்றி செயல்படும்படி நபிக்கும் கட்டளை இடப்பட்டுள்ளது (6:106) ஆனால் மக்களோ இதற்கு மாற்றமான வழிமுறைகளை பின்பற்றவே நாடுகின்றனர். நபியும் அவர்களுடைய வழிமுறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். (6:116) அது எப்படி முடியும்?

83. அல்லாஹ்வின் மார்க்கத்தைவிட்டு (வேறு மார்க்கத்தையா) அவர்கள் தேடுகிறார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ள (அனைத்துப் படைப்புகளும்) விரும்பியோ அல்லது வெறுத்தோ அவனுக்கே சரணடைகின்றன; மேலும் (அவை எல்லாம்) அவனிடமே மீண்டும் கொண்டு வரப்படும்.

உண்மை விஷயம் என்னவென்றால் அகிலங்கள் அனைத்திலும் உள்ள படைப்புகள் அல்லாஹ்வின் கட்டளைக்கு உட்பட்டே செயல்படுகின்றன. அங்கே விருப்பு வெறுப்பு என்ற பேச்சிற்கே இடமிருப்பதில்லை. (13:15). அவைகள் முழு விருப்பத்துடனே அடிபணிந்து செயல்படுகின்றன (41:11) அவைகள் அனைத்தும் அவ்வாறே படைக்கப்பட்டுள்ளன. ஆனால் மனிதனின் நிலை மாறுபட்டதாக உள்ளது. அல்லாஹ்வின் வழிகாட்டுதலை மனதார ஏற்று (*தவ்அன்*) ஒரு சிலர் செயல்படுகின்றனர். இவர்களே மு∴மின்கள். இதுவே அல்லாஹ்வின் செயல்திட்டமாகும் (2:256). ஆனால் மற்றவர்கள் இறை நெறிமுறைகளை ஏற்க மறுத்து வாழ்கிறார்கள். அதனால் ஏற்படும் துயர அனுபவங்களால் அவனை இறைச் சட்டங்களின் பக்கமே கொண்டு செல்லும் (84:6). உண்மை இவ்வாறிருக்க இறைக் கட்டளைகளுக்கு மாற்றமாக நான் எவ்வாறு செயல்பட முடியும் என்று நபியே நீர் அவர்களிடம் கேட்பீராக.

84 قُلْ اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ عَلَيْنَا وَ
مَآ اُنْزِلَ عَلٰٓى اِبْرٰهِيْمَ وَاِسْمٰعِيْلَ
وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطِ وَ
مَآ اُوْتِيَ مُوْسٰى وَعِيْسٰى وَالنَّبِيُّوْنَ
مِنْ رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ
مِّنْهُمْ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ ○

84. "அல்லாஹ்வையும், எங்கள் மீது அருளப்பட்ட (வேதத்)தையும், இன்னும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், அவர்களின் சந்ததியர் ஆகியோர் மீது அருள் செய்யப்பட்டவற்றையும், இன்னும், மூஸா, ஈஸா இன்னும் மற்ற நபிமார்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நாங்கள் விசுவாசங் கொள்கிறோம். அவர்களில் எவரொருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டமாட்டோம்; நாங்கள் அவனுக்கே (முற்றிலும் சரணடையும்) முஸ்லிம்கள் ஆவோம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.

84. ஆக இறைச் வழிகாட்டுதலை நாம் முழு மனதுடன் ஏற்று செயல்படுவோம் என்று அவர்களிடம் சொல்லி விடுங்கள். இந்த குர்ஆன் மூலம் இறக்கி அருளப்படுகின்ற வழிகாட்டுதல்கள் ஏற்கனவே பல நபிமார்கள் மூலமாக இறக்கியருளப்பட்ட ஒன்றேயாகும். குறிப்பாக இப்ராஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக், யா∴கூப் மற்றும் அவர்களுடைய சந்ததியர்களுக்கு இறக்கி அருளப்பட்டதும் மேலும் மூசா மற்றும் ஈசா நபிக்கும் இறக்கி அருளப்பட்டதும் ஒரே அடிப்படையை கொண்டவையாகும் (2:136). இதை நாம் மனதார ஏற்றுக் கொள்கிறோம். மேலும் அவர்கள் மூலமாக வந்த மார்க்க கோட்பாடுகளையும், நபிமார்களை பொருத்த வரையில் அவர்களில் எவரையும் பிரித்து நாம் வேற்றுமை பாராட்டுவதில்லை. நாம் அனைவரும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படும் முறை இதுவே ஆகும்.

85 وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا
فَلَنْ يُّقْبَلَ مِنْهُ وَهُوَ فِى الْاٰخِرَةِ
مِنَ الْخٰسِرِيْنَ ○

85. இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது; மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார்.

85. இதனடிப்படையில் உருவாகும் சமூக அமைப்பு மற்றும் ஆட்சிமுறையை இஸ்லாம் என்கிறோம். இதேபோல் உலகிலுள்ள எல்லா தரப்பு மக்களுக்கும் தம் சமூக அமைப்பை உருவாக்கிக் கொள்ள அறிவுருத்தப் படுகிறது. ஆக தனி நபரோ அல்லது சமுதாயமோ இந்த அமைப்பிற்கு மாற்றமாக வேறு எந்த வழிமுறையை பின்பற்ற விரும்பினாலும் அவ்வாறே செய்துக் கொள்ளட்டும். ஆனால் அது சமுதாய சமச்சீர்நிலை ஏற்படுத்தும் இறைவனின்

ஆட்சி அமைப்பிற்கு நிகராக கொண்டு வரவே முடியாது. அப்படி மாற்றமாக செயல் படுபவர்களுக்கு தற்காலிக பலன்கள் மட்டுமே கிடைக்கும். ஆனால் எதிர்காலத்தில் அவர்கள் பெரும் நஷ்டம் அடைந்தோரில் தான் இருப்பார்கள்.

86 كَيْفَ يَهْدِى اللّٰهُ قَوْمًا كَفَرُوْا بَعْدَ
اِيْمَانِهِمْ وَشَهِدُوْٓا اَنَّ الرَّسُوْلَ
حَقٌّ وَّجَآءَهُمُ الْبَيِّنٰتُ ۗ وَاللّٰهُ
لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ ○

(86.) அவர்களிடம் தெளிவான ஆதாரங்கள் வந்து நிச்சயமாக (இந்தத்) தூதர் உண்மையாளர்தான் என்று சாட்சியங் கூறி ஈமான் கொண்ட பிறகு நிராகரித்து விட்டார்களே அந்தக் கூட்டத்திற்கு அல்லாஹ் எப்படி நேர்வழி காட்டுவான்! அல்லாஹ் அநியாயக் கார கூட்டத்திற்கு நேர்வழி காட்ட மாட்டான்.

86. இப்போது இருப்பது அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொண்ட பின் அதற்கு மாற்றமாக செயல் படுபவர்களைப் பற்றியது. அதாவது இறை வழிகாட்டுதல்களின் படி சிறந்த ஆட்சியமைப்பை ஏற்படுத்தி விட்டு அதற்கு எதிராக செயல்படுவோரைப் பற்றியது. மேலும் இறைத்தூதர் மூலமாக நடைமுறை படுத்திய இந்த ஆட்சி அமைப்பில் ஏற்பட்டு வரும் பலன்களை கண்கூடாக பார்த்து தெறிந்துக் கொண்ட பின் அவற்றிற்கு மாற்றமாக செயல்படுவோரைப் பற்றியது. ஆக ஒவ்வொரு விஷயமும் ஆதாரப்பூர்மாக பார்த்துக்கொண்ட பின்னரும் அதற்கு மாற்றமாக ஒரு சமுதாயம் செயல்படுமானால் அது மீண்டும் நேர்வழி எப்படி பெற முடியும்? அது வளமிக்க நாடாக எப்படி உருவாகமுடியும்?

87 اُولٰٓئِكَ جَزَآؤُهُمْ اَنَّ عَلَيْهِمْ لَعْنَةَ
اللّٰهِ وَالْمَلٰٓئِكَةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ ○ۙ

87. நிச்சயமாக அவர்கள் மீது அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் அனைவரின் சாபமும் இருக்கின்றது என்பது தான் அவர்களுக்குரிய கூலியாகும்.

87. நினைவில் கொள்ளுங்கள். இவர்களுடைய இப்படிப்பட்ட போக்குகளினால் அந்த சமுதாயம் அல்லாஹ்வின் அருட்கொடைகளை பெற முடியாமல் இருளிலேயே மூழ்கிவிடும். மேலும் பிரபஞ்சத்திலுள்ள இயற்கை சக்திகளின் மூலமாக கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புகளும் கிடைக்காது. ஆதனால் ஒட்டு மொத்த மக்களின் நிலமையும் மோசமாகி அவர்களும் பரிகாசத்திற்கு ஆளாவார்கள். எனவே அங்கு நடந்துவரும் ஆட்சி அமைப்பை பார்த்து அந்த மக்களும் நிராசை ஆகிவிடுவார்கள்.

88 خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ
الْعَذَابُ وَلَا هُمْ يُنْظَرُوْنَ ○ۙ

88. இ(ந்த சாபத்)திலேயே அவர்கள் என்றென்றும் இருப்பார்கள்; அவர்களுடைய வேதனை இலேசாக்கப்பட மாட்டாது; அவர்களுக்கு (வேதனை) தாமதப்படுத்தப் படவும் மாட்டாது.

88. இந்த இழிவும் துயரமும் அவர்களை தொடரும். இந்த இழி நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லுமே அன்றி குறையாது. அவர்களுடைய செயல்களின் விளைவுகளான இழிவும் வேதனையும் தோற்றத்திற்கு வருவதில் காலத் தாமதமும் இருக்காது. குறித்த நேரத்தில் சரியாக அவர்கள் முன் வந்து நிற்கும்.

89 اِلَّا الَّذِيْنَ تَابُوْا مِنْۢ بَعْدِ ذٰلِكَ
وَاَصْلَحُوْا ۟ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ
رَّحِيْمٌ ○

89. எனினும், இதன்பிறகு (இவர்களில்) எவரேனும் (தம் பாவங்களை உணர்ந்து) மன்னிப்புக் கோரித் தங்களைச் சீர்திருத்திக் கொள்வார்களானல், (மன்னிப்புக் கிடைக்கக் கூடும்;) நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்போனுகவும், அளப்பருங் கருணையுள்ளவனுகவும் இருக்கின்றுன்.

89. இப்படிப் பட்டவர்களுக்கு விமோசனமே கிடைக்காதா? இந்த இழி நிலையிலிருந்தும் துயரங்களிலிருந்தும் மீண்டு வர வழிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் இதுவரையில் கடைபிடித்து வந்த தவறான வாழ்க்கை வழிமுறைகளை விட்டுவிட்டு இறைவனின் வழிகாட்டுதலின் பக்கம் வந்துவிட வேண்டும். அதோடு சமூக வளர்ச்சிக்காக ஆக்கப்பூர்வமான செயற்கரிய செயல்களை செய்து

வரவேண்டும். அப்போதுதான் இவர்களுடைய வாழ்வில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படும்.

90 إِنَّ الَّذِينَ كَفَرُوا بَعْدَ إِيمَانِهِمْ ثُمَّ
ازْدَادُوا كُفْرًا لَّن تُقْبَلَ تَوْبَتُهُمْ
وَأُولَٰئِكَ هُمُ الضَّالُّونَ ○

90. எவர் ஈமான் கொண்ட பின் நிராகரித்து மேலும் (அந்த) குஃப்ரை அதிகமாக்கிக் கொண்டார்களோ நிச்சயமாக அவர்களுடைய தவ்பா - மன்னிப்புக் கோரல் - ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது; அவர்கள் தாம் முற்றிலும் வழி கெட்டவர்கள்.

90. மாறாக எவர்கள் உதட்டளவில் பாவமன்னிப்பை கோரிவிட்டு இறை வழிகாட்டுதல்களுக்கு மாற்றமாக செயல்படுகிறார்களோ அவர்களுடைய வாழ்வு மலராது. மேலும் அவர்களுடைய தீயச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லும். எனவே அந்த சமுதாயம் வளர்ச்சியின் இலக்கை ஒருபோதும் அடைய முடியாது. அதாவது பாவ மன்னிப்ப ஏற்றுக் கொள்ளப்படாததற்கு இதுவே பொருளாகும். இவர்கள் தாம் முற்றிலும் வழி கெட்டவர்கள்.

91 إِنَّ الَّذِينَ كَفَرُوا وَمَاتُوا وَهُمْ
كُفَّارٌ فَلَن يُقْبَلَ مِنْ أَحَدِهِم
مِّلْءُ الْأَرْضِ ذَهَبًا وَلَوِ افْتَدَىٰ
بِهِ ۗ أُولَٰئِكَ لَهُمْ عَذَابٌ أَلِيمٌ وَمَا
لَهُم مِّن نَّاصِرِينَ ○

91. எவர்கள் நிராகரித்து, நிராகரிக்கும் நிலையிலேயே இறந்தும் விட்டார்களோ, அவர்களில் எவனிட.மேனும் பூமிநிறைய தங்கத்தை தன் மீட்சிக்கு ஈடாக கொடுத்தாலும் (அதனை) அவனிடமிருந்து ஒப்புக் கொள்ளப் பட மாட்டாது. அத்தகையோருக்கு நோவினை மிக்க வேதனை உண்டு; இன்னும் அவர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இருக்க மாட்டார்கள்.

91. மேலும் இதையும் தெரிந்துக் கொள்ளுங்கள். மனம் திருந்தி நேரான பாதையின்பால் வரக்கூடிய வாய்ப்பு இந்த உலகில் வாழும் வரைதான் கிடைக்கும்(67:2). திருந்தக் கூடிய இந்த வாய்ப்பினை பயன்படுத்தாமல், நிராகரிப்பின் நிலையிலேயே மரணமடைந்து, மறுமையில் சுவன வாழ்வு கிடைக்க வேண்டும் என்று நீங்கள் ஆயிரம்தான் விரும்பினாலும் ஒருபோதும் கிடைக்காது. உலகிலுள்ள அனைத்து செல்வங்களை கொண்டுவந்து கொட்டினாலும் உங்களுடைய பாவங்களுக்கு ஈடாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அத்தகையவர்கள் நோவினை தரும் வேதனையில் சிக்கிக் கொள்வார்கள். மேலும் அவர்களை அதிலிருந்து மீட்க உதவி செய்வோர் எவரும் இருக்க மாட்டார்கள்.

92 لَن تَنَالُوا الْبِرَّ حَتَّىٰ تُنفِقُوا مِمَّا
تُحِبُّونَ ۚ وَمَا تُنفِقُوا مِن شَيْءٍ
فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ ○

பகுதி 4

ருகூஃ 10.

92. நீங்கள் நேசிக்கும் பொருள்களிலிருந்து தானம் செய்யாதவரை நீங்கள் நன்மை அடைய மாட்டீர்கள்; எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான்

92. ஆக இந்த உலக வாழ்விலும் மறுமையிலும் சுபிட்சமாக வாழ வழி என்ன என்பதே உங்கள் முன் உள்ள கேள்வியாகும். இதை அறிந்துக்கொள்வது ஒன்றும் சிரமமான காரியமல்ல. உங்கள் வாழ்வில் உயர்வும் கண்ணியமும் கிடைக்கவேண்டும் என்றால் உங்களுக்கு பிரியமான செல்வங்களை குவிப்பதையே நோக்கமாக கொண்டு வாழ்வதை விட்டுவிட்டு அவற்றை உங்கள் தேவைக்குபோக (2:219) மிகுதியானவற்றை சமுதாய நலனுக்காக செலவிட முன்வரவேண்டும். இதைத்தவிர வேறு எந்த வழிமுறையை கடைபிடித்தாலும் கிடைக்காது. ஆக நீங்கள் எதை செய்தாலும் அது அல்லாஹ்விற்கு நன்கு தெரியும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

93 كُلُّ الطَّعَامِ كَانَ حِلًّا لِّبَنِي إِسْرَائِيلَ
إِلَّا مَا حَرَّمَ إِسْرَائِيلُ عَلَىٰ
نَفْسِهِ مِن قَبْلِ أَن تُنَزَّلَ التَّوْرَاةُ
قُلْ فَأْتُوا بِالتَّوْرَاةِ فَاتْلُوهَا إِن
كُنتُمْ صَادِقِينَ ○

93. இந்த பொதுவான கொள்கை கோட்பாட்டிற்குப் பின் மீண்டும் பனிஇஸ்ராயில் சமூகத்தவரின் ஆட்சேபனைகளைப் பற்றிய விஷயத்திற்கு வாருங்கள். முன்சென்ற நபிமார்கள் மூலமாக வந்த மார்க்கத்தையே இந்த இறைத்தூதரும் கொண்டு வருகிறார் (2:106) என்ற வாதம் உண்மையானதாக இருந்தால் தவ்ராத்தில் விலக்கு

*93. இஸ்ராயீல் (என்ற யஃகூப்) தவ்ராத் அருளப்படுவதற்கு முன்னுல் தன் மீது ஹராமாக்கிக் கொண்டதைத் தவிர, இஸ்ரவேலர்களுக்கு எல்லாவகையான உணவும் அனுமதிக்கப்பட்டிருந்தது; (நபியே!) நீர் கூறும்: "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் தவ்ராத்தைக் கொண்டுவந்து அதை ஓதிக் காண்பியுங்கள்" என்று.*

அளிக்கப்பட்ட உணவுவகைகளை ஆகுமானது என்று இவர் எவ்வாறு சொல்லாம் என்று ஆட்சேபிக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம், "இப்ராஹிம் அவர்களை நீங்கள் "வழிகாட்டியின் தந்தை" என்று ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லவா? அவர் ஆட்சிகாலத்தில் விலக்கு அளிக்கப்பட்டதையே திருக்குர்ஆனும் விலக்கு அளிக்கிறது (3:95). இது தவிர உணவு விவகாரங்களில் நடந்த உண்மை என்னவென்றால் தவ்ராத் அருளப்படுவதற்கு முன் யாகூப் சந்ததியினர் சிலதை தம்மீது தமக்குத்தாமே விலக்கு அளித்துக் கொண்டிருந்தனர். இவற்றை அல்லாஹ் விலக்கு அளிக்கவில்லை. சில உணவுப் பொருட்களை பனிஇஸ்ரயில் சமூகத்தவர்க்கு தனிப்பட்ட முறையில் தண்டனையாக விலக்கு அளிக்கப்பட்டன. (6:146) (4·160) அவற்றையும் நிரந்தரமாக விலக்கு அளிக்கமுடியாது. இது விஷயமாக தவ்ராத்திலும் குறிப்பு வந்துள்ளது. அதை கொண்டுவந்து ஓதி காண்பியுங்கள். விஷயம் தெளிவாகிவிடும்'' என்று சொல்லிவிடுங்கள்.

94 فَمَنِ افْتَرَىٰ عَلَى اللَّهِ الْكَذِبَ مِنْ بَعْدِ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الظَّالِمُونَ ۝

*94. இதன் பின்னரும் எவரேனும் ஒருவர் அல்லாஹ்வின் மீது பொய்யாகக் கற்பனை செய்து கூறினுல் நிச்சயமாக அவர்கள் அக்கிரமக்காரர்களே ஆவார்கள்.*

94. நினைவில் கொள்ளுங்கள். இந்த அளவிற்கு உண்மைகள் தெளிவான பின்பும் எவரேனும் பொய்யை அல்லாஹ் சொன்னதாக இட்டுக்கட்டி கூறினால் அவர்கள் அக்கிரமக்காரர்கள் பட்டியலில் இணைக்கப்படுவார்கள்.

95 قُلْ صَدَقَ اللَّهُ ۗ فَاتَّبِعُوا مِلَّةَ إِبْرَاهِيمَ حَنِيفًا ۖ وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ ۝

*95. (நபியே!) நீர் கூறும்: "அல்லாஹ் (இவை பற்றி) உண்மையையே கூறுகிறுன்; ஆகவே (முஃமின்களே!) நேர்வழி சென்ற இப்ராஹீமின் மார்க்கத்தையே பின்பற்றுங்கள்; அவர் முஷ்ரிக்குகளில் ஒருவராக இருக்கவில்லே."*

95. அல்லாஹ்விடமிருந்து அருளப்படுகின்ற செய்திகளே முற்றிலும் உண்மையானதாக இருக்கமுடியும் என்பதை அவர்களிடம் கூறிவிடு. தேவையற்ற விவாதங்களை விட்டுவிட்டு நேர்வழியில் சென்ற இப்ராஹிம் நபியின் மார்க்கத்தையே பின்பற்றி செயல்படும்படி அவர்களிடம் சொல்லிவிடு. உலகிலுள்ள அனைத்து வழிமுறைகளையும் புறந்தள்ளிவிட்டு இறைவனின் வழிகாட்டுதலையே அவர் கடைபிடித்து வந்தார். அவர் ஒருபோதும் இறைவனின் கட்டளைகளுக்கு இணையாக வேறு எந்த சட்ட திட்டங்களையும் சுயமாக கொண்டுவரவில்லை என்பதை சொல்லிவிடு.

96 إِنَّ أَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِي بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِلْعَالَمِينَ ۝

96. மேலும் தலைமைச் செயலகமாக ஏற்கனவே பைத்துல் முஃகத்தஸ் இருக்கும் நிலையில் அதற்கு பதிலாக காஃபா என்ற இடத்தை தலமைச் செயலகமாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்ன என்பதும் அவர்களுடைய ஆட்சேபனைகளில் ஒன்றாகும். (2:142) மனித இனத்தின் பரிபாலனம் மற்றும் பாதுகாப்பிற்காக உலகில் முதன்முதலாக நிறுவப்பட்ட செயலகம் மக்கா நகரில் உள்ளதுதான் என்பதை அவர்களிடம் கூறிவிடு. இந்த செயலகத்தை மையமாக கொண்டு உலக மக்கள் அனைவரின் தேவைகள்

*96. (இறை வணக்கத்திற்கென) மனிதர்களுக்காக வைக்கப் பெற்ற முதல் வீடு நிச்சயமாக பக்காவில் (மக்காவில்) உள்ளது தான்; அது பரக்கத்து (பாக்கியம்) மிக்கதாகவும், உலக மக்கள் யாவருக்கும் நேர்வழியாகவும் இருக்கிறது.*

97 فِيهِ ءَايَٰتٌۢ بَيِّنَٰتٌ مَّقَامُ إِبْرَٰهِيمَ ۖ
وَمَن دَخَلَهُۥ كَانَ ءَامِنًا ۗ وَلِلَّهِ
عَلَى ٱلنَّاسِ حِجُّ ٱلْبَيْتِ مَنِ
ٱسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا ۚ وَمَن كَفَرَ
فَإِنَّ ٱللَّهَ غَنِىٌّ عَنِ ٱلْعَٰلَمِينَ ○

*97. அதில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன. (உதாரணமாக, இப்ராஹீம் நின்ற இடம்) மகாமு இப்ராஹீம் இருக்கின்றது. மேலும் எவர் அதில் நுழைகிறாரோ அவர் (அச்சம் தீர்ந்தவராகப்) பாதுகாப்புப் பெறுகிறார்; இன்னும் அதற்கு(ச் செல்வதற்கு)ரிய பாதையில் பயணம் செய்ய சக்தி பெற்றிருக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும். ஆனால், எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்குக் குறையேற்படப் போவதில்லை; ஏனெனில்) - நிச்சயமாக அல்லாஹ் உலகத்தோர் எவர் தேவையும் அற்றவனாக இருக்கின்றான்.*

98 قُلْ يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لِمَ تَكْفُرُونَ
بِـَٔايَٰتِ ٱللَّهِ وَٱللَّهُ شَهِيدٌ عَلَىٰ مَا
تَعْمَلُونَ ○

*98. "வேதத்தையுடையோரே! அல்லாஹ்வின் ஆயத்கள் (என்னும் அத்தாட்சிகளையும், வசனங்களையும்) ஏன் நிராகரிக்கின்றீர்கள்? அல்லாஹ்வே நீங்கள் செய்யும் (அனைத்துச்) செயல்களையும் நோட்டமிட்டுப் பார்ப்பவனாக இருக்கின்றானே!" என்று (நபியே!) நீர் கூறுவீராக.*

99 قُلْ يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لِمَ تَصُدُّونَ
عَن سَبِيلِ ٱللَّهِ مَنْ ءَامَنَ تَبْغُونَهَا
عِوَجًا وَأَنتُمْ شُهَدَآءُ ۗ وَمَا ٱللَّهُ
بِغَٰفِلٍ عَمَّا تَعْمَلُونَ ○

*99. "வேதத்தையுடையோரே! நம்பிக்கை கொண்டவர்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்து ஏன் தடுக்கிறீர்கள்? (அல்லாஹ்வின் ஒப்பந்தத்திற்கு) நீங்களே சாட்சியாக இருந்து கொண்டு அதைக் கோணலாக்க எண்ணுகிறீர்களா? இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவை பற்றிப் பராமுகமாக இல்லை" என்றும் (நபியே!) நீர் கூறுவீராக.*

நிறைவேற ஏற்பாடுகள் செய்யபட்டு இருக்கவேண்டும். இதுவே உலக மக்கள் அனைவருக்கும் நேர்வழிகாட்டும் கலங்கரை விளக்காக திகழ்ந்து இருக்கவேண்டும். ஆனால் அவர்களோ தமக்காக தனி செயலகத்தை பைத்துல் முஃகத்தஸ்ஸில் ஏற்படுத்திக் கொண்டார்கள். எனவே உலக மக்களின் நலனைக் கருதி மீண்டும் அந்த செயலகத்தை புதுப்பிக்கிறோம் என்று சொல்லிவிடு.

97. காபாவில் நடைமுறைப் படுத்திவரும் செயல்திட்டங்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றன. இதே அடிப்படையில் உலக மக்கள் அனைவரின் பாதுகாப்பிற்காக இப்ராஹிம் நபி இந்த செயலகத்தை நிறுவினார். (2:124-125) உலகின் எந்த பகுதியிலிருந்து இங்கே வந்தாலும் அவர்களுடைய பிரச்சனைகள் தீர்ந்து மனநிறைவோடு திரும்பிச் செல்லவேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் கொண்ட செயலகமாக இது திகழவேண்டும் என்பதே இதன் முக்கிய அம்சமாகும். இதன் வாயில் கதவுகள் உலக மக்கள் அனைவருக்காகவும் எப்போதும் திறந்தே இருக்கும். (22:25) யாரெல்லாம் அங்கு சென்றடைவதற்கு தகுதி பெற்று இருக்கிறார்களோ அவர்கள் அங்கு சென்று உலக மக்களின் நன்மைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் எவ்வளவு அழகான செயல் திட்டங்கள் உருவாக்கப் பட்டு செயல் படுத்தப்படுகின்றன என்பதை கண்கூடாக பார்த்து அறிந்துக் கொள்ளலாம். (22:28) ஆனால் ஒரு நிபந்தனை. அதாவது அங்கு வந்து கூடுபவர்கள் தம் சொந்த சித்தாந்தத்தை பரப்பிவிட்டு செல்ல வரக்கூடாது. ஏக இறைவனான அல்லாஹ்வின் கட்டளைக்கு மட்டும் அடிபணிந்து செயல்படுபவர்கள்தான் அங்கு வரவேண்டும்.

98. வேதக்காரர்களே! அல்லாஹ்விடமிருந்து இந்த அளவிற்கு பயனுள்ள சட்டதிட்டங்கள் வந்திருக்கும்போதும் அவற்றை ஏற்று நடக்க மறுப்பதற்கு காரணம் என்ன? மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற அல்லாஹ்வின் நியதிப்படி உங்களுடைய ஒவ்வொரு செயலும் கண்காணிகப் படுகிறது. உங்களுடைய செயல்களின் விளைவுகளிலிருந்து நீங்கள் தப்பிக்க முடியுமா ?

99. சரி. நீங்கள் அல்லாஹ்வின் நலத்திட்டங்களில் இணைந்துக்கொள்ள விருப்பமில்லை என்றால் உங்கள் போக்கில் செயல்படுங்கள். ஆனால் இதற்கு ஆதரவாக செயல்படுபவர்களை வரவிடாமல் தடுத்து வருவது நியாயமா? உலக மக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த நலத் திட்டங்களே மிகச் சரியானவை என்று தெரிந்திருந்தும் குழப்பங்களை ஏற்படுத்தலாமா? நீங்கள் செய்வதெல்லாம் அல்லாஹ்விற்கு தெரியாமல் போயிவிடுமா?

100 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ تُطِيْعُوْا
فَرِيْقًا مِّنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ
يَرُدُّوْكُمْ بَعْدَ اِيْمَانِكُمْ كٰفِرِيْنَ ۝

*100. நம்பிக்கை கொண்டோரே! வேதத்தையுடையோரில் ஒரு பிரிவாரை நீங்கள் பின்பற்றினால், அவர்கள் உங்களை, நீங்கள் ஈமான் கொண்டபின், காஃபிர்களாக திருப்பி விடுவார்கள்.*

100. அல்லாஹ்வின்மீது ஈமான்கொண்ட பின் ஒரு விஷயத்தை மனதில் நன்றாக பதிய வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது வேதக்காரார்கள் ஒரு சிலரின் பேச்சைக் கேட்டு வழிதவறிச் சென்று விடாதபடி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். காரணம் அவர்கள் உங்களை வழி கெடுத்து விடுவார்கள்.

101 وَكَيْفَ تَكْفُرُوْنَ وَاَنْتُمْ تُتْلٰى
عَلَيْكُمْ اٰيٰتُ اللّٰهِ وَفِيْكُمْ رَسُوْلُهٗ ؕ
وَمَنْ يَّعْتَصِمْ بِاللّٰهِ فَقَدْ هُدِىَ
اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ۝

*101. அவனுடைய ரஸூல் உங்களிடையே இருந்து கொண்டு; - அல்லாஹ்வின் ஆயத்கள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கக்கூடிய (நிலையில்) இருந்து கொண்டு, நீங்கள் எவ்வாறு நிராகரிப்பீர்கள்? மேலும், எவர் அல்லாஹ்வை (அவன் மார்க்கத்தை) வலுவாகப் பற்றிக் கொள்கிறாரோ, அவர் நிச்சயமாக நேர்வழியில் செலுத்தப்பட்டுவிட்டார்.*

101. அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொண்டவர்களே ! நீங்கள் மார்க்கத்தில் நிலைத்திருந்து செயல்படுவதற்கு அடிப்படையான இரண்டு விஷயங்கள் அவசியாகின்றன. ஒன்று எந்த மாற்றமும் செய்யப்படாத தன் அசல் வடிவில் இறை வழிகாட்டுதல்கள் ***(Original Text)*** இருக்கவேண்டும். இரண்டாவதாக அதன்படி வழி நடத்திச் செல்லக் கூடிய அமைப்பும் தேவை. அதாவது அல்லாஹ்வின் வேதமான சாஸனமும் அதை நடைமுறைப் படுத்திய இறைத்தூதரின் சட்ட உட்பிரிவுகளும் தேவை. **(Constitution and the By-laws governing the State)** இவை இரண்டும் உங்கள் முன் இருக்கும் நிலையில் நீங்கள் அவற்றிற்கு மாற்றமாக செயல்படுவது நியாயமா?

நினைவில் கொள்ளுங்கள். ஒரு சமுதாயம் எதுவரையில் இறை வேதத்தையும் **(Celestial guidelines)** இறைத்தூதர் ஏற்படுத்திய ஆட்சியமைப்பு ரீதியான சட்ட உட்பிரிவுகளையும் **(By-laws governing the State based on Celestial guidelines)** திடமாக பின்பற்றுமோ அதுவரையில் அது நிச்சயமாக நேர்வழியில் இருக்கும். இவ்விரண்டில் எதை விட்டுவிட்டாலும் அது வழி தவறி சென்றுவிடும்.

102 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ
حَقَّ تُقٰتِهٖ وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ
مُّسْلِمُوْنَ ۝

ருகூஉ 11

*102. நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரிக்காதீர்கள்.*

102. இறை வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டவர்களே ! உங்களுக்காக அளிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலை பின்பற்ற வேண்டிய முறையில் பின்பற்றுங்கள். ஏதோ உணர்ச்சி வேகத்தில் சில காலம் செயல்பட்டுவிட்டு பின் அதை விட்டுவிடாதீர்கள் (3:144). அவ்வாறு புறந்தள்ளிவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை எண்ணி அஞ்சிக் கொள்ளுங்கள். எனவே இறை வழிகாட்டுதலை உங்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்றி செயல்படுங்கள். நீங்கள் மரணித்தாலும் இறைக் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டவர்களாக மரணியுங்கள்.

103 وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا
تَفَرَّقُوْا وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ
اِذْ كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ
فَاَصْبَحْتُمْ بِنِعْمَتِهٖۤ اِخْوَانًا ۚ وَكُنْتُمْ
عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَاَنْقَذَكُمْ
مِّنْهَا ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ
اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ۝

103. நினைவில் கொள்ளுங்கள். இஸ்லாமிய மார்க்கம் என்பது தனி நபருக்கோ அல்லது குறிப்பிட்ட வகுப்பினருக்கோ வகுத்து கொடுக்கப்பட்ட கொள்கை அல்ல. உலக மக்கள் அனைவரும் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிமுறையாகும். எனவே நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். ஆக இதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக அமைப்பின்

*103. இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள்; நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் - உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து; அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்; இன்னும், நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள்; அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான் - நீங்கள் நேர் வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை - வசனங்களை உங்களுக்குத் தெளிவாக்குகின்றான்.*

செயல்திட்டங்களை செயல்படுத்த துணை நில்லுங்கள். இதில் கருத்து வேறுபாடோ பிரிவினையோ ஒருபோதும் இருக்கக்கூடாது. ஏனெனில் பிரிவினைவாதம் அல்லாஹ்விற்கு இணைவைப்பதற்கு சமமானதாகும் (30:31&32) மேலும் பிரிவினை மற்றும் உட்பூசல்களால் பிரச்சனைகள்தாம் ஏற்படும் (6:65). இதற்குமுன் நீங்கள் இருந்த நிலமையைப் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பல பிரிவினர்களாக பிரிந்து, ஒருவருக்கொருவர் குரோத மனப் பான்மையுடன் பகைவர்களாகவே இருந்தீர்கள். உங்களால் ஒற்றுமையாக வாழ முடியவில்லை. அதனால் நிம்மதியற்ற நிலையில் இருந்தீர்கள். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அல்லாஹ்வின் வழிகாட்டுதல்கள் இறக்கி அருளப்பட்டன. அதன்பின்தான் உங்களிடையே இருந்து வந்த விரோதமும் குரோதமும் நீங்கி சகோதரத்துவமும் பாசபிணைப்பும் ஏற்பட்டது. (8:63) இப்படியாக அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பின்பற்றியதால் உங்களிடையே சமூக ஒற்றுமை ஏற்பட்டிருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள். இதற்குமுன் நரகத்தின் விழும்பில் இருந்தீர்கள். உங்களை அதிலிருந்து அல்லாஹ்வின் வழிகாட்டுதல்தானே காப்பாற்றியது !

இவ்வாறாக நீங்கள் தெளிவு பெரும்பொருட்டு அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களும் அவற்றின் நற்பலன்களும் எடுத்துரைக்கப்படுகின்றன.

104 وَلْتَكُنْ مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ
اِلَى الْخَيْرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ ؕ وَاُولٰٓـئِكَ
هُمُ الْمُفْلِحُوْنَ ○

*104. மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும், நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும் - இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர்.*

104. எனவே அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்று அதன்படி ஒருங்கிணைந்து கூட்டாக செயல்படுங்கள். (3:109) (6:143). அது மட்டுமின்றி இந்த கூட்டமைப்பின் நோக்கம் திருக்குர்ஆனின் வழிகாட்டுதலின் பால் உலக மக்கள் அனைவரையும் அழைப்பு விடுவதே ஆகும் (22:78). திருக்குர்ஆன் எவற்றை செய்ய அறிவுறுத்துகிறதோ அதன்படி செயலாற்றுங்கள். எவற்றை செய்யக்கூடாது என்று அது அறிவிக்கின்றதோ அவற்றிலிருந்து விலகி இருங்கள். இவ்வாறு செயல்படுவதைக் கொண்டே வாழ்வின் உயர் இலட்சியத்தை அடைந்து வெற்றி பெறுவார்கள். (23:1)

105 وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ تَفَرَّقُوْا
وَاخْتَلَفُوْا مِنْۢ بَعْدِ مَا جَآءَهُمُ
الْبَيِّنٰتُ ؕ وَاُولٰٓـئِكَ لَهُمْ عَذَابٌ
عَظِيْمٌ ○

*105. (இறைவனின்) தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் வந்த பின்னரும், யார் தங்களுக்குள் பிரிவையுண்டுபண்ணிக் கொண்டு, மாறுபாடாகி விட்டார்களோ, அவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள்; அத்தகையோருக்குக் கடுமையான வேதனை உண்டு.*

105. நினைவில் கொள்ளுங்கள். தெளிவான ஆதாரப்பூர்வமான இறை வழிகாட்டுதல்கள் வந்த பின்னரும், யார் தங்களுக்குள் பிரிவினை ஏற்படுத்திக்கொண்டு மாறுபட்டுவிட்டார்களோ (6:160) (30:32) (42:13) அவர்கள் போன்று நீங்களும் பிரிந்து விடாதீர்கள். இது பெருங் குற்றமாகும். எனவே இப்படி செய்பவர்கள் கடினமான தண்டனைக்கு ஆளாவார்கள். அதாவது சமுதாயங்களின் இழிவும் அழிவும் இந்த பிரிவினையைக் கொண்டே ஏற்படுகின்றன.

106 يَوْمَ تَبْيَضُّ وُجُوهٌ وَتَسْوَدُّ وُجُوهٌ ۚ فَأَمَّا الَّذِينَ اسْوَدَّتْ وُجُوهُهُمْ أَكَفَرْتُمْ بَعْدَ إِيمَانِكُمْ فَذُوقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُونَ ○

*106. அந்த (மறுமை) நாளில் சில முகங்கள் (மகிழ்ச்சியினால் பிரகாசமாய்) வெண்மையாகவும், சில முகங்கள் (துக்கத்தால்) கருத்தும் இருக்கும்; கருத்த முகங்களுடையோரைப் பார்த்து: "நீங்கள் ஈமான் கொண்டபின் (நிராகரித்து) காஃபிர்களாகி விட்டீர்களா? (அப்படியானால்,) நீங்கள் நிராகரித்ததற்காக வேதனையைச் சுவையுங்கள்" (என்று கூறப்படும்).*

106. மேலே சொன்ன இருவகையினரும் உங்கள்முன் இருக்கின்றனர். அதாவது ஒருவகையினர் இறை வழிகாட்டுதலின் படி அழகிய சமூகஅமைப்பு ஏற்படுத்தி ஒருங்கிணைந்து செயல்பட்டு ஒருமித்த கருத்துக்கொண்ட சமூகத்தவராக வாழ்பவர்கள். இவர்கள் வாழ்வில் முன்னேற்றமும் சந்தோஷங்களும் ஏற்பட்டு முகமலர்ச்சியுடன் காணப்படுவார்கள்.

மற்றொரு வகையினர் தங்களுக்குள் பிரிவினை ஏற்படுத்திக் கொண்டு மனம்போன போக்கில் வாழ்பவர்கள். ஆக எந்த சமுதாயம் அல்லாஹ்விடமிருந்து நேர்வழி பெற்றபின் அதன்படி செயல்படாமல் தவறான வழியில் சென்றுவிடுமோ அது நிச்சயமாக அழிவையும் துயரங்களையும் சந்திக்கும். அந்த வேதனையிலிருந்து தப்பிக்க வேறு எந்த வழிமுறையும் அவர்களுக்கு கிடைக்காது. இவர்களின் முகங்கள் அச்சத்தாலும் கவலையாலும் கருத்துபோய் இருக்கும். நேர்வழி பெற்றபின் அல்லாஹ்வின் அறிவுரைக்கு எதிராக செயல்பட்டு பிரிவினை ஏற்படுத்திக் கொள்பவர்களுக்கு இதுவே தண்டனையாகும்.

107 وَأَمَّا الَّذِينَ ابْيَضَّتْ وُجُوهُهُمْ فَفِي رَحْمَةِ اللَّهِ ۖ هُمْ فِيهَا خَالِدُونَ ○

*107. எவருடைய முகங்கள் (மகிழ்ச்சியினால் பிரகாசமாய்) வெண்மையாக இருக்கின்றனவோ அவர்கள் அல்லாஹ்வின் ரஹ்மத்தில் இருப்பார்கள்; அவர்கள் என்றென்றும் அ(ந்த ரஹ்மத்)திலேயே தங்கி விடுவார்கள்.*

107. ஆக எந்த சமுதாயம் இறை வழிகாட்டுதலின் படி ஒளிமயமான வாழ்வை அமைத்துக் கொள்கிறதோ அது அல்லாஹ்வின் அருட்கொடைகள் பெற்றுக் கொண்டே இருக்கும். (8:53) இப்படியாக அவர்களுக்கு நிரந்தர சந்தோஷங்கள் கிடைத்து வரும்.

108 تِلْكَ آيَاتُ اللَّهِ نَتْلُوهَا عَلَيْكَ بِالْحَقِّ ۗ وَمَا اللَّهُ يُرِيدُ ظُلْمًا لِلْعَالَمِينَ ○

*108. (நபியே!) இவை(யெல்லாம்) அல்லாஹ்வின் வசனங்கள் - இவற்றை உண்மையாகவே உமக்கு நாம் ஓதிக்காண்பிக்கின்றோம்; மேலும் அல்லாஹ் உலகத்தோருக்கு அநீதி இழைக்க நாட மாட்டான்.*

108. இதுவே சமுதாயங்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியின் உண்மையான காரண காரணிகளாகும். நீங்கள் தெளிவுபெரும் பொருட்டு இவை உங்களுக்கு தெளிவாக்கப்படுகின்றன. ஆக அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி ஆக்கப்பூர்வமான நற்செயல்களை செய்து சிறப்பாக வாழ்வதும் தீயச்செயல்களில் ஈடுபட்டு அழிவை தேடிக்கொள்வதும் உங்கள் விருப்பத்திற்கு விடப்பட்டுவிட்டது(18:29). அல்லாஹ்வின் புறத்திலிருந்து உலகில் எவ்வித அநீதியும் ஒருபோதும் நிகழாது. (4:40).

109 وَلِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ ۚ وَإِلَى اللَّهِ تُرْجَعُ الْأُمُورُ ○

*109. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் - அனைத்தும் - அல்லாஹ்வுக்கே உரியவை; எல்லாக் காரியங்களும் அல்லாஹ்விடமே மீட்டுக் கொண்டு வரப் படும்.*

109. இந்த சட்டதிட்டங்கள் எல்லாம் உங்களுக்கு மட்டும் அல்லாஹ் நிர்ணயித்துள்ளதாக எண்ணாதீர்கள். அகிலங்களில் உள்ள எல்லா படைப்புகளுக்கும் சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அதன்படி செயல்பட கட்டளை இடப்பட்டுள்ளன. ஆக வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவை யாவும் அல்லாஹ்வின் திட்டங்களை நிறைவேற்றவே செயல்பட்டு வருகின்றன. எனவே உங்களுடைய ஒவ்வொரு செயலும் அல்லாஹ் நிர்ணயித்துள்ள சட்ட விதிமுறைகளின் படியே அதனதன் விளைவுகள் என்ற இலக்கை நோக்கியே செல்கின்றன.

110 كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ
تَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَتَنْهَوْنَ عَنِ
الْمُنْكَرِ وَتُؤْمِنُوْنَ بِاللّٰهِ ؕ وَلَوْ اٰمَنَ
اَهْلُ الْكِتٰبِ لَكَانَ خَيْرًا لَّهُمْ ؕ
مِنْهُمُ الْمُؤْمِنُوْنَ وَاَكْثَرُهُمُ
الْفٰسِقُوْنَ ○

ருகூஃ 12

*110. மனிதர்களுக்காக தோற்றுவிக்கப் பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்; வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் - அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர்; எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்.*

110. பிரபஞ்சத்தில் இறைக் கட்டளைகள் நடைமுறையில் உள்ளன. இதில் மற்ற படைப்புகள் தாமாகவே அல்லாஹ்வின் கட்டளைப்படி செயல்பட்டு வருகின்றன. ஆனால் மனித உலகில் இறைக்கட்டளைகள் நடைமுறைப் படுத்த ஜமாத் என்னும் கூட்டமைப்பு அவசியாகிறது. இதற்காகவே மு∴மின்களான உங்களை தோற்றுவித்து உங்களிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. இதைக் கொண்டு உலக மக்கள் அனைவரின் நலனைக் கருதி சிறப்பாக செயல்பட வேண்டும். எனவே இந்த குர்ஆன் எவை நன்மையானவை என்று கோடிட்டு காட்டுகிறதோ அவற்றை செய்து வருவதும் எவை தவறானவை என்று குறிப்பிடுகின்றதோ அவற்றை தடுத்துக்கொள்வதும் உங்களுடைய மிக முக்கிய கடமைகளாகும். அப்போதுதான் உலக மக்கள் அனைவரையும் நன்மையின் பக்கம் ஏவுவதற்கும் தீமையை விட்டு தடுப்பதற்கும் தகுதியுடையவர்களாக ஆவீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டதற்கு உண்மையான அர்த்தமாகும்.

உங்களுடன் வாழும் வேதக்காரர்களும் அல்லாஹ்வின் இந்த வழிகாட்டுதலை ஏற்று அதன்படி நடந்துவந்தால் நேர்வழி பெற்று அவர்களுக்கும் நன்மைகள் கிடைத்திருக்கும். ஆனால் அவர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் இதை ஏற்க மறுப்பதோடு எதிர்த்தும் வருகின்றனர்.

111 لَنْ يَّضُرُّوْكُمْ اِلَّاۤ اَذًى ؕ وَاِنْ
يُّقَاتِلُوْكُمْ يُوَلُّوْكُمُ الْاَدْبَارَ ثُمَّ
لَا يُنْصَرُوْنَ ○

*111. இத்தகையோர் உங்களுக்குச் சிறிது தொல்லைகளுண்டுபண்ணுவதைத் தவிர (பெரும்) தீங்கு எதுவும் செய்துவிட முடியாது. அவர்கள் உங்களிடம் போரிட வந்தாலும், அவர்கள் உங்களுக்குப் புறங்காட்டி (ஓடி) விடுவார்கள்; இன்னும் அவர்கள் (எவராலும்) உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.*

111. இத்தகையோருடைய எதிர்ப்பைக் கொண்டு உங்களுக்கு சிறதளவு தொல்லைகள்தான் ஏற்படுமே தவிர பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்த முடியாது. ஒருவேளை அவர்கள் போரிடவே வந்தாலும் புறமுதுகுகாட்டி ஓடிவிடுவார்கள். மேலும் இப்படிப்பட்டவர்களுக்கு பொது மக்களின் ஆதரவும் கிடைக்காது.

112 ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ اَيْنَ مَا
ثُقِفُوْۤا اِلَّا بِحَبْلٍ مِّنَ اللّٰهِ وَحَبْلٍ
مِّنَ النَّاسِ وَبَآءُوْ بِغَضَبٍ مِّنَ
اللّٰهِ وَضُرِبَتْ عَلَيْهِمُ الْمَسْكَنَةُ ؕ
ذٰلِكَ بِاَنَّهُمْ كَانُوْا يَكْفُرُوْنَ بِاٰيٰتِ
اللّٰهِ وَيَقْتُلُوْنَ الْاَنْۢبِيَآءَ بِغَيْرِ
حَقٍّ ؕ ذٰلِكَ بِمَا عَصَوْا وَّكَانُوْا
يَعْتَدُوْنَ ۙ○

*112. அவர்கள், எங்கிருப்பினும் அவர்கள் மீது இழிவு விதிக்கப்பட்டுள்ளது; அல்லாஹ்விடமிருந்தும், மனிதர்களிடமிருந்தும் அவர்களுக்கு(ப் பாதுகாவலான) ஒப்பந்தமின்றி (அவர்கள் தப்ப முடியாது); அல்லாஹ்வின் கோபத்தில் அவர்கள் சிக்கிக் கொண்டார்கள்; ஏழ்மையும் அவர்கள் மீது விதிக்கப்பட்டுவிட்டது; இது ஏனென்றால்,*

112. இவர்களின் வாழ்க்கைத் தரம் எந்த அளவிற்கு மோசமாக உள்ளது என்பதை நீங்களே கண்கூடாக பாருங்கள். மேலும் அவர்கள் உலகில் வாழ எங்கும் இடம் கிடைக்காது. ஏதோ இவர்கள் வேதக்காரர்கள் என்ற அடிப்படையிலோ அல்லது மற்ற சமூகத்தவர்களிடம் சமரச ஒப்பந்தத்தின் பேரிலோ தஞ்சமடையலாம். மற்றபடி அல்லாஹ் நிர்ணயித்துள்ள நியதிப்படி வேதனைகள் அவர்களை சதா பின்தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இதில் சிக்கி ஏழ்மையும் அவலமும் ஏற்பட்டு தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு காரணம் அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்க மறுத்ததோடு அதற்கு எதிராகவும் செயல்பட்டு வந்ததுதான். இவர்களுடைய தகாத செயல்கள் எந்த அளவிற்கு இருந்தது

*நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் ஆயத் களை நிராகரித்தார்கள்; அநியாயமாக நபி மார்களைக் கொலை செய்தார்கள்; இன்னும் அவர்கள் பாவம் செய்துகொண்டும் (இறை யாணையை) மீறி நடந்து கொண்டும் இருந் தது தான் (காரணமாகும்).*

என்றால் இறைத் தூதர்களையே கொலை செய்யும் அளவிற்கு துணிந்துவிட்டார்கள்.

113 لَيْسُوا سَوَآءً ۗ مِنْ أَهْلِ الْكِتٰبِ أُمَّةٌ قَآئِمَةٌ يَتْلُوْنَ اٰيٰتِ اللّٰهِ اٰنَآءَ الَّيْلِ وَهُمْ يَسْجُدُوْنَ ○

*113. (எனினும் வேதத்தையுடையோராகிய) அவர்கள் (எல்லோரும்) சமமல்லர்; வேதத் தையுடையோரில் ஒரு சமுதாயத்தினர் (நேர் மைக்காக) நிற்கிறார்கள்; இரவு நேரங்களில் அல்லாஹ்வின் வசனங்களை ஓதுகிறார்கள். இன்னும் (இறைவனுக்கு சிரம்பணிந்து) ஸஜ்தா செய்கிறார்கள்.*

113. நேர்வழி பெறும் தகுதி வேதக்காரர்கள் அனைவரிடமும் இல்லை என்பதல்ல இதற்கு அர்த்தம். இந்த குர்ஆனின் போதனைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அவர்களில் ஒரு சிலரிடம் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு சான்றாக அவர்களில் ஒரு சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களும் (3:199) இருக்கிறார்கள். அவர்கள் அல்லும் பகலும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை நினைவு கூர்ந்து சிரம் பணிந்து அதன்படி முழுஅளவில் செயல்படுகிறார்கள்.

114 يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَيَأْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَيُسَارِعُوْنَ فِى الْخَيْرٰتِ ۗ وَأُولٰٓئِكَ مِنَ الصّٰلِحِيْنَ ○

*114. அவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள் கிறார்கள்; நல்லதை(ச் செய்ய) ஏவுகிறார்கள், தீமையை விட்டும் விலக்குகிறார்கள். மேலும், நன்மை செய்வதற்கு விரைகின்றனர்; இவர் களே ஸாலிஹான (நல்லடியார்களில்) நின்று முள்ளவர்கள்.*

114. இதுவே அல்லாஹ்வின் மீதும், மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற ஆகிரத்தையும் ஏற்றுக் கொண்டதற்கும் உண்மையான அர்த்தமாகும். குர்ஆன் எவை நன்மையான செயல்கள் என்று கோடிட்டு காட்டுகிறதோ அதன் பக்கம் மக்களை அழைக்கிறார்கள். மேலும் எவை தீமையானவை என்று அறிவிக்கின்றதோ அவற்றை விட்டும் தடுத்து வருகிறார்கள். உலக மக்களின் நன்மையை கருதி செயல்படுவதில் முந்திக் கொள்கிறார்கள். இவர்களே ஆற்றல்மிக்க நற்செயல்களை செய்யும் ஸாலிஹீன்கள் எனப்படுவர்.

115 وَمَا يَفْعَلُوْا مِنْ خَيْرٍ فَلَنْ يُّكْفَرُوْهُ ۗ وَاللّٰهُ عَلِيْمٌ ۢ بِالْمُتَّقِيْنَ ○

*115. இவர்கள் செய்யும் எந்த நன்மையும் (நற்கூலி கொடுக்கப்படாமல்) புறக்கணிக்கப் படாது; அன்றியும், அல்லாஹ் பயபக்தி யுடையோரை நன்கறிகிறான்.*

115. இவ்வாறாக நன்மையான செயல்களை செய்பவர்கள் முஸ்லிம் அல்லாத வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அல்லாஹ் நிர்ணயித்துள்ள மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்ற சட்டம் ஒருபோதும் புறக்கணிக்காது. இஸ்லாமிய மார்க்கத்தின் கதவுகள் அனைவருக்கும் திறந்தே இருக்கும். அதன் வட்டரையில் இருந்துக் கொண்டு யாரெல்லாம் நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இறைவனிடத்தில் நற்கூலி நிச்சயம் உண்டு (2:62). ஆக யார் பயபக்கதியுடன் செயல்படுகிறார்கள் என்பது அல்லாஹ்விற்கு நன்கு தெரியும்.(49:13)

116 إِنَّ الَّذِيْنَ كَفَرُوْا لَنْ تُغْنِيَ عَنْهُمْ أَمْوَالُهُمْ وَلَآ أَوْلَادُهُمْ مِّنَ اللّٰهِ شَيْـًٔا ۗ وَأُولٰٓئِكَ أَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ○

116. இதற்கு மாறாக யார் அல்லாஹ்வின் அறிவுரைகளை ஏற்க மறுத்து வேறு வழிமுறைகளை கடைபிடிக்கிறார்களோ அவர்கள் சுயநலவாதிகளாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய சுயநலம் தன் குடும்பம் தன் பிள்ளைகள் அவர்களுக்காக சொத்து செல்வத்தை குவித்துக் கொள்ளுதல் என்ற அளவில்தான் இருக்கும். பொது நலத்தில் அக்கரையே இருக்காது. எனவே

*116. நிச்சயமாக எவர் நிராகரிக்கின்றுர்களோ, அவர்களைவிட்டு அவர்களுடைய செல்வமும், அவர்களுடைய சந்ததியும், அல்வாஹ்விடமிருந்து எந்த ஒரு பொருளையும் காப்பாற்ற முடியாது - அவர்கள் நரக நெருப்பிற்குரியவர்கள்; அவர்கள் அதில் என்றென்றுமிருப்பார்கள்.*

இது இறைவனுடைய கொள்கை கோட்பாட்டிற்கு எதிரானதாகும். ஆக இவர்களுடைய இந்த தவறான போக்கு இறுதியில் அழிவின் பக்கம் இழுத்துச் சென்றுவிடுகிறது. இப்படியாக அவர்களுடைய தற்காலிக உலக வாழ்வும் வருங்கால நிரந்தர (மறுமை) வாழ்வும் துயர் மிக்கதாய் ஆகிவிடுகிறது. அதிலிருந்து மீள்வதற்கு எந்த முகாந்திரமும் இருப்பதில்லை.

117 مَثَلُ مَا يُنْفِقُوْنَ فِىْ هٰذِهِ الْحَيٰوةِ
الدُّنْيَا كَمَثَلِ رِيْحٍ فِيْهَا صِرٌّ اَصَابَتْ
حَرْثَ قَوْمٍ ظَلَمُوْٓا اَنْفُسَهُمْ فَاَهْلَكَتْهُ ؕ
وَمَا ظَلَمَهُمُ اللّٰهُ وَلٰكِنْ اَنْفُسَهُمْ
يَظْلِمُوْنَ ○

*117. இவ்வுலக வாழ்வில் அவர்கள் செலவழிப்பது ஒரு காற்றுக்கு ஒப்பாகும்; அது (மிகவும்) குளிர்ந்து (பனிப்புயலாக மாறி) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்ட அக்கூட்டத்தாரின் (வயல்களிலுள்ள) விளைச்சலில்பட்டு அதை அழித்துவிடுகிறது — அவர்களுக்கு அல்லாஹ் கொடுமை செய்யவில்லை; அவர்கள் தமக்குத் தாமே கொடுமையிழைத்துக் கொள்கிருர்கள்.*

117. இப்படிப்பட்டவர்களை ஒரு உதாரணத்தைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம். குளிர் காற்று சந்தோஷத்தை தருகிறது. அதுவே பனிப் புயலாகமாறி விளைச்சலை தாக்கும்போது பெரும் வேதனை ஏற்படுகிறது. ஏனெனில் அந்த புயலிலிருந்து காப்பாற்ற எந்த வழிமுறையும் இருப்பதில்லை. அதுபோலத்தான் இவர்களுடைய செயல்பாடுகளும் இருக்கின்றன. எந்த ஒரு முன் யோசனையுமின்றி சொகுசு வாழ்விற்காக செல்வத்தை குவித்து செலவழிக்கிறார்கள். அதனால் தற்காலிக சந்தோஷம் கிடைக்கிறது. அதுவே சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு கலகம் கலவரம் என புயலாக மாறி அழிவு ஏற்படுத்தி விடுகிறது. அந்த அழிவிலிருந்து காப்பாற்ற எந்த வழிமுறையும் இருப்பதில்லை. ஆக இப்படியாக இவர்கள் தம்மைத்தாமே தீங்கிழைத்துக் கொள்கிறார்களே அன்றி அல்லாஹ் ஒருபோதும் தீங்கிழைப்பதில்லை. (4:40).

118 يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْا
بِطَانَةً مِّنْ دُوْنِكُمْ لَا يَاْلُوْنَكُمْ
خَبَالًا ؕ وَدُّوْا مَا عَنِتُّمْ ۚ قَدْ بَدَتِ
الْبَغْضَآءُ مِنْ اَفْوَاهِهِمْ ۚۖ وَمَا تُخْفِىْ
صُدُوْرُهُمْ اَكْبَرُ ؕ قَدْ بَيَّنَّا لَكُمُ
الْاٰيٰتِ اِنْ كُنْتُمْ تَعْقِلُوْنَ ○

*118. நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் உங்(கள் மார்க்கத்தைச் சார்ந்தோர்)களைத் தவிர (வேறெவரையும்) உங்களின் அந்தரங்கக் கூட்டாளிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்; ஏனெனில் (பிறர்) உங்களுக்குத் தீமை செய்வதில் சிறிதும் குறைவு செய்ய மாட்டார்கள்; நீங்கள் வருந்துவதை அவர்கள் விரும்புவார்கள்; அவர்கள் உங்கள் மேல் கொண்டுள்ள கடுமையான வெறுப்பு அவர்கள் வாய்களிலிருந்தே வெளியாகிவிட்டது; அவர்கள் நெஞ்சங்கள் மறைத்து வைத்திருப்பதோ இன்னும் அதிகமாகும்; நிச்சயமாக நாம் (இது பற்றிய) ஆயத்களைத் தெளிவுபடுத்திவிட்டோம்; நீங்கள் உணர்வுடையோரானுல் (இதை அறிந்து கொள்வீர்கள்).*

118. ஆக இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. உலக மக்களுள் மொழி, நாடு, இனம், வர்ணம் என்ற அடிப்படையில் பிரிவினை ஏற்படுவதில்லை. ஆனால் கொள்கை கோட்பாடுகள் என்ற அடிப்படையில்தான் பிரிவினையும் பகைமையும் ஏற்படுகிறது. ஆக இறை வழிகாட்டுதலை ஏற்று செயல்படுபவர்கள் ஒரு பக்கம். அவற்றை ஏற்க மறுத்து எதிராக செயல்படும் கூட்டத்தார் மறுபக்கம். இவை இரண்டும் ஒன்றாக இணைந்து செயல்பட முடியாது.

இறை வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டவர்களே! நீங்கள் மார்க்கத்தை சார்ந்தவர்களைத் தவிர எதிர் தரப்பினரிடம் ஆட்சியமைப்பின் அந்தரங்க விவகாரத்தில் கூட்டாளிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். ஏனெனில் அவர்கள் உங்கள் அனைவரையும் தீங்கிழைப்பதில் மிகவும் தீவரமாக இருக்கிறார்கள். ஏதாவது ஒருவகையில் உங்களை சிக்கவைத்து நீங்கள் தவிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். உங்கள் மேலுள்ள கடுமையான வெறுப்பு அவர்களுடைய பேச்சிலிருந்தே கொஞ்சம் வெளிப்படுகிறது. அவர்களுடைய உள்ளங்களில் மறைத்து வைத்திருப்பது

இதைவிட பன்மடங்கு அதிகமாகும். நீங்கள் அனைவரும் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்பதற்காக இதைப்பற்றிய உண்மை விஷயங்கள் இறைவன் புறத்திலிருந்து தெளிவாக்கப்படுகிறது.

119 هَٰٓأَنتُمْ أُوْلَآءِ تُحِبُّونَهُمْ وَلَا يُحِبُّونَكُمْ
وَتُؤْمِنُونَ بِٱلْكِتَٰبِ كُلِّهِۦ وَإِذَا
لَقُوكُمْ قَالُوٓا۟ ءَامَنَّا وَإِذَا خَلَوْا۟
عَضُّوا۟ عَلَيْكُمُ ٱلْأَنَامِلَ مِنَ ٱلْغَيْظِ
قُلْ مُوتُوا۟ بِغَيْظِكُمْ إِنَّ ٱللَّهَ عَلِيمٌۢ
بِذَاتِ ٱلصُّدُورِ ۝

*119. (முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்: நீங்கள் இவர்களை நேசிப்போராய் இருக்கின்றீர்கள் - ஆனால் அவர்கள் உங்களை நேசிக்கவில்லை; நீங்கள் வேதத்தை முழுமையாக நம்புகிறீர்கள்; ஆனால் அவர்களோ உங்களைச் சந்திக்கும் போது: "நாங்களும் நம்புகிறோம்" என்று கூறுகிறார்கள்; எனினும் அவர்கள் (உங்களை விட்டு விலகித்) தனியாக இருக்கும் போது, அவர்கள் உங்கள் மேலுள்ள ஆத்திரத்தினால் (தம்) விரல் நுனிகளைக் கடித்துக்கொள்கிறார்கள். (நபியே!) நீர் கூறும். "நீங்கள் உங்கள் ஆத்திரத்தில் இறந்து விடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் (உங்கள்) உள்ளங்களில் உள்ளவற்றை அறிந்தவன்.*

119. இறை வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டவர்களே! நீங்கள் எதிர்தரப்பினரை நண்பர்கள் என எண்ணிக் கொள்ளாதீர்கள். நீங்கள் அவர்களிடம் தோழர்களாக இருக்க விரும்பினாலும் அவர்கள் உங்களை நண்பர்களாக கருதவில்லை. நீங்கள் இறைவன் புறத்திலிருந்து இறக்கியருளப்பட்ட வழிகாட்டுதலை முழுமையாக மனதார ஏற்றுக் கொள்கிறீர்கள். ஆனால் அவர்களோ உங்களை சந்திக்கும்போது இறைவேதத்தை ஏற்றுக் கொள்வதாக உதட்டளவில் கூறுகிறார்கள். எனினும் அவர்கள் தனித்திருக்கும்போது உங்கள் மேலுள்ள ஆத்திரத்தினால் தம் விரல் நகங்களை கடித்துக் கொள்கிறார்கள். அந்த அளவிற்கு உங்கள் மேல் அவர்களுக்கு வெறுப்புணர்வு உண்டு. நீங்கள் அவர்களிடம், "நீங்கள் ஆத்திரக் கடுப்பிலேயே சாக வேண்டியதுதான்." என்று சொல்லிவிடுங்கள். ஆக அவரவர் உள்ளங்களில் மறைத்து வைத்திருப்பதும் வெளிப்படுத்துவதும் அல்லாஹ்விற்கு நன்கு தெரியும். ஏனெனில் உங்கள் தோழமை உணர்வால் ஆபத்தில் சிக்கிக்கொள்ளாக் கூடாது என்பதற்காக இவை தெளிவாக்கப்படுகிறது.

120 إِن تَمْسَسْكُمْ حَسَنَةٌ تَسُؤْهُمْ وَ
إِن تُصِبْكُمْ سَيِّئَةٌ يَفْرَحُوا۟ بِهَا ۖ
وَإِن تَصْبِرُوا۟ وَتَتَّقُوا۟ لَا يَضُرُّكُمْ
كَيْدُهُمْ شَيْـًٔا ۗ إِنَّ ٱللَّهَ بِمَا يَعْمَلُونَ
مُحِيطٌ ۝

*120. ஏதாவது ஒரு நன்மை உங்களுக்கு ஏற்பட்டால் அது அவர்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது, உங்களுக்கு ஏதாவது தீமை ஏற்பட்டால், அதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். நீங்கள் பொறுமையுடனும், பயபக்தியுடனுமிருந்தால் அவர்களுடைய சூழ்ச்சி உங்களுக்கு எந்தத் தீமையும் செய்யாது. நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை (எல்லாம்) சூழ்ந்து அறிகிறவன்.*

120. அவர்களுடைய மனோநிலை என்னவாக இருக்கிறது என்று உங்களுக்கு தெரியுமா? உங்களுக்கு ஏதாவது ஒரு நன்மை ஏற்படுமானால் அவர்களுக்கு மனவருத்தம் ஏற்படுகிறது. உங்களுக்கு ஏதாவது ஒரு துன்பம் ஏற்பட்டால் அதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். நீங்கள் இதை பொருட் படுத்தாதீர்கள். நீங்கள் அவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிடுங்கள். நீங்கள் உங்கள் செயல் திட்டங்களில் நிலைத்திருந்து தொடர் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். இறை வழிகாட்டுதல்களை சிறப்பாக பேணி நடந்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய சதி திட்டங்களும் சூழ்ச்சிகளும் நீடிக்காது. உங்களை அதிக அளவில் தீங்கிழைக்கவும் முடியாது. அல்லாஹ் நிர்ணயித்துள்ள மனித செயல்களுக்கான விளைவுகள் என்ற சட்டம் அனைவரையும் சூழ்ந்தவையாக உள்ளது. எனவே அதன்படியே எல்லாமே நிகழும். அவர்கள் விரும்புவதுபோல் எப்போதும் தீமை செய்துக்கொண்டே இருக்கமுடியாது.

121 وَإِذْ غَدَوْتَ مِنْ أَهْلِكَ تُبَوِّئُ
ٱلْمُؤْمِنِينَ مَقَٰعِدَ لِلْقِتَالِ ۗ وَٱللَّهُ
سَمِيعٌ عَلِيمٌ ۝

ருகூஉ 13

*121. (நபியே! நினைவு கூர்வீராக:) நீர் விடியற்காலையில் உம் குடும்பத்தாரை விட்டுச் சென்று முஃமின்களைப் போருக்காக (உஹது களத்தில் அவரவர்) இடத்தில் நிறுத்தினீர்; அல்லாஹ் எல்லாவற்றையும் செவியுறுவோனாகவும் நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.*

121. ஒரு செயல்திட்டத்தில் நிலைத்திருந்து முயலுவதால் ஏற்படும் அனுகூலங்கள் என்ன? நிலைகுலைந்து போவதால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை உஹது போர்களத்தில் நடந்த நிகழ்ச்சியே ஒரு சான்றாக எடுத்துக்கொள்ளலாம். இறைத்தூதரே! நீ போருக்காக முஃமின்களை தயார்படுத்த விடியற்காலையில் உன் வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்றீர். ஆனால் அல்லாஹ்விற்கோ அவர்கள் மனதில் இருந்த விஷயங்கள் யாவும்

நன்கு தெரியும்.

122 إِذْ هَمَّتْ طَّآئِفَتَانِ مِنكُمْ أَن تَفْشَلَا
وَاللَّهُ وَلِيُّهُمَا ۗ وَعَلَى اللَّهِ فَلْيَتَوَكَّلِ
الْمُؤْمِنُونَ ○

*122. (அந்தப் போரில்) உங்களில் இரண்டு பிரிவினர் தைரியம் இழந்து (ஓடி விடலாமா) என்று எண்ணியபோது - அல்லாஹ் அவ்விரு பிரிவாருக்கும் (உதவி செய்து) காப்போனாக இருந்தான்; ஆகவே முஃமின்கள் அல்லாஹ்விடத்திலேயே முழு நம்பிக்கை வைக்கவேண்டும்.*

122. அந்த போர்களத்தில் மோதல்கள் கடுமையாக இருந்தன. உங்கள் படைப்பிரிவில் இருபிரிவினர் தைரியத்தை இழந்து பயத்தில் ஓடிவிட எண்ணினர். ஆயினும் அல்லாஹ்வின் சட்டப்படி இறைத்தூதர் செய்திருந்த போர் ஏற்பாடுகள் அவர்களுக்கு பக்கபலமாக இருந்தன. அல்லாஹ்வின் இந்த ஏற்பாடுகளின் மீது மூஃமின்களுக்கு பரிபூரண நம்பிக்கை இருந்தும், அவர்கள் மனதில் ஏற்பட்ட பயத்தினால் போர் முனையில் செய்யப்பட்ட முன்னேற்பாடுகள் தடுமாறிப் போய் விட்டது. அதனால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை நீங்கள் கண்கூடாக பார்த்துக் கொண்டீர்கள். (3:152 & 153)

123 وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ ۖ
فَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تَشْكُرُونَ ○

*123. "பத்று" போரில் நீங்கள் மிகவும சக்தி குறைந்தவர்களாக இருந்த போது, அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தான்; ஆகவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.*

123. இதற்கு முன் நடந்த போரில் எதிர் அணியினரைவிட எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருந்தீர்கள். இருந்தும் அல்லாஹ்வின் உதவி எவ்வாறு வந்தது என்பதை பார்த்துக் கொண்டீர்கள் (8:9–10). அல்லாஹ்வின் வழிகாட்டுதலை முழுமையாக பேணி, தம் கடமையில் உறுதியாக நிலைத்து நின்று செயல்பட்டதால் அந்த போரில் வெற்றிபெற முடிந்தது. ஆக அல்லாஹ்வின் வழிகாட்டுதலை திடமாக பின்பற்றுவதைக் கொண்டே முழு அளவில் வெற்றிபெற முடியும்.

124 إِذْ تَقُولُ لِلْمُؤْمِنِينَ أَلَن يَكْفِيَكُمْ
أَن يُمِدَّكُمْ رَبُّكُم بِثَلَٰثَةِ أَلْفٍ مِّنَ
الْمَلَٰٓئِكَةِ مُنزَلِينَ ○

*124. (நபியே!) முஃமின்களிடம் நீர் கூறினீர்: "உங்கள் ரப்பு (வானிலிருந்து) இறக்கப்பட்ட மூவாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு உதவி செய்வது உங்களுக்குப் போதாதா?" என்று.*

124. இறைத்தூதரே! உஹது போர்சமயம் போர்வீரர்களான மூஃமின்களிடம், "உங்கள் இறைவன் மூவாயிரம் மலக்குகளைக் கொண்டு உதவிசெய்யப் போவது உங்களுக்கு போதாதா? (எதிரணியரின் படையினர் மூவாயிரம் பேர் இருந்தனர்)" என்று தைரியமூட்டினீர். இந்த செய்தி அவர்கள் மனதில் மனவலிமையும் தைரியத்தையும் கொடுத்தது. அதனால் துணிச்சலுடன் போரிட்டு வெற்றி பெற்றீர்கள் (3:126), (8:10), (8:12) & (41:30)

125 بَلَىٰٓ ۚ إِن تَصْبِرُوا وَتَتَّقُوا وَيَأْتُوكُم
مِّن فَوْرِهِمْ هَٰذَا يُمْدِدْكُمْ رَبُّكُم
بِخَمْسَةِ أَلْفٍ مِّنَ الْمَلَٰٓئِكَةِ مُسَوِّمِينَ ○

*125. ஆம்! நீங்கள் அல்லாஹ்வுக்குப பயந்து பொறுமையுடனிருந்தால், பகைவர்கள் உங்கள் மேல் வேகமாக வந்து பாய்ந்த போதிலும், உங்கள் இறைவன் போர்க்குறிகள் கொண்ட ஐயாயிரம் வானவர்களைக் கொண்டும் உங்களுக்கு உதவி புரிவான்.*

125. எதிரணியினர் முழு பலத்துடன் தாக்கினாலும் நீங்கள் நிலைத்து நின்று அதற்கு தக்கப்படி பதிலடி கொடுங்கள். எதிரிகளின் படையினர் ஐயாயிரமாக இருந்தாலும் தைரியம் இழக்காதீர்கள். நீங்கள் எப்போதும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பின்பற்றி உங்கள் செயல்திட்டத்தில் உறுதிப்பாடு மற்றும் தொடர் முயற்சியுடன் செயல்பட்டால் போர்குறிகள் கொண்ட ஐயாயிரம் மலக்குகளின் உதவி அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும்.

126 وَمَا جَعَلَهُ اللَّهُ إِلَّا بُشْرَىٰ لَكُمْ وَ
لِتَطْمَئِنَّ قُلُوبُكُم بِهِ ۗ وَمَا النَّصْرُ
إِلَّا مِنْ عِندِ اللَّهِ الْعَزِيزِ الْحَكِيمِ ○

126. மலக்குகளின் உதவி பக்கபலமாக இருக்கிறது என்ற படைத் தளபதியான நபியின் பேச்சு, போர்வீரர்களின் மனதில் உற்சாகத்தையும் தைரியத்தையும் ஊட்டத்தான் என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள்.

*126. உங்கள் இருதயங்கள் ( அவ்வுதவியில் நின்றும்) நிம்மதியடையவும், ஒரு நல்ல செய்தியாகவுமே தவிர (வேறெதற்குமாக) அல்லாஹ் அதைச் செய்யவில்லை; அல்லாஹ் விடத்திலல்லாமல் வேறு உதவியில்லை; அவன் மிக்க வல்லமையுடையவன்; மிகுந்த ஞான முடையவன்.*

ஏனெனில், அவர்கள் அநியாயத்தை ஒழித்துகட்டி தர்மமான அமைப்பு நிலைநாட்ட ஒரு மாபெரும் இலட்சியத்துடன் போரிடுகிறார்கள். அல்லாஹ்வும் அல்லாஹ்வின் இயற்கை சக்திகளான மலக்குகளும் துணை நிற்பது அவர்கள் சரியான பாதையில் இருப்பதை காட்டுகின்றன. எனவே வெற்றி பெறுவோம் என்ற மனஉறுதியுடன் முழுவேகத்தில் போரிட இந்த ஊக்கப் பேச்சு துணைபுரியும். உண்மையிலேயே உதவி கிடைப்பது என்பது அல்லாஹ்வின் கட்டளைப்படி இறைத்தூதர் உருவாக்கியுள்ள போர் ஏற்பாடுகள் மூலமாகத்தான் கிடைக்கும் (9:41) (21:80). பிரபஞ்சம் அனைத்தையும் தம் கட்டுப்பாட்டில் வைத்து ஆட்சி செய்யும் வல்லமையுடைய அல்லாஹ்வின் புறத்திலிருந்து நிலை நிறுத்தப்பட்ட சட்டமாகும்.ள

127 لِيَقْطَعَ طَرَفًا مِّنَ الَّذِيْنَ كَفَرُوْٓا
اَوْ يَكْبِتَهُمْ فَيَنْقَلِبُوْا خَآئِبِيْنَ ○

*127. (அல்லாஹ்வுடைய உதவியின் நோக்கம்) நிராகரிப்போரில் ஒரு பகுதியினரை அழிப்பதற்கு, அல்லது அவர்கள் சிறுமைப் பட்டுத் தோல்வியடைந்தோராய்த் திரும்பிச் செல்வதற்காகவுமேயாகும்.*

127. அல்லாஹ்வின் ஆட்சியமைப்பிற்கு எதிராக செயல்படும் கூட்டத்தாரின் ஒரு முக்கியஸ்தர்களை அழித்து அவர்களின் பலத்தை குன்றிவிடச் செய்வதே போரின் நோக்கமாகும். எதிரிகள் அனைவரையும் கொன்று குவிப்பது அல்ல போரின் நோக்கம். அவர்கள் செய்து வரும் தீயச் செயல்களால் சமுதாயத்தில் பாதிப்பு ஏற்படுவதால் இவ்வாறு அவர்கள் தோல்வியுற்று எஞ்சியவர்கள் சிறுமைப்பட்டு தம் நிலைக்கு திரும்பிச் சென்றுவிட நேரிடும்.

128 لَيْسَ لَكَ مِنَ الْاَمْرِ شَيْءٌ اَوْ
يَتُوْبَ عَلَيْهِمْ اَوْ يُعَذِّبَهُمْ فَاِنَّهُمْ
ظٰلِمُوْنَ ○

*128. (நபியே!) உமக்கு இவ்விஷயத்தில் ஒரு சம்பந்தமும் இல்லை. அவன் அவர்களை, மன்னித்து விடலாம்; அல்லது அவர்களை வேதனைப்படுத்தலாம் - நிச்சயமாக அவர்கள் கொடியோராக இருப்பதின் காரணமாக.*

128. மேலும் எதிரணியில் போரிட்டவர்களில் யார் அத்துமீறி நடந்துக் கொண்டவர்கள் யார் தண்டனைக்கு உரியவர்கள் என்ற விஷயத்தில் நபியே நீரோ அல்லது உம்மை சார்ந்தவரோ தனிப்பட்ட முறையில் தீர்மானிக்க முடியாது. இது சட்ட ஒழுங்கு பிரச்சனையாகும். எனவே போர் கைதிகளை தண்டிப்பதும் விட்டுவிடுவதும் இறை ஆட்சியமைப்பின் நீதிமன்றம் பார்த்துக் கொள்ளும்.

129 وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي
الْاَرْضِ يَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَيُعَذِّبُ
مَنْ يَّشَآءُ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ○

*129. வானங்களிலும், பூமியிலும் உள்ளவையெல்லாம் அல்லாஹ்வுக்கே உரியவை. தான் நாடியவர்களை அவன் மன்னிக்கின்றான்; இன்னும் தான் நாடியவர்களை வேதனைப்படுத்தவும் செய்கின்றான் - அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன், பெருங்கருணையாளன்.*

129. அதாவது வானங்களிலும் பூமியிலுமுள்ள எல்லா படைப்புகளும் அல்லாஹ்வின் செயல்திட்டத்தை நிறைவேற்றவே சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அதே போல் மானிட உலகிலும் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் சட்ட விதிமுறைகளே செயல்படுகின்றன. ஆக மனித சமுதாயம் ஆபத்துகளை நீக்கி பாதுகாப்பான வாழ்வை தேடிக்கொள்வதும், சீரழிந்து அழிவுகளை சந்திப்பதும் அந்த சட்ட விதிமுறைகளின்படியே நிகழ்ந்து வரும் (8:42). எனவே ஒரு சமுதயாம் தம் வாழ்க்கை வழிமுறைகளை எவ்வாறு அமைத்துக் கொள்கிறதோ அவ்வாறே அல்லாஹ்வின் செயல்முறைகளும் அந்த சமுதாயத்தில் அமையும். சமுதாயங்கள் பாதுகாப்புடன் முன்னேறுவதற்கும், சீரழிந்து போவதற்கும் அல்லாஹ்வின் சட்ட விதிமுறைகளில் அடங்கியுள்ளன. இதில் தனிப்பட்ட முறையில் சமுதாயத்தை பழிவாங்குதல் என்ற பேச்சிற்கே இடம் இருப்பதில்லை.

130 يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَأْكُلُوا الرِّبَا أَضْعَافًا مُّضَاعَفَةً ۖ وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

ருகூஉ 14

*130.* ஈமான் கொண்டோரே! இரட்டித்துக் கொண்டே அதிகரித்த நிலையில் வட்டி (வாங்கித்) தின்னாதீர்கள்; இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி (இதைத் தவிர்த்துக் கொண்டால்) வெற்றியடைவீர்கள்.

130. ஆக போர் முனையில் வெற்றி பெற்றுவிட்டதால் தங்கள் பணிகள் முடிந்துவிட்டன என்று எண்ணி விடாதீர்கள். இறை வழிகாட்டுதலின்படி அமையவிருக்கும் சமூகஅமைப்பிற்கு தடையாக செயல்படும் சக்தியை முறியடிக்க எடுத்த ஒரு நடவடிக்கைதான் இந்த போர். உங்களுடைய சமூக அமைப்பு மிகச்சரியான செயல் திட்டத்தின் கீழ் அமைக்க வேண்டும் என்பதே இஸ்லாமிய மார்க்கத்தின் முக்கிய நோக்கமாகும். (2:217–2.9) பல விஷயங்கள் இதற்கு தடையாக நிற்கின்றன. அதில் ஒன்று வட்டியும் ஆகும்.

ஏற்கனவே 2: 275–279 –ல் விளக்கியபடி ஒரு நாட்டின் பொருளாதார சீரழிவிற்கு முக்கிய காரணியாக இந்த வட்டி விளங்குகிறது. வட்டி என்பது எந்த உழைப்புமின்றி வெறும் பண முதலீட்டைக் கொண்டு இலாபத்தை சம்பாதிக்கும் முறையாகும். அதாவது இதைக்கொண்டு செல்வத்தை இரட்டிப்பாக்கிக் கொள்ளுதல். தனி நபர் பொருத்த வரையில் இது லாபகரமாக இருக்கலாம். ஆனால் நாட்டின் பொருளாதார (National Wealth) வளர்ச்சி என்று பார்க்கும் போது அதில் தேக்கம் ஏற்பட்டு வளர்ச்சி தடைபட்டு விடுகிறது (30:39). எனவே மூஃமின்களே! இதை கருத்தில்கொண்டு அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பேணி நடந்துக் கொள்ளுங்கள். வட்டியை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

131 وَاتَّقُوا النَّارَ الَّتِي أُعِدَّتْ لِلْكَافِرِينَ

*131.* தவிர (நரக) நெருப்பிற்கு அஞ்சுங்கள், அது காஃபிர்களுக்காகச் சித்தம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

131. நீங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால் உழைத்து சம்பாதிப்பதை விட்டுவிட்டு பண முதலீட்டைக் கொண்டு பிறர் உழைப்பில் சுகம் காணும் பழக்கத்திற்கு ஆளாகிவிடுவீர்கள். இப்படியாக பொருளாதார ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திக் கொண்டு சீரழிந்து நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் சமூகத்தவர்களைப் போல் நீங்களும் ஆகிவிடுவீர்கள்.

132 وَأَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ

*132.* அல்லாஹ்வுக்கும், (அவன்) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்; நீங்கள் (அதனால் அல்லாஹ்வினால்) கிருபை செய்யப்படுவீர்கள்.

132. ஆக நீங்கள் மனம்போன போக்கில் செயல்படுவதை விட்டுவிட்டு அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்று அதன்படி செயல்படுங்கள். மேலும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி வழிநடத்திச் செல்ல இறைத்தூதர் ஏற்படுத்தியுள்ள அமைப்புமுறை மற்றும் அதன் சட்ட உட்பிரிவுகளை பின்பற்றுங்கள். இதனால் மனித ஆற்றல்கள் வேகமாக வளர சரியான வழிமுறை கிடைக்கும்.

133 وَسَارِعُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِّن رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمَاوَاتُ وَالْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ

*133.* இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவனபதியின் பக்கமும் விரைந்து செல்லுங்கள்; அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது; அது பயபக்தியுடையோருக்காகவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

133. வானங்களிலும் பூமியிலும் பரந்து விரிந்து கிடக்கும் உங்கள் இறைவனின் பரிபாலன அமைப்பின் கீழ் பாதுகாப்பான வாழ்வு பெற முழு மனதுடன் விரைந்துக் கொள்ளுங்கள். இப்படியாக உருவாகும் சுவனபதியில் நுழையுங்கள். இறைச் சட்டங்களை பேணி நடப்பவர்களுக்கு இச்சுவனம் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

134 الَّذِينَ يُنفِقُونَ فِي السَّرَّاءِ
وَالضَّرَّاءِ وَالْكَاظِمِينَ الْغَيْظَ
وَالْعَافِينَ عَنِ النَّاسِ ۗ وَاللَّهُ يُحِبُّ
الْمُحْسِنِينَ ۝

*134. (பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள்; தவிர கோபத்தை அடக்கிக் கொள்வார்கள்; மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப் போராய் இருப்பார்கள்; (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக் கின்றான்.*

134. இச்சுவனவாசிகள் பிறர் உழைப்பில் சுகம் அனுபவிப்பதை தவிர்த்து, தாராள நிலையிலும் வறுமை நிலையிலும், பொதுமக்கள் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்து சமுதாய முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபடுவார்கள். இதற்காக தாம் உழைத்து சம்பாதித்த செல்வங்களை செலவிடுவார்கள். தங்களிடமுள்ள ஆற்றல்களையும் நேரத்தையும் சிந்தனையையும் வீணடிக்காமல் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி திட்டங்களை தீட்டி அதற்காக அயராது உழைப்பார்கள். இப்படி சமுதாயப் பணியில் ஈடுபடும்போது மற்றவர்கள் பரிகசித்தாலும் அதை பொருட்படுத்தாமல் சமுதாய சமச்சீர்நிலை, மனித நேயம் மற்றும் மனித மேம்பாடு ஆகியவற்றை நோக்கமாக கொண்டு செயல் படுவார்கள். இப்படிப்பட்ட நன்மையான செயல்களைக் கொண்டே அல்லாஹ்வின் நேசத்தை பெற முடியும்.

135 وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا
أَنفُسَهُمْ ذَكَرُوا اللَّهَ فَاسْتَغْفَرُوا
لِذُنُوبِهِمْ وَمَن يَغْفِرُ الذُّنُوبَ
إِلَّا اللَّهُ وَلَمْ يُصِرُّوا عَلَىٰ مَا
فَعَلُوا وَهُمْ يَعْلَمُونَ ۝

*135. தவிர, மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்; அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார் கள்.*

135. இவ்வாறாக சமுதாயப் பணி செய்து வரும் போது சிலசமயங்களில் அருவருக்கத்தக்க செயல்கள் நிகழ்ந்து அதனால் பாதிப்புகள் தமக்கோ மற்றவர்களுக்கோ ஏற்பட்டுவிட்டால், அது தவறு என்று தெரிந்ததும் அதை உடனே விட்டு விடுவார்கள். அதோடு அல்லாஹ்வின் சட்டதிட்டத்தின் படி அதற்கு என்ன பரிகாரம் என்பதை கண்டறிந்து அதன்படி தம்மை திருத்திக் கொண்டு ஆக்கப்பூர்வமாக செயல்படுவார்கள். (25:70–71) இப்படியாக தவறான செயல்களால் ஏற்படுகின்ற தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க வழி வகுத்துக்கொள்வார்கள். ஏனெனில் அல்லாஹ் நிர்ணயித்துள்ள இந்த வழிமுறையைத் தவிர பாதுகாப்பான வாழ்விற்கு வேறு எந்த வழிமுறையும் இல்லை.

136 أُولَٰئِكَ جَزَاؤُهُم مَّغْفِرَةٌ مِّن
رَّبِّهِمْ وَجَنَّاتٌ تَجْرِي مِن تَحْتِهَا
الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا ۚ وَنِعْمَ أَجْرُ
الْعَامِلِينَ ۝

*136. அத்தகையோருக்குரிய (நற்) கூலி, அவர்களுடைய இறைவனிடமிருந்து மன்னிப் பும்; சுவனபதிகளும் ஆகும்; அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டே இருக்கும்; அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பர்; இத்தகைய காரியங்கள் செய்வோரின் கூலி நல்லதாக இருக்கிறது.*

136. இப்படியாக மனந்திருந்தி வாழ முன்வருபவர்களுக்கு பாதுகாப்பான வாழ்வு கிடைக்கும். மேலும் அறியாமையில் செய்த தவறான செயல்களிலிருந்தும் அதனால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்தும் பாதுகாப்பாக வாழ அல்லாஹ்வின் பரிபாலன விதிமுறையில் இடமுண்டு. இத்தகையோர் செய்துவரும் ஆக்கப்பூர்வமான செயல்களால் தாராளமான பொருதார வசதிகள் வற்றாத ஜீவநதியாய் கிடைக்கும். மேலும் நிரந்தரமான சந்தோஷங்களைக் கொண்ட சுவன வாழ்வும் கிடைக்கும். இந்த சுவன வாழ்வு இவ்வுலகிலும், மறுவுலகிலும் தொடரும். இப்படி ஒரு நிலையை அடைவது எவ்வளவு பெரிய பாக்கியம் என்பதை எண்ணிப் பாருங்கள்.

137 قَدْ خَلَتْ مِن قَبْلِكُمْ سُنَنٌ
فَسِيرُوا فِي الْأَرْضِ فَانظُرُوا كَيْفَ
كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِينَ ۝

*137. உங்களுக்கு முன் பல வழி முறைகள் சென்றுவிட்டன; ஆகவே, நீங்கள் பூமியில் சுற்றி வந்து (இறை வசனங்களைப்) பொய்யாக்கி யோரின் முடிவு என்ன ஆயிற்று என்பதைப் பாருங்கள்.*

137. இப்படியாக உலகில் அமைதிக்காக பாடுபடுபவர்களும், சுயநலத்தை நோக்கமாகக் கொண்டு வாழ்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களிடையே மோதல்களும் இருந்து வந்தன. அதர்மம் இவ்வுலகில் நிலைத்து இருந்ததில்லை. அது அழிந்தே போனது. காலம் காலமாக இப்படித்தான் நடந்து வந்தது. உலகில் பல சமுதாயங்கள் தோன்றின. பல வாழ்க்கை

வழிமுறைகள் தோன்றின. மனித வரலாற்றின் ஏடுகளை புரட்டிப் பாருங்கள். அல்லது உலகம் முழுவதும் சுற்றிப் பாருங்கள். தர்மத்தை நிலைநாட்டும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலுக்கு மாற்றமாக செயல்பட்டவர்கள் அழிவைத்தான் சந்தித்துள்ளார்கள் என்ற உண்மை புலனாகும்.

138 هٰذَا بَيَانٌ لِّلنَّاسِ وَهُدًى وَّ
مَوْعِظَةٌ لِّلْمُتَّقِيْنَ○

*138. இது மனிதர்களுக்கு (சத்தியத்தின்) தெளிவான விளக்கமாகவும், பயபக்தியுடையோருக்கு நேர் வழிகாட்டியாகவும், நற்போதனையாகவும் இருக்கின்றது.*

138. எனவே உண்மை விஷயங்களை தெளிவாக்கிடவே இந்த வரலாற்று சான்றுகள் தரப்படுகின்றன. இதைக் கொண்டு மக்கள் படிப்பினை பெற்று, தவறான செயல்களால் ஏற்படும் விபரீத விளைவுகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க நாடுவோருக்கு இந்த வலராற்று சம்பவங்கள் நற்போதனையாக விளங்கும். இதைக் கொண்டு இவர்கள் இலட்சிய வாழ்வின் இலக்கை அடையலாம்.

139 وَلَا تَهِنُوْا وَلَا تَحْزَنُوْا وَاَنْتُمُ الْاَعْلَوْنَ
اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ○

*139. எனவே நீங்கள் தைரியத்தை இழக்காதீர்கள்; கவலையும் கொள்ளாதீர்கள்;*

*நீங்கள் முஃமின்களாக இருந்தால் நீங்கள் தாம் உன்னதமானவர்களாக இருப்பீர்கள்.*

139. வாழ்வில் உயர்வும் மதிப்பும் உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அல்லாஹ்வின் நிலைமாறா நிரந்தர வழிகாட்டுதலை மனதில் பதிய வைத்து செயல்படுங்கள். உங்கள் இலட்சியத்தில் வெற்றி பெற்று விட்டால் உங்களுள் மந்தமான நிலையோ சோம்பலோ ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதே சமயம் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டால் தைரியத்தை இழந்து விரக்தியுடன் அமர்ந்துவிடக் கூடாது. தவறு எங்கே நடந்தது என்பதை கண்டறிந்து அதை சரிசெய்ய முயலவேண்டும். அல்லாஹ்வின் வழிகாட்டுதலை திடமாக பின்பற்றுவதைக் கொண்டே இந்த மனோ நிலை உங்களுள் வளரும்.

ஆக நீங்கள் மூஃமின்களாக இருந்தால் கவலைக்கும் மன வேதனைக்கும் எங்கு இடமிருக்கப் போகிறது? ஏனெனில் உங்களை வெற்றி கொள்வோர் யாராவது இவ்வுலகில் இருக்கப் போகிறார்களா? (4:141)

140 اِنْ يَّمْسَسْكُمْ قَرْحٌ فَقَدْ مَسَّ الْقَوْمَ
قَرْحٌ مِّثْلُهٗ ؕ وَتِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا
بَيْنَ النَّاسِ ۚ وَلِيَعْلَمَ اللّٰهُ الَّذِيْنَ
اٰمَنُوْا وَيَتَّخِذَ مِنْكُمْ شُهَدَآءَ ؕ وَاللّٰهُ
لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ ۙ○

*140. உங்களுக்கு ஒரு காயம் ஏற்பட்டது என்றால், அதே போன்று மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது; இத்தகைய (சோதனைக்) காலங்களை மனிதர்களிடையே நாமே மாறி மாறி வரச் செய்கின்றோம்; இதற்குக் காரணம், ஈமான் கொண்டோரை அல்லாஹ் அறிவதற்கும், உங்களில் உயிர்த் தியாகம் செய்வோரை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குமே ஆகும்; இன்னும், அல்லாஹ் அநியாயம் செய்வோரை நேசிப்பதில்லை.*

140. நினைவில் கொள்ளுங்கள். அநியாயத்தை எதிர்த்து போரிடுவது சில சமயங்களில் தவிர்க்க முடியாது. இதில் சில சமயம் உங்களுக்கு காயங்கள் ஏற்படலாம்; அதேபோல் எதிரணியினருக்கும் ஏற்படும். மனித வரலாற்றின் ஏடுகள் இதையே சான்று பகர்கின்றன. இந்த காயங்கள், கஷ்டங்கள் மற்றும் சிரமங்கள் யாவும் நீங்கள் அல்லாஹ்வின் கொள்கை கோட்பாடுகளை ஏற்று எந்த அளவிற்கு நிலைத்து செயல்படுகிறீர்கள் என்பதை அறிந்துக்கொள்ளும் அளவுகோலாக அமைகிறது. மேலும் செயலளவில் நீங்கள் எந்த அளவிற்கு தயாராக இருக்கிறீர்கள் என்பதையும் காட்டும். போரில் வெற்றியோ தோல்வியோ நிலை குலையாமல் அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டால் மட்டுமே அல்லாஹ்வின் நேசத்தை பெற முடியும்.

141 وَلِيُمَحِّصَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَ يَمْحَقَ الْكٰفِرِيْنَ ۝

*141. நம்பிக்கை கொண்டோரை பரிசுத்த மாக்குவதற்கும், காஃபிர்களை அழிப்பதற்கும் அல்லாஹ் இவ்வாறு செய்கின்றான்.*

141. இந்த போராட்டங்கள் மற்றும் மோதல்களின் நோக்கம் இறை வழிகாட்டுதலை ஏற்று செயல்படுபவர்களுள் நிலவி வரும் பொருப்பற்ற நிலையை நீக்கி சிறந்த செயல்வீரர்களாக ஆக்குவதேயாகும். மேலும் இறைவழிகாட்டுதலுக்கு எதிராக செயல்பட்டு சமுதாயத்தை சீரழிக்கும் சக்திகளை வலுவிழக்கச் செய்து ஒடுக்கி வைக்கவும் இவைகள் உதவுகின்றன.

142 اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَعْلَمِ اللّٰهُ الَّذِيْنَ جٰهَدُوْا مِنْكُمْ وَيَعْلَمَ الصّٰبِرِيْنَ ۝

*142. உங்களில் (அல்லாஹ்வின் பாதையில் உறுதியாகப்) போர் புரிபவர்கள் யார் என் றும், (அக்காலே) பொறுமையைக் கடைப்பிடிப் பவர்கள் யார் என்றும் அல்லாஹ் (பரிசோதித்து) அறியாமல் நீங்கள் சுவனபதியில் நுழைந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு இருக் கின்றீர்களா?*

142. இவ்வுலகில் சமுதாயங்கள் அழிந்து போவதற்கும் நிலைத்திருப்பதற்கும் இவைகளே நிரந்தர நிலைமாறா அடிப்படை கோட்பாடாகும். இதை அறிந்துக் கொண்ட பின்னரும் எந்த ஒரு முயற்சியும் உழைப்பும் இல்லாமல் அமர்ந்த இடத்திலேயே வாழ்வில் நிரந்தர சந்தோஷங்களையும் சுவனத்தையும் அடைந்து விடலாம் என்ற கற்பனையில் மூழ்கி இருந்தால் எவ்வளவு பெரிய மடமையில் இருக்கிறீர்கள் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். சுவனத்தை அடைவதற்கு உங்களுடைய நற்பண்புகளையும் திறமையையும் வீரத்தையும் செயலளவில் காட்டவேண்டும். இதற்காக அல்லும் பகலும் ஆய்வுகளையும் தொடர் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். சமுதாயத்தை அழிக்கும் சக்திகளை எதிர்த்து போராடியே ஆகவேண்டும் (2:214).

143 وَلَقَدْ كُنْتُمْ تَمَنَّوْنَ الْمَوْتَ مِنْ قَبْلِ اَنْ تَلْقَوْهُ فَقَدْ رَاَيْتُمُوْهُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ۝

*143. நீங்கள் மரணத்தைச் சந்திப்பதற்கு முன்னமே நிச்சயமாக நீங்கள் அதை விரும்பி னீர்களே! இப்போது அது உங்கள் கண்முன் இருப்பதை நீங்கள் திட்டமாகப் பார்த்துக் கொண்டீர்கள். (இப்போது ஏன் தயக்கம்?)*

143. தர்மத்தை நிலைநாட்ட யார் உயிர் தியாகங்களை செய்ய தயாராக இருக்கிறார்களோ அவர்களே ஜீவனுள்ள வாழ்வை பெற தகுதியுடையவர்கள் (2:243) இதன் அடிப்படையில் நீங்கள் மரணத்தை சந்திக்க தயாராக இருந்தீர்கள். இப்போது அந்த தருணம் நெருங்கிவிட்டது. தீய சக்திகளோடு போரிடும் கட்டாயம் வந்துவிட்டது. இதில் உங்கள் மரணத்தை கண்கூடாக பார்க்கப் போகிறீர்கள். உண்மையிலேயே தம் பேச்சில் உண்மையாளர்கள் யயர் என்பது இப்போது தெரிந்துவிடும்.

144 وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ ؕ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْــًٔا ؕ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ ۝

ருகூஉ 15

*144. முஹம்மது [ஸல்] (இறைவனின்) தூதரே அன்றி (வேறு) அல்லர்; அவருக்கு முன்னரும் (அல்லாஹ்வின்) தூதர்கள் பலர் (காலம்) சென்று விட்டார்கள்; அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டால், நீங்கள் உங்கள் குதிகால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி விடு வீர்களா? அப்படி எவரேனும் தம் குதிகால் கள்மேல் (புறங்காட்டித்) திரும்பி விடுவாரானல்*

144. போர், உயிர் தியாகம் என்ற பேச்சு எழும்போது ஒரு விஷயத்தை மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய வாழ்வு மற்றும் பலத்தின் இரகசியமே வலிமைமிக்க ஆட்சி நிலைத்திருக்கச் செய்வதைக் கொண்டுதான் அடங்கியுள்ளது. எனவே இந்த தியாகங்கள் தனிநபருக்காக இருக்கக் கூடாது. இந்த விஷயத்தில் மற்றவரை விடுங்கள். மனிதரில் மாணிக்கமாக திகழும் முஹம்மது நபி அவர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர் இறைச் செய்தியை உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் ஒரு தூதராகவே விளங்குகிறார். இதற்கு முன் பல இறைத்தூதர்கள் வந்துள்ளனர். அவர்கள் தம் கடமையை சிறப்பாக ஆற்றிவிட்டு சென்றுள்ளனர். அது போலவே முஹம்மது நபி (ஸல்) அவர்களும் தன் கடமை சிறப்பாக செய்யவே வந்துள்ளார். ஆக நபியுடைய உயிர் பிரிந்து விட்டாலோ அல்லது கொல்லப் பட்டாலோ நீங்கள் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டுவிட்டு பழைய வாழ்க்கை முறைக்கு திரும்பி

அவர் அல்லாஹ்வுக்கு எவ்விதத் தீங்கும் செய்துவிட முடியாது; அன்றியும், அல்லாஹ் நன்றி யுடையோருக்கு அதிசீக்கிரத்தில் நற்கூலியை வழங்குவான்.

சென்று விடுவீர்களா? அவ்வாறு சென்றுவிட்டால் அதனால் ஏற்படும் பாதிப்பு அல்லாஹ்விற்கு அல்ல. இப்படி மனம் போல வாழக்கையின் பக்கம் திரும்பிச் செல்பவர்களுக்குத் தான் நஷ்டம். எனவே யார் இறை ஆட்சியமைப்பு நிலைத்திருக்க நன்றி விசுவாசத்துடன் செயல் படுகிறார்களோ அவர்களுடைய உழைப்பு என்றைக்கும் வீண்போகாது.

145 وَمَا كَانَ لِنَفْسٍ اَنْ تَمُوْتَ اِلَّا
بِاِذْنِ اللّٰهِ كِتٰبًا مُّؤَجَّلًا ؕ وَمَنْ
يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۚ وَ
مَنْ يُّرِدْ ثَوَابَ الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا ؕ
وَسَنَجْزِى الشّٰكِرِيْنَ ۝

***145.*** மேலும், எந்த ஆன்மாவும் (முன்னரே) எழுதப்பட்டிருக்கும் தவணைக்கு இணங்க, அல்லாஹ்வின் அனுமதியின்றி, மரணிப்பதில்லை; எவரேனும் இந்த உலகத்தின் பலனை (மட்டும்) விரும்பினால், நாம் அவருக்கு அதிலிருந்தே வழங்குவோம்; இன்னும் எவர், மறுமையின் நன்மையை விரும்புகிறாரோ அவருக்கு அதிலிருந்து வழங்குவோம்; நன்றியுடையோருக்கு அதி சீக்கிரமாக நற்கூலி கொடுக்கிறோம்.

145. ஆக தனிநபர் ஒருவருடைய மரணத்தினால் ஆட்சியமைப்பிற்கு பாதிப்பு ஏற்படுகிறது என்றால் அது சிறந்த ஆட்சியாக கருத முடியாது. இப்படிப்பட்ட ஆட்சி இவ்வுலகில் நீடிக்கவும் செய்யாது. ஏனெனில் எந்த தனிநபரும் இவ்வுலகில் தொடர்ந்து உயிர்வாழ முடியாது (3:185). ஆக மரணம் என்பது இறைவனின் நியதிப்படி ஒவ்வொரு நபருக்கும் நிகழக்கூடியதே ஆகும். அதை யாரும் தவிர்க்கவும் முடியாது. இறைவனின் நியதிப்படியே ஒவ்வொருடைய ஆயுட்காலமும் நிர்ணயமாகிறது. (35:11). ஆக ஆட்சியமைப்பு என்பது தனி நபர் ஒருவரை சார்ந்ததாக இருக்கக் கூடாது.

இப்போது இருப்பது ஆட்சி அமைப்பின் குறிக்கோள்களைப் பற்றியது. இவ்வுலகில் இருவகையான மக்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவகையினர் இவ்வுலக தற்காலிக வாழ்வின் பலன்களை மட்டும் நோக்கமாக கொண்டு வாழ்பவர்கள். இன்னொரு வகையினர் இவ்வுலக தற்காலிக வாழ்வின் நன்மைகளோடு வருங்கால நிரந்தரப் பலன்களையும் கருத்தில் கொண்டு வாழ்பவர்கள்.(2:201) ஆக யார் எப்படிப்பட்ட வாழ்வை விரும்புகிறார்களோ அவ்வாறே கிடைத்திட வேண்டும் என்பது அல்லாஹ் நிர்ணயித்துள்ள சட்டமாகும் (17:18–20) எனவே இறைவனுடைய ஆட்சியமைப்பு என்பது தற்காலிக உலக நன்மைகளுடன் வருங்கால நிரந்தரப் பலன்களையும் நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்படுகின்ற அமைப்பாகும். (3:148). ஆக யாரெல்லாம் இப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தி உழைக்கிறார்களோ அவர்களுடைய உழைப்பின் பலன்களை விரைவில் காண்பார்கள். (24:55)

146 وَكَاَيِّنْ مِّنْ نَّبِىٍّ قٰتَلَ ۙ مَعَهٗ
رِبِّيُّوْنَ كَثِيْرٌ ۚ فَمَا وَهَنُوْا لِمَاۤ
اَصَابَهُمْ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَمَا
ضَعُفُوْا وَمَا اسْتَكَانُوْا ؕ وَاللّٰهُ
يُحِبُّ الصّٰبِرِيْنَ ۝

***146.*** மேலும் எத்தனையோ நபிமார்கள், அவர்களுடன் ரிப்பிய்யூன்கள் (என்னும் இறையடியார்களும்) பெருமளவில் சேர்ந்து (அல்லாஹ்வின் பாதையில்) போர் செய்தனர்; எனினும், அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களால் அவர்கள் தைரியம் இழந்து விடவில்லை, பலஹீனம் அடைந்து விடவுமில்லை; (எதிரிகளுக்குப்) பணிந்து விடவுமில்லை - அல்லாஹ் (இத்தகைய) பொறுமையாளர்களையே நேசிக்கின்றான்.

146. மேலும் இதற்காக இந்த போரும் உயிர் இழப்பும் தேவையா? ஒட்டு மொத்த சமுதாயமும் பாதுகாப்புடன் வாழ சிறந்த ஆட்சியமைப்பை ஏற்படுத்துவோர் ஒரு பக்கம். சுயநல நோக்கத்துடன் இதை எதிர்ப்போர் மறுபக்கம். உலகில் வந்த அனைத்து நபிமார்களும் இந்த நோக்கத்தை முன்வைத்தே செயல்பட்டனர். அவர்கள் ஏற்படுத்திய அமைப்பிற்கு எதிராக செயல்படுபவர்களை ஒடுக்க நபியை ஆதரித்து மூஃமின்கள் (ரிப்பியூன்கள்) போரில் பங்கெடுத்தனர். அவர்களுக்கு துன்பங்கள் பல ஏற்பட்ட போதும் தைரியத்தை இழக்கவும் இல்லை. பலஹீனம் அடையவும் இல்லை. எதிரிகளுக்கு பயந்து பணிந்துவிடவும் இல்லை. இப்படிப்பட்டவர்களுக்கே அல்லாஹ்வின் உதவி என்றைக்கும் கிடைக்கும்.

147 وَمَا كَانَ قَوْلَهُمْ إِلَّآ أَنْ قَالُوا رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِيٓ أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِينَ ۝

*147.. மேலும், "எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களையும் எங்கள் காரியங்களில் நாங் கள் வரம்பு மீறிச் செய்தவற்றையும் மன்னித் தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதியாய் இருக்கச் செய்வாயாக! காஃபிர்களின் கூட்டத் தாருக்கு எதிராக எங்களுக்கு நீ உதவி புரி வாயாக" என்பதைத் தவிர (இம்மாதிரி சந் தர்ப்பங்களில்) அவர்கள் கூறியது வேறெதும் இல்லை.*

148 فَاٰتٰهُمُ اللّٰهُ ثَوَابَ الدُّنْيَا وَحُسْنَ ثَوَابِ الْاٰخِرَةِ ۗ وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِينَ ۝

*148. ஆகவே, அல்லாஹ் அவாகளுக்கு இவ்வுலகத்தில் நன்மையையும், மறுமையின் அழகிய நன்மையையும் கொடுத்தான்; இன் னும், அல்லாஹ் நன்மை செய்யும் இத்தகை யோரையே நேசிக்கின்றான்.*

149 يٰٓأَيُّهَا الَّذِينَ اٰمَنُوٓا إِنْ تُطِيعُوا الَّذِينَ كَفَرُوا يَرُدُّوكُمْ عَلٰٓى أَعْقَابِكُمْ فَتَنْقَلِبُوا خٰسِرِينَ ۝

(ருகூஃ 16

*149. நம்பிக்கை கொண்டோரே! காஃபிர் களுக்கு நீங்கள் வழிபட்டு நடந்தால், அவர் கள் உங்களை உங்கள் குதி கால்களின் மீது திருப்பி விடுவார்கள்; அப்போது, நீங்கள் நஷ்டமடைந் தவர்களாக (நம்பிக்கையினின்றும்) திரும்பி விடுவீர்கள்.*

150 بَلِ اللّٰهُ مَوْلٰىكُمْ ۚ وَهُوَ خَيْرُ النّٰصِرِينَ ۝

*150. (இவர்களல்ல.) அல்லாஹ்தான் உங்களை இரட்சித்துப் பரிபாலிப்பவன். இன்னும் அவனே உதவியாளர்கள் அனைவரிலும் மிகவும் நல்லவன்.*

151 سَنُلْقِي فِي قُلُوبِ الَّذِينَ كَفَرُوا الرُّعْبَ بِمَآ أَشْرَكُوا بِاللّٰهِ مَا لَمْ يُنَزِّلْ بِهٖ سُلْطٰنًا ۚ وَمَأْوٰىهُمُ النَّارُ ۚ وَبِئْسَ مَثْوَى الظّٰلِمِينَ ۝

இந்த மனஉறுதிப்பாடும் விடாமுயற்சியும் அல்லாஹ்விற்கு பிடித்தமான பண்புகளாகும்.

147. இப்படிப்பட்ட உயர் பண்புகளைக் கொண்ட இந்த ரிப்பியூன்கள் களத்தில் முன்னேறிய வண்ணம், தம் மனதில் எழுந்த எண்ணங்கள் வார்த்தைகளாக இவ்வாறு வந்தன: "எங்கள் இறைவனே! நாங்கள் ஈடுபட்டிருக்கும் இக்காரியங்களில் தவறுகள் ஏதேனும் ஏற்பட்டாலோ, அறியாமல் வரம்பு மீறி நடந்தாலோ அதனால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக. எங்கள் நோக்கத்தில் உறுதியாக நிலைத்து நின்று செயல்பட மனஉறுதியை ஏற்படுத்துவாயாக. எதிரிகள் மீது நாங்கள் வெற்றி பெற துணை புரிவாயாக." இதைத் தவிர வேறெந்த எண்ணமும் அவர்களிடம் ஏற்படடதில்லை.

148. இப்படிப்பட்ட ஆக்கப்பூர்வமான உயர் நோக்கங்களைக் கொண்ட செயல்களை செய்பவர்களுக்குக்கே இவ்வுலக தற்காலிக சந்தோஷங்களும் பலன்களும் வருங்கால நிரந்தர சந்தோஷங்களும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைக்கின்றன. இது மரணத்திற்கு பின்பும் தொடரும். இவ்வாறு இறைச் சட்டங்களின்படி அழகிய செயல்களை செய்பவர்களுக்கே அல்லாஹ்வின் நேசம் கிடைக்கிறது.

149. இறை வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டவர்களே! தனி நபர் ஒருவரின் மரணத்தால் இறை ஆட்சி அமைப்பிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு தொடர்ந்து பணியாற்றுவது அவசியமான ஒன்றாகும் (3:144). ஆக இந்த அமைப்பை கட்டிக் காப்பது உங்களுடைய தலையாய கடமையாகும். இதில் பாதிப்புகள் ஏற்படும்படி செயல்பட்டால், நீங்கள் இந்த அமைப்பிற்கு எதிராக செயல்பட்டதாக பொருள்படும். அதுமட்டுமின்றி கா:பிர்கள் விரும்பியவாறு நீங்கள் செயல்பட்டதாகவும் ஆகிவிடும். மேலும் உங்களை கா:பிர்கள் வழிகெடுத்து பழைய வாழ்க்கை வழிமுறைக்கு திருப்பி விடக்கூடும். இதனால் நீங்கள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாவீர்கள்.

150. எனவே நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு மட்டும் அடிபணிந்து செயல்படுங்கள். உங்கள் வாழ்வில் துணையாக வருவதும் உதவிபுரிவதும் இரட்சிப்பதும் அல்லாஹ்வே ஆகும்.

151. ஆக அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி ஒரு சமுதாயம் செயல்படும் போது அங்கு பயமோ பிரச்சனைகளோ இல்லாமல் நிம்மதியான சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும் (2:38). அல்லாஹ்வின் வழிகாட்டுதலுக்கு மாற்றமாக செயல்பட்டால் அங்கு மனிதத் தன்மை

*151. விரைவிலேயே நிராகரிப்பவர்களின் இதயங்களில் திகிலை உண்டாக்குவோம்; ஏனெனில் (தனக்கு இணை வைப்பதற்கு அவர்களுக்கு) எந்தவிதமான ஆதாரமும் இறக்கி வைக்கப்படாமலிருக்க அவர்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்தார்கள். தவிர, அவர்கள் தங்குமிடம் நெருப்புதான்; அக்கிரமக்காரர்கள் தங்கும் இடங்களிலெல்லாம் அது தான் மிகவும் கெட்டது.*

இல்லாத மோசமான சமுதாயமாக மாறிவரும். அங்கு அநியாயமும் அக்கிரமும்தான் தலைதூக்கும். இதனால் சமுதாயத்தில் பயமும் பீதியும் ஏற்பட்டு நிம்மதியற்ற நிலைமை ஏற்படும்(22:31). எனவே அல்லாஹ்வின் வழிகாட்டுதலுக்கு இணையாக வேறு வழிமுறைகளை கடைபிடித்தால், அது மூட நம்பிக்கையின் அடிப்படையில்தான் இருக்கும். அவர்களின் கூற்றுக்கு எவ்வித ஆதாரமும் இருக்காது. மேலும் அவர்களுடைய செயல்பாடுகளிலும் சயநலம்தான் மிகைத்திருக்கும். இதனால் அந்த சமுதாயம் பிரச்சனைகள் நிறைந்த நரகமாக மாறிவரும். இப்படி ஒரு நிலை ஏற்படுவது நல்லதா?

152 وَلَقَدْ صَدَقَكُمُ اللَّهُ وَعْدَهُ إِذْ
تَحُسُّونَهُم بِإِذْنِهِ حَتَّىٰ إِذَا فَشِلْتُمْ
وَتَنَازَعْتُمْ فِي الْأَمْرِ وَعَصَيْتُم
مِّن بَعْدِ مَا أَرَاكُم مَّا تُحِبُّونَ
مِنكُم مَّن يُرِيدُ الدُّنْيَا وَمِنكُم
مَّن يُرِيدُ الْآخِرَةَ ثُمَّ صَرَفَكُمْ
عَنْهُمْ لِيَبْتَلِيَكُمْ وَلَقَدْ عَفَا
عَنكُمْ وَاللَّهُ ذُو فَضْلٍ عَلَى
الْمُؤْمِنِينَ ○

*152. இன்னும் அல்லாஹ் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றித் தந்தான்; (அவ்வமயம் உஹது களத்தில்) பகைவர்களை அவன் அனுமதியின் பிரகாரம் நீங்கள் அழித்து விடும் நிலையில் இருந்தபோது நீங்கள் தயங்கினீர்கள்; நீங்கள் (உங்களுக்கிடப்பட்ட) உத்திரவு பற்றித் தர்க்கிக்கத் துவங்கினீர்கள்; நீங்கள் விரும்பிய (வெற்றியை) அவன் உங்களுக்குக் காட்டிய பின்னரும் நீங்கள் அந்த உத்திரவுக்கு மாறு செய்யலானீர்கள்; உங்களில் இவ்வுலகை விரும்புவோரும் இருக்கிறார்கள்; இன்னும் உங்களில் மறுமையை விரும்புவோரும் இருக்கிறார்கள்; பின்னர், உங்களைச் சோதிப்பதற்காக அவ்வெதிரிகளைவிட்டு உங்களைப் பின்னடையுமாறு திருப்பினான்; நிச்சயமாக அவன் உங்களை மன்னித்தான்; மேலும் அல்லாஹ் முஃமின்களிடம் அருள் பொழிவோனாகவே இருக்கின்றான்.*

152. உஹது களத்தில் நடந்த சம்பவம் உங்களுக்கு அனுபவ பாடமாக இருக்கும். நீங்கள் அனைவரும் களத்தில் இருந்தீர்கள். அல்லாஹ்வின் கட்டளைப்படி பகைவர்களை முறியடித்து வெற்றி பெறும் நிலையில் இருந்தீர்கள். இப்படியாக வெற்றி நிச்சயம் என்ற அல்லாஹ்வின் வாக்கும் நிறைவேறும் தருணம் அது. ஆனால் அதே சமயம் உங்களில் ஒரு பிரிவினர் போர் முனையில் நிலைத்து நிற்காமல் தம் இடத்திலிருந்து பின் வாங்கிவிட்டீர்கள் (3:122). மேலும் படைத் தலைவரான நபியின் உத்தரவையும் மீறிவிட்டீர்கள். போரில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆவல் என்னவோ உங்களிடமிருந்தது. வெற்றியும் உங்கள் கண்ணெதிரே இருந்தது. இருந்தும் தோற்று போகும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இதற்கு காரணம் என்ன? உங்களில் ஒரு சிலர் சுயநலப் போக்குடனும், மற்றவர்கள் உயர் இலட்சியத்துடனும் இருந்தீர்கள். இதனால்தான் உங்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு பகைவர்களை விட்டு உங்கள் கவனங்கள் திசைமாறி போய்விட்டது. இதனால் பகைவர்களின் தாக்குதலினால் உங்களுக்கு பெருத்த நஷடம் ஏற்பட்டது.

இதன்பின் உண்மை நிலவரத்தை நீங்கள் கண்டறிந்து ஒருங்கிணைந்து களத்தில் இறங்கினீர்கள். அதன் பின் போரில் வெற்றியும் பெற்றீர்கள். இப்படியாக உங்களுடைய தவறுகளால் ஏற்படவிருந்த பாதிப்புகள் நீங்கின. ஆக ஒருமுறை தவறிழைத்து விட்டதால் எக்காலத்திற்கும் துன்பத்திலேயே இருக்க வேண்டும் என்பதல்ல அல்லாஹ்வின் நடைமுறை சட்டம். தவறை உணர்ந்து உடனே திருத்திக் கொண்டு நேரான பாதையில் வந்துவிட்டால் அல்லாஹ்வின் அருட்கொடைகள் அனைத்தும் கிடைத்துவரும்.

153 إِذْ تُصْعِدُونَ وَلَا تَلْوُونَ عَلَىٰ أَحَدٍ
وَالرَّسُولُ يَدْعُوكُمْ فِي أُخْرَاكُمْ
فَأَثَابَكُمْ غَمًّا بِغَمٍّ لِّكَيْلَا تَحْزَنُوا
عَلَىٰ مَا فَاتَكُمْ وَلَا مَا أَصَابَكُمْ
وَاللَّهُ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ ○

153. உஹது களத்தில் உங்களுக்கு பின்னடைவு ஏற்பட்ட சமயம் நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் யாரையும் திரும்பிப் பார்க்காமல் தலை தெறிக்க ஓடினீர்கள். உங்களோடு இருந்த மற்ற வீரர்களின் நிலைமை என்ன என்பதையும் நினைத்துப் பார்க்கவில்லை. அதுமட்மின்றி உங்கள் படைத்தலைவரான இறைத்தூதர் உங்களை அழைத்துக் கொண்டிருந்ததையும் நீங்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இதனால்

*153. (நினைவு கூருங்கள்! உஹது களத்தில்) உங்கள் பின்னால் இருந்து இறைதூதர் உங்களை அழைத்துக் கொண்டிருக்க, நீங்கள் எவரையும் திரும்பிப் பார்க்காமல் மேட்டின்மேல் ஏறிக் கொள்ள ஓடிக் கொண்டிருந்தீர்கள், ஆகவே (இவ்வாறு இறை தூதருக்கு நீங்கள் கொடுத்த துக்கத்தின்) பலனாக இறைவன் துக்கத்தின்மேல் துக்கத்தை ' உங்களுக்குக் கொடுத்தான்; ஏனெனில் உங்களுக்குக் கிடைக்க வேண்டியது தவறி விட்டாலோ, உங்களுக்குச் சோதனைகள் ஏற்பட்டாலோ நீங்கள் (சோர்வும்) கவலையும் அடையாது (பொறுமையுடன் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான்); இன்னும், அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிபவனாக இருக்கின்றான்.*

உங்களுக்கு பெருத்த நஷ்டத்தின் மேல் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இதிலிருந்து நீங்கள் பெற்ற அனுபவப் பாடம் என்ன? போர் போன்ற இக்கட்டான சமயங்களிலும் படைத் தலைவரின் கட்டளையை மீறி தன்னிச்சையாக இடத்தை விட்டு எங்கும் நகரக்கூடாது. மேலும் நீங்களே சுயமாக எந்த முடிவும் எடுக்கக்கூடாது. படைத்தலைவரின் உத்தரவு வரும்வரையில் காத்திருந்து தமக்கு அளிக்கப்பட்ட பணியை நிறைவேற்ற வேண்டும். எனினும் நீங்கள் செய்வதனைத்தும் அல்லாஹ்விற்கு நன்கு தெரியும்.

154 ثُمَّ أَنزَلَ عَلَيْكُم مِّن بَعْدِ الْغَمِّ
أَمَنَةً نُّعَاسًا يَغْشَىٰ طَائِفَةً مِّنكُمْ
وَطَائِفَةٌ قَدْ أَهَمَّتْهُمْ أَنفُسُهُمْ
يَظُنُّونَ بِاللَّهِ غَيْرَ الْحَقِّ ظَنَّ
الْجَاهِلِيَّةِ يَقُولُونَ هَل لَّنَا مِنَ
الْأَمْرِ مِن شَيْءٍ قُلْ إِنَّ الْأَمْرَ
كُلَّهُ لِلَّهِ يُخْفُونَ فِي أَنفُسِهِم
مَّا لَا يُبْدُونَ لَكَ يَقُولُونَ لَوْ كَانَ
لَنَا مِنَ الْأَمْرِ شَيْءٌ مَّا قُتِلْنَا
هَاهُنَا قُل لَّوْ كُنتُمْ فِي بُيُوتِكُمْ
لَبَرَزَ الَّذِينَ كُتِبَ عَلَيْهِمُ الْقَتْلُ
إِلَىٰ مَضَاجِعِهِمْ وَلِيَبْتَلِيَ اللَّهُ مَا
فِي صُدُورِكُمْ وَلِيُمَحِّصَ مَا
فِي قُلُوبِكُمْ وَاللَّهُ عَلِيمٌ بِذَاتِ
الصُّدُورِ

154. பிறகு, அத்துக்கத்திற்குப்பின் அவன் உங்களுக்கு அமைதி அளிப்பதற்காக நித்திரையை இறக்கி வைத்தான்; உங்களில் ஒரு பிரிவினரை அந்நித்திரை சூழ்ந்து கொண்டது; மற்றொரு கூட்டத்தினரோ - அவர்களுடைய மனங்கள் அவர்களுக்குக் கவலையை உண்டு பண்ணி விட்டன. அவர்கள் அறிவில்லாதவர்களைப் போன்று, உண்மைக்கு மாறாக அல்லாஹ்வைப் பற்றி சந்தேகம் கொள்ளலாயினர்; (அதனால்) அவர்கள் கூறினார்கள்: "இ(ப்போர்)க் காரியத்தில் நமக்கு சாதகமாக ஏதேனும் உண்டா?" (என்று. அதற்கு) "நிச்சயமாக இக்காரியம் முழுவதும் அல்லாஹ்விடமே உள்ளது" என்று (நபியே!) நீர் கூறுவீராக! அவர்கள் உம்மிடம் வெளிப்படையாகக் கூற முடியாத ஒன்றைத் தம் நெஞ்சங்களில் மறைத்து வைத்திருக்கின்றனர்; அவர்கள் (தமக்குள்) கூறிக் கொள்ளுகிறார்கள்: "இக்காரியத்தில் நமக்கு ஏதேனும் சாதகமாக இருந்திருந்தால் நாம் இங்கு கொல்லப்பட்டு இருக்க மாட்டோம்;" "நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்திருந்தாலும், யாருக்கு

154. ஆக படைத் தலைவரான நபி வீர முழக்கத்துடன் விடுத்த அழைப்பை ஏற்று நீங்கள் திரும்பி போரிட்டதால் அந்த போரில் தோற்று போகும் நிலை மாறி வெற்றி கிடைத்தது. துக்கமும் துயரமும் நீங்கி மனநிறைவும் நிம்மதியும் ஏற்பட்டது (8:11). எனினும் இந்த மனநிறைவும் நிம்மதியும் இறை வழிகாட்டுதலில் முழு நம்பிக்கை வைத்து செயல்பட்டோருக்குத் தான் கிடைத்தது. ஆனால் உங்களோடு இருந்த முனாஃபிக்குகளின் மனம் இப்போதும் அமைதி பெறவில்லை. தம் உயிருக்கு பயந்து நடுங்கிக் கொண்டு இருக்கின்றனர். இறைவனின் உதவி நேரடியாக வரும் என்று அறியாமைக் காலத்தில் இருந்த கருத்து இப்போதும் அவர்களிடையே நிலவி வருகிறது. இதனால் அவர்களுள் ஒரு சிலர், போர் சம்பந்தமாக முடிவெடுக்கும் உரிமை நமக்கும் இருக்கவேண்டும் என்கின்றனர் அதாவது போர் செய்ய வேண்டுமா வேண்டாமா. போரிட்டால் அதனுடைய செயல் திட்டம் எப்படி இருக்கவேண்டும். அதன் நோக்கம் என்னவாக இருக்கவேண்டும். இதுபோன்ற விஷயங்களை முடிவெடுக்கும் அதிகாரம் நமக்கும் வேண்டும் என்கின்றனர். ஆனால் போர் என்பது தனிநபர் ஒருவரால் முடிவெடுக்கும் விஷயமல்ல. இது உலக மக்களின் நலனை கருதி இறை ஆட்சியமைப்பில் கூட்டாக எடுக்கப்படும் தீர்மானமாகும். இந்த அதிகாரம் முற்றிலும் அந்த அமைப்பிற்கே உரியதாகும். இதை அவர்கள் புரிந்திருக்க வேண்டும். இதைப் புரியாமல் வீணான பேச்சை பேசி வருகிறார்கள். அதுவும் பிறருக்கு காட்டிக் கொள்வதற்காகவே. வெளித் தோற்றத்தில் ஒன்று மனதில் ஒன்றாக இருக்கிறது. அதுமட்டுமின்றி மார்க்க விஷயத்திலும் பிடிப்பான ஈடுபாடு இல்லை. போரில் ஈடுபடாமல் வீட்டிலேயே தங்கியிருந்தால் இத்தனை உயிர்களை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது என்கின்றனர். நீங்கள் அவர்களிடம், "நீங்கள் வீட்டிலேயே இருந்துக் கொள்ளும் எண்ணம் இருந்திருந்தால் அதை வெளிப்படையாக தெரியப் படுத்தி இருக்கலாமே. இந்த போர் வீரர்களான மூஃமின்கள் உங்களை நம்பியும் இருக்க மாட்டார்கள். நீங்கள் வீட்டிலேயே தங்க இருந்தாலும் மரணம் உங்களை நெருங்காமல் இருந்துவிடுமா? இந்த மூஃமின்களின் கூட்டத்தாரை பாருங்கள். போர் அறிவிப்பு வந்ததும் உடனே அவர்கள் தாங்களாகவே போருக்கு ஆயத்தமாகி போர்முனைக்கு வந்துவிடுகிறார்கள்." என்று கூறிவிடு.

மரணம் விதிக்கப்பட்டுள்ளதோ, அவர்கள் (தம் கொலைக்களங்களுக்கு) மரணம் அடையும் இடங்களுக்குச் சென்றே இருப்பார்கள்!" என்று (நபியே!) நீர் கூறும். (இவ்வாறு ஏற்பட்டது) உங்கள் நெஞ்சங்களிலுள்ளவற்றை அல்லாஹ் சோதிப்பதற்காகவும், உங்கள் நெஞ்சங்களிலுள்ளவற்றை (அகற்றிச்) சுத்தப் படுத்துவதற்காகவும் ஆகும் - இன்னும், அல்லாஹ் உள்ளங்களில் உள்ளவற்றை அறிபவன்.

155 إِنَّ الَّذِينَ تَوَلَّوْا مِنكُمْ يَوْمَ
الْتَقَى الْجَمْعَانِ إِنَّمَا اسْتَزَلَّهُمُ
الشَّيْطَانُ بِبَعْضِ مَا كَسَبُوا ۖ وَلَقَدْ
عَفَا اللَّهُ عَنْهُمْ ۗ إِنَّ اللَّهَ غَفُورٌ
حَلِيمٌ ۝

155. இரு கூட்டத்தாரும் (போருக்காகச்) சந்தித்த அந்நாளில், உங்களிலிருந்து யார் திரும்பி விட்டார்களோ அவர்களை, அவர்கள் செய்த சில தவறுகளின் காரணமாக, ஷைத்தான் கால் தடுமாற வைத்தான்; நிச்சயமாக அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான் - மெய்யாகவே அல்லாஹ் மன்னிப்பவனாகவும் பொறுமையுடையோனாகவும் இருக்கின்றான்.

156 يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَكُونُوا
كَالَّذِينَ كَفَرُوا وَقَالُوا لِإِخْوَانِهِمْ
إِذَا ضَرَبُوا فِي الْأَرْضِ أَوْ كَانُوا
غُزًّى لَّوْ كَانُوا عِندَنَا مَا مَاتُوا
وَمَا قُتِلُوا لِيَجْعَلَ اللَّهُ ذَٰلِكَ
حَسْرَةً فِي قُلُوبِهِمْ ۗ وَاللَّهُ يُحْيِي
وَيُمِيتُ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ
بَصِيرٌ ۝

ருகூஃ 17

156. முஃமின்களே! நீங்கள் நிராகரிப்போரைப் போன்று ஆகிவிடாதீர்கள்; பூமியில் பிரயாணம் செய்யும்போதோ அல்லது போரில் ஈடுபட்டோ (மரணமடைந்த) தம் சகோதரர்களைப் பற்றி (அந்நிராகரிப்போர்) கூறுகின்றனர்: "அவர்கள் நம்முடனே இருந்திருந்தால் மரணம் அடைந்தோ, கொல்லப் பட்டோ போயிருக்கமாட்டார்கள்" என்று; ஆனால் அல்லாஹ் அவர்கள் மனதில் ஏக்கமும் கவலையும் உண்டாவதற்காகவே இவ்வாறு செய்கிறான்; மேலும், அல்லாஹ்வே உயிர்ப்பிக்கிறான்; அவனே மரிக்கச் செய்கிறான்; இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவை அனைத்தையும் பார்ப்பவனாகவே யிருக்கின்றான்.

ஆக இந்த போரில் ஏற்பட்ட நஷ்டத்தில் யார் மனதில் என்ன இருக்கிறது என்ற உண்மை வெளிப்பட்டுவிட்டது. முனாஃபிக்குகளிடம் இருந்த இரட்டை வேடப் போக்கும் முஃமின்களிடமிருந்த செயல் ஆர்வமும் பளிச்சிட்டது. அனைவருடைய மனதின் நிலை என்ன என்பது அல்லாஹ்விற்கு நன்கு தெரியும்.

155. களத்தில் இரு அணியினரும் சந்தித்தபோது, உங்களில் ஒரு சிலர் தம் இடத்திலிருந்து பின்வாங்கி ஓட ஆரம்பித்தனர். அல்லாஹ்வின் மீது ஈமான் இல்லாத காரணத்தினால் ஓடவில்லை. அவர்களிடம் இருந்த சில பலவீனத்தால் அந்த கண நேரத்தில் என்ன செய்வது என்று அறியாது மனோ இச்சைக்கு இணங்கியதால் சருகல்கள் ஏற்பட்டன. இப்படிப்பட்ட போர் சமயங்களில் ஏற்படும் சிறு தவறுகளுக்கு இறைச்சட்டத்தின் கீழ் மன்னிப்பு உண்டு. அதாவது பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை. பாதுகாப்பு விஷயங்களில் அல்லாஹ்வின் செயல்திட்டங்கள் மிகவும் உறுதிமிக்கவை ஆகும்.

156. இறை வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டவர்களே! அல்லாஹ்விற்கு மாற்றமாக செயல்படுபவர்களைப் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். மார்க்க சகோதரர்கள் பிரயாணத்திலோ அல்லது போரிலோ மரணமடைந்தவர்களைப் பற்றி, "நாம் வீட்டில் தங்கியிருப்பது போல் அவர்களும் தங்கியிருந்தால் அவர்களுக்கு மரணம் சம்பவித்து இருக்காது அல்லது கொல்லப்பட்டு இருக்கமாட்டார்கள்." என்கின்றனர். இப்படிப்பட்ட மனப்பான்மையை உருவாக்கி வைத்திருப்பது அல்லாஹ்விற்கு மாறுசெய்யும் செயலாகும். வாழ்வில் பிரச்சனையோ அல்லது இக்கட்டான சூழ்நிலை ஏற்படும்போதோ துணிவுடன் சமாளித்து எதிர்கொள்வதே உண்மையான மனித வாழ்க்கை ஆகும். இந்த பேருண்மை இவர்களுக்கு விளங்காமலே போய்விடுகிறது. இப்படிப்பட்ட கோழைகளின் மனதில வீர தீர செயல்களை செய்து சாதனைகளை படைப்பவர்களைப் பார்த்து ஏக்கமும் வருத்தமும் ஏற்படுகிறது. இதனால் இப்படிப்பட்ட பேச்சை பேசி வருகிறார்கள். வெறும் சுவாசிப்பதும் உண்பதும்தான் வாழ்க்கை என்றும் அந்த சுவாசம் நின்றுவிடுவது மரணம் என்றும் நினைத்துக் கொள்கின்றனர். உண்மையான வாழ்வும் மரணமும் என்பதே வேறு. ஒவ்வொருடைய செயலையும் கூர்ந்து கவனிக்கும் வல்லமை பெற்ற அல்லாஹ்வின் கொள்கை கோட்பாடோடு சம்பந்தப்பட்ட விஷயமாகும். அதன்படி வாழ்வு என்பது உயர் பண்புகளுடன் ஆக்கப்பூர்வமான செயல்களை செய்யக்கூடிய ஆற்றல்களுக்கு சொல்லப்படும். அவ்வாறு செயல்படும் போது மரணம் ஏற்பட்டால் அதை வீர மரணம் எனப்படும். எந்தவித ஆற்றலுமின்றி வாழும் ஜட வாழ்க்கைக்கு செத்த பிணத்திற்கு ஒப்பாகும். வீர தீர செயல்களை செய்து உலக சாதனைகளை படைப்பதே மனிதனின் உண்மையான வாழ்க்கை. இந்த ஆற்றல்கள் இல்லாவிட்டால் அந்த சமுதாயம்

செத்துவிடுகிறது.

157 وَلَئِنْ قُتِلْتُمْ فِي سَبِيلِ اللّٰهِ اَوْ مُتُّمْ لَمَغْفِرَةٌ مِّنَ اللّٰهِ وَرَحْمَةٌ خَيْرٌ مِّمَّا يَجْمَعُوْنَ ○

*157. இன்னும், அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் கொல்லப்பட்டாலும் அல்லது இறந்து விட்டாலும், அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் மன்னிப்பும், ரஹ்மத்தும் அவர்கள் சேர்த்து வைப்பதைவிட மிக்க மேன்மையுடையதாக இருக்கும்.*

157. ஆனால் தனி நபர் பலனுக்காகவோ அல்லது பாதுகாப்பு கருதியோ உயிரை போக்கிக் கொள்வதால் தியாகி ஆகிவிட்டதாக கருதமுடியாது. வீர மரணம் என்பது ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் நலனை நோக்கமாகக் கொண்டு செயல்படும் இறை ஆட்சியமைப்பை கட்டி காப்பதில் ஏற்படும் மரணத்திற்கு சொல்லப்படும். இவ்வாறு உயிர் நீத்தவர்கள் தம் வாழ்வில் செய்த சிறு தவறுகளின் பாதிப்பிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பு கிடைக்கும். இது அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நிற்கும். இது செல்வங்களை குவிப்பதற்காக செய்யும் செயல்களைவிட பன்மடங்கு சிறந்நததாகும்.

158 وَلَئِنْ مُّتُّمْ اَوْ قُتِلْتُمْ لَاِلَى اللّٰهِ تُحْشَرُوْنَ ○

*158. நீங்கள் மரணமடைந்தாலும் அல்லது கொல்லப்பட்டாலும் அல்லாஹ்விடமே நீங்கள் ஒருசேரக் கொண்டு வரப்படுவீர்கள்.*

158. ஏனெனில் உங்கள் வாழ்வு இயற்கை மரணத்தாலோ அல்லது கொல்லப் படுவதாலோ முடிந்து விடுவதில்லை. அதன் பின்பும் தொடர்கிறது. அதன் முன்னேற்றப் படித்தரங்களை கடந்து அல்லாஹ் நிர்ணயித்துள்ள இலக்கை சென்றடைகிறது. இப்படியாக நீங்கள் அனைவரும் ஒன்று திரட்டப்படுவீர்கள்.

159 فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِي الْاَمْرِ ۚ فَاِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۚ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ ○

*159. அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர்; (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள்; எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்திவிடுவீராக; அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக; தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்; பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப் பேற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்.*

159. மேலும் இறை ஆட்சிஅமைப்பின் கீழ் செயல்படுபவர்கள் அல்லாஹ்வின் சிறப்பு குணநலங்களில் ஒன்றான அன்பு என்னும் பாசப்பிணைப்பினை தம்மளவில் வளர்த்துக் கொள்கிறார்கள். (2:138) இதனால் இந்த அமைப்பை வழிநடத்திச் செல்லும் இறைத்தூதரும் அன்புடன் மென்மையாக நடந்துக் கொள்கிறார். (8:63) இந்த அமைப்பு சிறப்பாக செயல்படுவதற்கு இது மிகவும் அவசியமானதாகும். நபியே! ஒருவேளை நீர் அவர்களுடன் கடுகடுப்புடனும் கடின சித்தமுடனும் நடந்திருந்தால், இந்த பணியை நிறைவேற்றும் செயல்வீரர்கள் உம்மை விட்டு விலகி போயிருப்பார்கள். எனவே அவர்கள் தம் கடமையை நிறைவேற்றும் போது ஏற்படும் தவறுகளை பெரிது படுத்தாமல் அவர்கள் திருந்துவதற்கு கூடுமான வரை அவகாசம் அளிப்பீராக. அவர்களுடைய பாதுகாப்பு பற்றியும் கவனத்தில் கொள்வீராக. அவ்வாறு தவறுகள் நிகழும்போது அவற்றை நீக்க செயல் திட்டங்களை தீட்டவேண்டும். இதற்காக நீர் அவர்களை அழைத்து கலந்தாலோசித்து தக்க முடிவு எடுப்பீராக. அவ்வாறு முடிவெடுத்த பின் இந்த இறை ஆட்சியமைப்பின் மீது பரிபூரண நம்பிக்கை கொண்டு அதில் அனைவரும் நிலைத்து நின்று செயல்படவேண்டும். இவ்வாறு பொறுப்பு ஏற்றுக்கொண்டு சிறப்பாக பணியாற்றுவோருக்கு அல்லாஹ்வின் நேசம் கிடைக்கும். அதாவது இந்த ஆட்சியமைப்பிலும் மதிப்பும் உயர்பதவியும் கிடைக்கும்.

160 إِنْ يَنْصُرْكُمُ اللَّهُ فَلَا غَالِبَ لَكُمْ ۖ وَإِنْ يَخْذُلْكُمْ فَمَنْ ذَا الَّذِي يَنْصُرُكُمْ مِنْ بَعْدِهِ ۗ وَعَلَى اللَّهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُونَ ○

*160. (முஃமின்களே!) அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வானுைல், உங்களை வெல்பவர் எவரும் இல்லை; அவன் உங்களைக் கைவிட்டு விட்டால், அதன் பிறகு உங்களுக்கு உதவி செய்வோர் யார் இருக்கிறுர்கள்? எனவே, முஃமின்கள் அல்லாஹ்வின் மீதே (முழுமை யாக நம்பிக்கை பூண்டு) பொறுப்பேற் படுத்திக் கொள்ளட்டும்.*

160. அல்லாஹ்வின் இந்த வழிமுறைக் கொண்டுதான் சிறந்த சமுதாயம் உருவாக முடியும். அல்லாஹ்வின் வழிகாட்டுதலின் படி செயல்படுவோருக்குத் தான் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வெற்றியும் சந்தோஷமும் கிடைக்கும். அவ்வாறு செயல்பட்டு அல்லாஹ்வின் உதவி யாருக்கு கிடைக்கின்றதோ அவர்கள் மீது வேறு யாரும் எந்த அதிகாரமும் செலுத்த முடியாது. அல்லாஹ்வின் உதவி கிடைக்கும் படி யார் செயல்படவில்லையோ அவர்களுக்கு உதவிசெய்வோர் யார் ? இதை நீங்கள் என்றென்றைக்கும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே அல்லாஹ்வின் சட்டதிட்டங்களின் மீது பூரண நம்பிக்கை கொண்டு அதன்படி செயல்படுவதே முஃமின்களின் தலையாய கடமையாகும்.

161 وَمَا كَانَ لِنَبِيٍّ أَنْ يَغُلَّ ۚ وَمَنْ يَغْلُلْ يَأْتِ بِمَا غَلَّ يَوْمَ الْقِيَامَةِ ۚ ثُمَّ تُوَفَّىٰ كُلُّ نَفْسٍ مَا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ ○

*161. எந்த நபிக்கும் மோசடி செய்வது கூடாது. எவரேனும் மோசம் செய்வாராயின், அவர் மோசம் செய்ததை இறுதி நாளில் கொண்டு வருவார், அவ்வேளையில் ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது சம்பாதித்த (தற்குரிய) பலனை(க் குறைவின்றிக்) கொடுக்கப்படும். இன்னும், அவர்கள் எவ்வகையிலும் அநி யாயம் செய்யப்பட மாட்டார்கள்.*

161. சட்ட திட்டங்களின் மீது பரிபூரண நம்பிக்கை எப்போது ஏற்படும் என்றால் அதில் உண்மைக்கு புறம்பான எந்த விஷயமும் இருக்கக்கூடாது. அதுவும் இறைவனின் வழிகாட்டுதல் என்னும்போது அவை இறைத்தூதர் மூலமாகத்தான் வந்திருக்கவேண்டும். எனவே இறைத்தூதர் இறை வழிகாட்டுதல்கள் விஷயத்தில் உண்மைக்கு புறம்பான எந்த தகவலையும் கொடுத்து அநீதி இழைக்கமாட்டார் (69:44–46). இறைத்தூதரின் மறைவிற்குப் பின் அவர் பெயரை பயன்படுத்தி தவறான தகவல்களை கொடுத்தால் குர்ஆனிய ஆட்சியமைப்பு நிலைநிறுத்தப்பட்டு குர்ஆனுடைய விஷயங்கள் அனைவருக்கும் தெரியவரும் காலக்கட்டத்தில் தவறான தகவல்களைப் பற்றிய உண்மை வெளிச்சத்திற்கு வந்துவிடும். அவரவர் செய்த செயல்களுக்கு ஏற்ப தண்டனை அளிக்கப்படும். அந்த தண்டனை அளிப்பதில் யாருக்கும் சிறிதளவும் எந்த குறையும் வைக்கப்பட மாட்டாது. அவ்வாறு இங்கு தப்பித்து விட்டாலும் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்வில் தப்ப முடியாது.

162 أَفَمَنِ اتَّبَعَ رِضْوَانَ اللَّهِ كَمَنْ بَاءَ بِسَخَطٍ مِنَ اللَّهِ وَمَأْوَاهُ جَهَنَّمُ ۚ وَبِئْسَ الْمَصِيرُ ○

*162. அல்லாஹ்வின் விருப்பத்தைப் பின் பற்றி நடப்போர், அல்லாஹ்வின் கோபத் தைத் தம்மேல் வரவழைத்துக் கொண்டவர் போல் ஆவரா? (அல்ல - கோபத்தை வரவழைத்துக் கொண்டோருடைய) அவனது இருப்பிடம் நரகமேயாகும்; அது தங்குமிடங் களில் மிகவும் கெட்டதுமாகும்.*

162. நினைவில் கொள்ளுங்கள். மேலும் தவறான வழிகாட்டுதல்களால் அல்லாஹ்வின் வழிகாட்டுதலுக்கு மாற்றமாக செயல்பட ஆரம்பித்து விடுவீர்கள். அதனால் பிரச்சனைகள் பல ஏற்பட்டு அந்த சமுதாயம் நரகமாக மாறிவரும். அல்லாஹ்வின் வழிகாட்டுதலை முற்றிலும் அடிபணிந்து செயல்படுவோர் தம் சமுதாயத்தை நரகமாக்கிக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அந்த நரக வாழ்க்கை மனிதனின் எல்லா செயல் திட்டங்களையும் சுட்டு பொசுக்கிவிடும்.

163 هُمْ دَرَجَاتٌ عِنْدَ اللَّهِ ۗ وَاللَّهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ ○

*163. அல்லாஹ்விடத்தில் அவர்களுக்குப் பல நிலைகள் உள்ளன - இன்னும் அல்லாஹ் அவர்கள் செய்பவை அனைத்தையும் பார்ப் பவனுகவே இருக்கின்றுன்.*

163. ஆக அல்லாஹவின் வழிகாட்டுதலின்படி செயல்படுவோரின் உழைப்பிற்கு ஏற்றவாறு பதவியும் உயர்வும் கிடைக்கும். (6:133). இப்படியாக அந்த சமுதாயம் படிப்படியாக முன்னேறி வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடையும் (84:19). ஏனெனில் மனித செயலுக்கு ஏற்ற விளைவுகள் என்ற அல்லாஹ்வின் நியதி என்றென்றும் செயல்பட்டு வருகிறது.

164 لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِيْنَ
اِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا مِّنْ اَنْفُسِهِمْ
يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ
وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ
وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ
مُّبِيْنٍ ○

*164. நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களுக்கு அருள்புரிந்திருக்கின்றான்; அவன் அவர்களுக்கு அவர்களிலிருந்தே ஒரு ரஸூலை (தூதரை) அனுப்பி வைத்தான்; அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார்; இன்னும் அவர்களைப் (பாவத்தைவிட்டும்) பரிசுத்தமாக்குகிறார்; மேலும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார் - அவர்களோ நிச்சயமாக இதற்கு முன் பகிரங்கமான வழி கேட்டிலேயே இருந்தனர்.*

164. எனவே மனித வாழ்வில் வெற்றி தோல்வி, சரியானவை தவறானவை என்பதை அறிந்துக்கொள்ளும் உரைக்கல் இறை வேதமே என்கிறபோது அந்த வேத வழிகாட்டுதல்கள் தம் அசல் வடிவில் இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காகவே இறைவன் அவர்களிலிருந்தே ஒருவரை தூதராக தேர்ந்தெடுத்தான். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். ஏனெனில் இறை வழிகாட்டுதல் என்பது மனிதனின் சுய முயற்சியைக் கொண்டு கிடைக்கின்ற ஒன்றல்ல. இறைவன் புறத்திலிருந்து வஹீ என்னும் வழிகாட்டுதல் மூலமாக இறக்கி அருளப்படுகின்ற ஒன்றாகும். அந்த இறைத்தூதர் இறைவனின் சட்டதிட்டங்களை மக்கள் முன் சமர்ப்பிக்கின்றார். அதன் அடிப்படையில் ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்தி அனைவருடைய அறிவு ஆற்றல்களும் சிறப்பாக வளர்ந்து சமூக சீர்கேடுகளிலிருந்து சமுதாயத்தை தூய்மை ஆக்குகிறார். மேலும் இறைச் சட்டங்களை கண்மூடித்தனமாக பின்பற்ற வைப்பதில்லை. மாறாக அவற்றின் நோக்கங்கள் மற்றும் அவற்றை பின்பற்றுவதால் ஏற்படும் பலன்கள் – அதற்கு மாறு செய்வதால் ஏற்படும் தீய விளைவுகள் என்ன என்பதை தெளிவாக எடுத்துரைத்து அறிவுப்பூர்வமாக செயல்படும்படி அறிவுருத்துகிறார். இறைவன் புறத்திலிருந்து இப்படிப்பட்ட ஏற்பாடுகள் இல்லாதிருந்தால் இதற்கு முன் மனிதன் வழிகேட்டிலேயே மூழ்கி தவித்திருந்தது போல் இவர்களும் துயரத்தில் மூழ்கி இருந்திருப்பார்கள்.

165 اَوَلَمَّاۤ اَصَابَتْكُمْ مُّصِيْبَةٌ قَدْ
اَصَبْتُمْ مِّثْلَيْهَا ۙ قُلْتُمْ اَنّٰى هٰذَا ؕ
قُلْ هُوَ مِنْ عِنْدِ اَنْفُسِكُمْ ؕ اِنَّ
اللّٰهَ عَلٰى كُلِّ شَیْءٍ قَدِیْرٌ ○

*165. இன்னும் உங்களுக்கு (உஹதில்) ஒரு துன்பம் வந்துற்றபோது, நீங்கள் (பத்ரில்) அவர்களுக்கு இது போன்று இரு மடங்குத் துன்பம் உண்டு பண்ணியிருந்த போதிலும், "இது எப்படி வந்தது?" என்று கூறுகிறீர்கள்; (நபியே!) நீர் கூறும்: இது (வந்தது) உங்களிடமிருந்தேதான் - நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கிறான்."*

165. இந்த இறை வழிகாட்டுதலின்படி சமூக அமைப்பை ஏற்படுத்த விரும்பினால் உலகளாவிய எதிர்ப்பை சமாளிக்கவேண்டி இருக்கும். இதில் வெற்றி தோல்வி என்பதெல்லாம் நீங்கள் எந்த அளவிற்கு இறைச் சட்டங்களோடு ஒன்றி செயல்படுகிறீர்கள் என்பதை பொருத்தே ஏற்படும். உதாரணமாக பத்ரு களத்தில் நீங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டதால் பகைவர்களை முறியடித்தீர்கள். அதை தொடர்ந்து உஹது களத்தில் இந்த ஒருங்கிணைப்பு இல்லாததால் உங்களுக்கு பேரிழப்பு ஏற்பட்டது. உங்களுக்கு ஏற்பட்ட இழப்பைவிட பகைவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு இருமடங்காகும். இவ்வாறிருந்தும் இந்த இழப்பு எப்படி ஏற்பட்டது என்ற கேள்வி உங்கள் மனதில் எழுகிறது. இந்த இழப்பிற்கு நீங்கள்தான் காரணம் என்று அவர்களிடம் கூறிவிடு. நீங்கள் முற்றிலும் அடிபணிந்து செயல்பட்டிருந்தால் இந்த இழப்பு நேர்ந்திருக்காது. நினைவில் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் நிலைமாறா நரந்தர விதிமுறைகள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எல்லாமே அதன்படியே நடைபெற்று வரும். இதற்கு எதிராக எதுவும் நிகழ முடியாது. ஏனெனில் அவைகள் யாவும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் செயல்படுபவை ஆகும்.

166 وَمَآ أَصَابَكُمْ يَوْمَ الْتَقَى
الْجَمْعٰنِ فَبِإِذْنِ اللّٰهِ وَلِيَعْلَمَ
الْمُؤْمِنِيْنَ ۝

*166. மேலும், (நீங்களும், முஷ்ரிக்குகளும் ஆகிய) இரு கூட்டத்தினரும் சந்தித்த நாளெ யில் உங்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் அல் லாஹ்வின் அனுமதி கொண்டே தான் (ஏற் பட்டன; இவ்வாறு ஏற்பட்டதும்) முஃமின்களை (சோதித்து) அறிவதற்காகவேயாம்.*

166. அல்லாஹ்வின் இதே விதிமுறையின் படிதான் அந்த போரில் உங்களுக்கு நஷ்டமும் ஏற்பட்டது. அதே சமயம் உங்களுள் இறைக்கட்டளைக்கு கட்டுப்பட்டு செயல்படும் மூஃமின்கள் யார் என்பதையும் அதற்கு மாற்றமாக செயல்படும் முனாஃபிக்குகள் யார் என்பதையும் பிரித்தறியும் வாய்ப்பும் உங்களுக்கு கிடைத்தது.

167 وَلِيَعْلَمَ الَّذِيْنَ نَافَقُوْا ۚ وَقِيْلَ
لَهُمْ تَعَالَوْا قَاتِلُوْا فِيْ سَبِيْلِ
اللّٰهِ اَوِ ادْفَعُوْا ۚ قَالُوْا لَوْ نَعْلَمُ
قِتَالًا لَّا اتَّبَعْنٰكُمْ ۚ هُمْ لِلْكُفْرِ
يَوْمَئِذٍ اَقْرَبُ مِنْهُمْ لِلْاِيْمَانِ ۚ
يَقُوْلُوْنَ بِاَفْوَاهِهِمْ مَّا لَيْسَ
فِيْ قُلُوْبِهِمْ ۚ وَاللّٰهُ اَعْلَمُ بِمَا
يَكْتُمُوْنَ ۝

*167. இன்னும் (முனாஃபிக் தனம் செய்யும்) நயவஞ்சகரை(ப் பிரித்து) அறிவதற்கும் தான், அவர்களிடம் கூறப்பட்டது: "வாருங்கள்: அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள், அல்லது (பகைவர்கள் அணுகாதவாறு) தடுத்து விடுங்கள்," (அப்போது) அவர்கள் சொன் னார்கள்: "நாங்கள் போரைப் பற்றி அறிந் திருந்தால் நிச்சயமாக நாங்கள் உங்களைப் பின்பற்றியிருப்போம்." அன்றையதினம் அவர்கள் ஈமானைவிட குஃப்ரின் பக்கமே அதிகம் நெருங்கியிருந்தார்கள்; தம் உள்ளங்களில் இல்லாதவற்றைத் தம் வாய் களினால் கூறினர்; அவர்கள் (தம் உள்ளங்களில்) மறைத்து வைப்பதையெல்லாம் அல்லாஹ் நன்கு அறிகிறான்.*

167. அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி உருவாக்கிய அமைப்பைக் பாதுகாக்க போருக்கு செல்லும்படி அழைப்பு விடுத்தபோது அதற்கு அந்த முனாஃபிக்குகள் சாக்கு போக்கு சொல்லி வராமல் இருந்துவிட்டனர். இப்போது போரில் வெற்றி கிடைத்ததாக செய்தி வந்ததும் போரைப் பற்றிய தகவல் எங்களுக்கும் தெரிந்திருந்திருந்தால் நாங்களும் போரில் பங்கெடுத்திருப்போம் என்கின்றனர். போருக்கு அழைப்பு விடுத்த சமயம் அவர்கள் அல்லாஹ்வின் மீது இருந்த ஈமானைவிட அதற்கு எதிரான குஃப்ரு உடைய எண்ணங்களே மிகைத்திருந்தது. ஆதனால் போரில் கலந்துக் கொள்ளவில்லை. உண்மையிலேயே அவர்கள் பேசுவது உண்மையாக இருந்திருந்தால் போரில் கலந்துக்கொள்ள வேண்டியதுதானே. இப்போது அவர்களுடைய பேச்சு வேறுவிதமாய் இருக்கிறது. ஆக அவர்கள் உள்ளங்களில் ஒன்று பேச்சு ஒன்றாக உள்ளது. அவர்கள் உள்ளங்களில் ஊடுருவிச் செல்லும் எண்ணங்கள் அல்லாஹ்விற்கு தெரியாமல் போகுமா என்ன?

168 اَلَّذِيْنَ قَالُوْا لِاِخْوَانِهِمْ وَقَعَدُوْا
لَوْ اَطَاعُوْنَا مَا قُتِلُوْا ۚ قُلْ فَادْرَءُوْا
عَنْ اَنْفُسِكُمُ الْمَوْتَ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ۝

*168. (போருக்குச் செல்லாமல் அம் முனாஃபிக் குகள் தம் வீடுகளில்) அமர்ந்து கொண்டே (போரில் மடிந்த) தம் சகோதரர்களைப் பற்றி: "அவர்கள் எங்களைப் பின்பற்றியிருந்தால் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்" என்று கூறுகிறார்கள்; (நபியே!) நீர் கூறும்: "நீங்கள் (சொல்வதில்) உண்மையாளர்களானால் உங் களை மரணம் அணுகாவண்ணம் தடுத்து விடுங் கள் (பார்ப்போம் என்று).*

168. அவர்கள் போருக்குச் செல்வது ஒருபுறம் இருக்கட்டும். வீட்டில் அமர்ந்தபடியே போரில் மடிந்துபோன தம் சகோதரர்களைப் பற்றி என்ன பேசினார்கள். எங்களைப் போன்று அவர்களும் போரில் கலந்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் அவர்கள் கொல்லப்பட்டு இருக்க மாட்டார்களே. அதாவது அவர்கள் வீணாக தம் உயிர்களை போக்கிக் கொண்டனர் என்றார்கள். போரில் கலந்துக் கொண்டவர்கள் இலட்சியத்திற்காக போரிட்டனர். ஆனால் இவர்களோ வெற்றுப் பேச்சு பேசி வருகிறார்கள். இவர்கள் அனைவரும் எக்காலத்திற்கும் உயிருடன் இருக்கப் போகிறார்களா என்ன? இவர்களுக்கு மரணமே வராதா? அப்படி மரணம் நெருங்கும்போது அதை தடுத்துக்கொள்ளட்டும். பார்த்துக் கொள்ளலாம் என்று அவர்களிடம் சொல்லிவிடு.

169 وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي
سَبِيلِ اللَّهِ أَمْوَاتًا ۚ بَلْ أَحْيَاءٌ عِندَ
رَبِّهِمْ يُرْزَقُونَ ۝

169. அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணுதீர்கள் - தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.

169. மனிதனின் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றைப் பற்றிய உண்மை இந்த அறிவிலிகளுக்கு என்ன தெரியும். அல்லாஹ்வின் வழிகாட்டுதலின் படி உருவான அமைப்பை கட்டிக்காக தொடுத்த போரில் கொல்லப்பட்டோரை இறந்துவிட்டதாக எண்ணம் கொள்வது முறையல்ல. அயவர்கள் தியாகிகள் ஆகிவிடுகிறார்கள். அவர்கள் வாழ்வதற்கான அனைத்து வசதிகளும் அல்லாஹ்விடம் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அவை எவ்வாறு கிடைக்கின்றன என்ற ஞானம்தான் உங்களுக்கில்லை (2:154)(3:157)

170 فَرِحِينَ بِمَا آتَاهُمُ اللَّهُ مِن فَضْلِهِ
وَيَسْتَبْشِرُونَ بِالَّذِينَ لَمْ يَلْحَقُوا
بِهِم مِّنْ خَلْفِهِمْ أَلَّا خَوْفٌ عَلَيْهِمْ
وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

170. தன் அருள் கொடையிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக் கொண்டு அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள்; மேலும் (போரில் ஈடுபட்டிருந்த தம் முஃமினான சகோதரர்களில் மரணத்தில்) தம்முடன் சேராமல் (இவ்வுலகில் உயிருடன்) இருப்போரைப் பற்றி: “அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்” என்று கூறி மகிழ்வடைகிறார்கள்.

170. அல்லாஹ்வின் புறத்திலிருந்து தமக்கு கிடைத்துள்ள பெரும் பாக்கியத்தை எண்ணி அவர்கள் மகிழ்வடைகிறார்கள். மேலும் அவர்கள் செய்த தியாகங்களினால் இவ்வுலகில் வாழும் தம் மார்க்க சகோதரார்களுக்கும் எந்த பயமும் துக்கமும் இல்லாத சநதோஷமான வாழ்க்கை கிடைப்பதை உணர்ந்து பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

171 يَسْتَبْشِرُونَ بِنِعْمَةٍ مِّنَ اللَّهِ وَ
فَضْلٍ وَأَنَّ اللَّهَ لَا يُضِيعُ أَجْرَ
الْمُؤْمِنِينَ ۝

171. அல்லாஹ்விடமிருந்து தாங்கள் பெற்ற நிஃமத்துகள் (நற்பேறுகள்) பற்றியும், மேன்மையைப் பற்றியும் நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களுக்குரிய நற்கூலியை (ஒரு சிறிதும்) வீணாக்கி விடுவதில்லை என்பதைப் பற்றியும் மகிழ்வடைந்தோராய் இருக்கின்றார்கள்.

171. அல்லாஹ்வின் புறத்திலிருந்து தங்களுக்கு கிடைத்துள்ள இந்த மாபெரும் அருட்கொடைகளை பார்த்து அளவிலா சந்தோஷம் அடைகிறார்கள். மேலும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்று சிறப்பாக செயல்படுவோரின் உழைப்பு வீண் போவதில்லை என்பதையும் கண்கூடாக பார்த்துக் கொள்கிறார்கள். அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற நற்பலன்கள் கிடைத்திருப்பதை பார்த்து பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

172 الَّذِينَ اسْتَجَابُوا لِلَّهِ وَالرَّسُولِ مِنْ
بَعْدِ مَا أَصَابَهُمُ الْقَرْحُ ۚ لِلَّذِينَ
أَحْسَنُوا مِنْهُمْ وَاتَّقَوْا أَجْرٌ عَظِيمٌ ۝

ருகூஉ 18

172. அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுக்குப்(ப் போரில்) காயம்பட்ட பின்னரும் அல்லாஹ்வுடையவும், (அவனுடைய) ரஸூலுடையவும் அழைப்பை ஏற்(று மீண்டும் போருக்குச் சென்)றனர்; அத்தகையோரில் நின்றும் யார் அழகானவற்றைச் செய்து, இன்னும் பாவத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மகத்தான நற்கூலியிருக்கிறது.

172. இந்த மூஃமின்கள் எத்தகையோர் என்றால் தமக்கு போரில் காயங்கள் பல ஏற்பட்டு துயரங்களையும் சிரமங்களையும் சந்தித்த போதும் அதை சற்றும் பொருட்படுத்தாமல் அல்லாஹ்வும் ரசூலும் மீண்டும் போருக்கு அழைப்பு விடுத்தால் அவர்கள் உடனே முகமலர்ச்சியுடன் தயாராகி சென்றவர்கள் ஆவார்கள். இப்படியாக அல்லாஹ் காட்டிய வழியில் ஆட்சியமைப்பை ஏற்படுத்தி அதை கட்டிக்காக்கும் இலட்சியத்துடன் பணியாற்றினார்கள். இவர்களே சிறந்த வாழ்க்கை பெறும் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். (8:24)

173 اَلَّذِيْنَ قَالَ لَهُمُ النَّاسُ اِنَّ
النَّاسَ قَدْ جَمَعُوْا لَكُمْ فَاخْشَوْهُمْ
فَزَادَهُمْ اِيْمَانًا ۖ وَّقَالُوْا حَسْبُنَا اللّٰهُ
وَنِعْمَ الْوَكِيْلُ ۝

*173. மக்களில் சிலர் அவர்களிடம்: "திடமாக மக்களில் (பலர் உங்களுடன் போரிடுவதற்காகத்) திரண்டு விட்டார்கள், எனவே அப்படையைப்பற்றி அஞ்சிக் கொள்ளுங்கள்" என்று கூறி (அச்சுறுத்தி)னர்; ஆனால் (இது) அவர்களின் ஈமானைப் பெருக்கி வலுப்படச் செய்தது: "அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன். அவனே எங்களுக்குச் சிறந்த பாதுகாவலன்" என்று அவர்கள் கூறினார்கள்.*

173. இப்படிப்பட்ட உயர் இலட்சிய இஸ்லாமிய அமைப்பில் பணியாற்றும் இவர்களிடம் எதிர் தரப்பினர் திரட்டியுள்ள படைபலத்தைப் பற்றி கூறி அச்சுறுத்துகிறார்கள். மேலும் அதற்கு அஞ்சி ஒதுங்கி இருக்க உபதேசிக்கிறார்கள். ஆனால் செயல்வீரர்களான இந்த மூஃமின்களுக்கோ அவர்கள் மனதில் பீதியோ பயமோ ஏற்படுவதற்கு பதிலாக அல்லாஹ்வின் மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை மேலும் வலுவடையவே செய்கிறது. "அல்லாஹ்வை விட சிறந்த பாதுகாவலனோ உதவியாளனோ வேறு யாராவது இருக்கமுடியுமா?" என்று பதிலளித்து விடுகிறார்கள்.

174 فَانْقَلَبُوْا بِنِعْمَةٍ مِّنَ اللّٰهِ وَفَضْلٍ
لَّمْ يَمْسَسْهُمْ سُوْٓءٌ ۙ وَّاتَّبَعُوْا
رِضْوَانَ اللّٰهِ ۗ وَاللّٰهُ ذُوْ فَضْلٍ
عَظِيْمٍ ۝

*174. இதனால் அவர்கள் அல்லாஹ்விடமிருந்து நிஃமத்தையும் (அருட்கொடையையும்,) மேன்மையையும் பெற்றுத் திரும்பினார்கள்; எத்தகைய தீங்கும் அவர்களைத் தீண்டவில்லை; (ஏனெனில்) அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பின்பற்றினார்கள் - அல்லாஹ் மகத்தான கொடையுடையவனாக இருக்கிறான்.*

174. இப்படிப்பட்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் உறுதிப்பாடும் இருக்கும் மூஃமின்கள் தாம் எடுத்துக் கொண்ட பணியில் எவ்வித அச்சமுமின்றி வீரத்துடன் களத்தில் முன்னேறிய வண்ணம் இருந்தனர். மேலும் அவர்களுக்கு பாதிப்புகள் எதுவும் ஏற்படாமல் அல்லாஹ்வின் அருட்கொடைகளை பெற்று சந்தோஷத்துடன் வீடு திரும்பினார்கள். இதற்கு காரணம் அல்லாஹ்வின் விருப்பம் என்னவோ அதன்படியே அவர்கள் செயல்பட்டதுதான். எனவே அவர்கள் விரும்பிய மகத்தான வெற்றி அல்லாஹ்வின் நியதிப்படி அவர்களுக்கு கிடைத்துவிட்டது.

175 اِنَّمَا ذٰلِكُمُ الشَّيْطٰنُ يُخَوِّفُ اَوْلِيَآءَهٗ
فَلَا تَخَافُوْهُمْ وَخَافُوْنِ اِنْ كُنْتُمْ
مُّؤْمِنِيْنَ ۝

*175. ஷைத்தான்தான் தன் சகாக்களைக் கொண்டும் இவ்வாறு பயமுறுத்துகிறான்; ஆகவே நீங்கள் அவர்களுக்குப் பயப்படாதீர்கள் - நீங்கள் முஃமின்களாகயிருப்பின் எனக்கே பயப்படுங்கள்.*

175. சுயநலக்கார கும்பல் தம் சகாக்களுடன் விதவிதமான வதந்திகளை பரப்பி மக்கள் மனதில் அச்சுறுத்தலை ஏற்படுத்தவே முயலுகிறார்கள். (39:36) ஆனால் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்று நடக்கும் உங்களிடம் இந்த மிரட்டல் பேச்சிற்கு பயப்பட வேண்டியதில்லை. மாறாக நீங்கள் அஞ்சவேண்டியது அல்லாஹ்வை மட்டும்தான். அதாவது அல்லாஹ்வின வரம்புகளை மீறாமல் அஞ்சி செயல்பட வேண்டும்.

176 وَلَا يَحْزُنْكَ الَّذِيْنَ يُسَارِعُوْنَ
فِى الْكُفْرِ ۚ اِنَّهُمْ لَنْ يَّضُرُّوا اللّٰهَ
شَيْـًٔا ۗ يُرِيْدُ اللّٰهُ اَلَّا يَجْعَلَ لَهُمْ
حَظًّا فِى الْاٰخِرَةِ ۚ وَلَهُمْ عَذَابٌ
عَظِيْمٌ ۝

*176. 'குஃப்ரில் அவர்கள் வேகமாய்ச் சென்று கொண்டிருப்பது உம்மைக்கவலை கொள்ளச் செய்ய வேண்டாம்; நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கு ஒரு சிறு தீங்கும் செய்துவிட முடியாது; அல்லாஹ் அவர்களுக்கு மறுமையில் நற்பாக்கியம் எதுவும் ஆக்காமல் இருக்கவே நாடுகிறான்; அவர்களுக்குப் பெரும் வேதனையுமுண்டு.*

176. சமுதாயத்தை வழிநடத்தி செல்பவரே! அல்லாஹ்வின் வழிகாட்டுதலுக்கு எதிராக செயல்படுபவர்களின் செயல் வேகத்தைப் பார்த்து நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுடைய தகாத செயல்களால் இந்த ஆட்சியமைப்பிற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. அவர்களுடைய செயல்களால் ஏற்படும் தீய விளைவுகள் அவர்களைத் தான் பாதிக்கும். தற்காலிக சந்தோஷங்கள் கொஞ்சம் அவர்களுக்கு கிடைத்திடலாம். ஆனால் அவர்களுடைய வருங்கால வாழ்வில் எவ்வித நற்பாக்கியமும் நிச்சயமாக கிடைக்காது. அவர்கள் செய்துவரும் தீய செயல்களிலேயே மூழ்கி மடிந்து போவார்கள். இதுவே அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள நிரந்தர நடைமுறை சட்டமாகும்.

177 إِنَّ الَّذِينَ اشْتَرَوُا الْكُفْرَ بِالْإِيمَانِ
لَن يَضُرُّوا اللَّهَ شَيْئًا ۖ وَلَهُمْ عَذَابٌ
أَلِيمٌ ۝

*177. யார் (தங்கள்) ஈமானை விற்று (பதிலாக) குஃப்ரை விலைக்கு வாங்கிக் கொண்டார்களோ, அவர்கள் அல்லாஹ்வுக்கு ஒரு தீங்கும் செய்துவிட முடியாது - மேலும் அவர்களுக்கு நோவினை செய்யும் வேதனையும் உண்டு.*

177. மேலே சொன்ன விஷயம் அவர்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்பதல்ல. யாரெல்லாம் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்ட பின் அற்ப ஆதாயங்களுக்காக அதற்கு எதிராக செயல்படுகிறார்களோ அவர்களுக்கும் இந்த சட்டம் பொருந்தும். ஏனெனில் இப்படி செயல்படுவதால் ஏற்படும் அழிவுகள் அவர்களுக்குத்தானே அன்றி அல்லாஹ்விற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. அந்த வேதனையில் சிக்கி அழிந்துவிட வேண்டியதுதான்.

178 وَلَا يَحْسَبَنَّ الَّذِينَ كَفَرُوا أَنَّمَا
نُمْلِي لَهُمْ خَيْرٌ لِّأَنفُسِهِمْ ۚ إِنَّمَا
نُمْلِي لَهُمْ لِيَزْدَادُوا إِثْمًا ۚ وَلَهُمْ
عَذَابٌ مُّهِينٌ ۝

*178. இன்னும், அவர்களை (உடனுக்குடன் தண்டிக்காமல்) நாம் தாமதிப்பது (அந்த) காஃபிர்களுக்கு - நிராகரிப்பவர்களுக்கு - நல்லது என்று அவர்கள் கருத வேண்டாம்; (தண்டனையை) நாம் அவர்களுக்குத் தாமதப் படுத்துவதெல்லாம் அவர்கள் பாவத்தை அதிகமாக்குவதற்கே தான் - அவர்களுக்கு இழிவு தரும் வேதனையும் உண்டு.*

178. தற்காலிக உலக சுகங்களை மட்டும் நோக்கமாக கொண்டு வாழ்பவர்கள், மனித செயலுக்கேற்ற விளைவுகள் என்று அல்லாஹ் ஏற்படுத்திய சட்டம் எதுவும் கிடையாது என்று நினைக்கின்றனர். எனவே விளைவு என்ற அழிவைப் பற்றி அவர்களிடம் எச்சரிக்கை செய்யும் போது அது வெறும் அச்சுறுத்தல் என்று தவறாக எண்ணிக் கொள்கின்றனர். ஏனெனில் அந்த விளைவுகள் அவர்கள் முன் உடனே தோற்றத்திற்கு வருவதில்லை. அதற்குரிய நேரத்தில்தான் வருகிறது. ஒரு விதை முளைத்து செடியாவதற்கு நேரம் நிர்ணயிக்கப்பட்டது போலத்தான் இதுவும்.

ஆக இந்த காலத்தவணை என்பதெல்லாம் ஒரு சமுதாயம் தம் தவறை உணர்ந்து திருந்துவதற்கு அளிக்கப்பட்ட அவகாசமேயாகும். எனவே அந்த அழிவு ஏற்படுவதற்கு முன் எந்த சமுதாயம் திருந்தி அல்லாஹ் காட்டிய வழிமுறைப்படி வாழ முன் வருகிறதோ அதற்கு இந்த காலத்தவணை பலனுள்ளதாக அமையும். ஆனால் எந்த சமுதாயம் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை அலட்சியப்படுத்தி செயல்படுவதில் நிலைத்து விடுகிறதோ அது நிச்சயமாக அழிவை சந்திக்கும். ஏனெனில் அவர்கள் செய்துவரும் தீய செயல்களின் விளைவுகள் அதிகரித்து மனித ஆற்றல்கள் படிப்படியாக குறைந்து அழிவு என்னும் நரகத்தின் முகட்டில் கொண்டுபோய் நிறுத்திவிடும்.

179 مَا كَانَ اللَّهُ لِيَذَرَ الْمُؤْمِنِينَ عَلَىٰ
مَا أَنتُمْ عَلَيْهِ حَتَّىٰ يَمِيزَ الْخَبِيثَ
مِنَ الطَّيِّبِ ۗ وَمَا كَانَ اللَّهُ لِيُطْلِعَكُمْ
عَلَى الْغَيْبِ وَلَٰكِنَّ اللَّهَ يَجْتَبِي
مِن رُّسُلِهِ مَن يَشَاءُ ۖ فَآمِنُوا بِاللَّهِ
وَرُسُلِهِ ۚ وَإِن تُؤْمِنُوا وَتَتَّقُوا فَلَكُمْ
أَجْرٌ عَظِيمٌ ۝

179. ஒரு அமைப்பு வெற்றியை நோக்கி செல்ல வேண்டும் என்றால் அதில் இருப்பவர்களிடம் சமுதாய நலத்தில் அக்கரை கொண்ட தூயஉள்ளமும் மனஉறுதியுடன் செயல்வேகமும் இருக்கவேண்டும். ஏனெனில் உலகில் எந்த ஒரு எழுச்சி ஏற்பட்டாலும் அதன் ஆரம்பக்காலக் கட்டத்தில் அனைத்து தரப்பு மக்களும் அதில் சேர்ந்துக் கொள்வார்கள். ஆனால் அதை தொடர்ந்து போராட்டம் மற்றும் கஷ்ட நஷ்டங்களை சந்திக்கவேண்டிய நிலை வரும்போதுதான் அதில் மாசு படிந்த உள்ளங்கள் நீங்கி தூய உள்ளமுடையவர்கள் மட்டும் நிலைத்திருப்பார்கள். ஆனால் யார் எந்த மனோ நிலையில் உள்ளவர்கள் என்ற விஷயத்தை முன்கூட்டியே வஹீ மூலம் அறிவிக்கப்படுவதில்லை. அந்த போராட்டங்களினால் ஏற்படும் சோதனைகளில் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்துவிடும். இதனால் தம்மை அந்த அமைப்பில் சேர அனுமதிக்கப்பட வில்லை என்று யாரும் பழி சுமத்த இடமில்லாமல்

*179. (காஃபிர்களே!) தீயவர்களை நல்லவர்களைவிட்டும் பிரித்தறிவிக்கும் வரையில் முஃமின்களை நீங்கள் இருக்கும் நிலையில் அல்லாஹ் விட்டு வைக்க (நாட)வில்லை; இன்னும், அல்லாஹ் உங்களுக்கு மறைவானவற்றை அறிவித்து வைப்பவனாகவும் இல்லை; ஏனெனில் (இவ்வாறு அறிவிப்பதற்கு) அல்லாஹ் தான் நாடியவரைத் தன் தூதர்களிலிருந்து தேர்ந்தெடுக்கிறான். ஆகவே அல்லாஹ்வின் மீதும், அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொள்ளுங்கள்; நீங்கள் நம்பிக்கை கொண்டு பயபக்தியுடன் நடப்பீர்களாயின் உங்களுக்கு மகத்தான நற்கூலியுண்டு.*

போய்விடுகிறது. எனவே தூய உள்ளம் படைத்த மூஃமின்கள் யார் கபட நெஞ்சமுள்ள முனாஃபிக்குகள் யார் என்ற விஷயம் அல்லாஹ்விற்கு நன்கு தெரிந்திருந்தும் வஹீ மூலமாக இதை அறிவிப்பதில்லை. மறைவான விஷயங்களைப் பற்றி, தான் பொருந்திக்கொண்ட தூதர் மூலமாக உலக மக்களுக்கு அறிவிப்பது என்னவோ உண்மைதான் (72:26–27). ஆனால் அமைப்பில் இணைந்துள்ள மக்களில் மூஃமின்கள் யார் முனாஃபிக்குகள் யார் என்ற விஷயத்தை இறைத்தூதருக்கும் வஹீ மூலமாக அறிவிக்கப் படுவதில்லை. காரணம் இதை அவர்களுடைய முகபாவனை மற்றும் செயல்பாடுகளைக் கொண்டே அறிந்துக்கொள்ள முடியும் (47:29–30). ஆக யார் இறை வழிகாட்டுதலை மனதார ஏற்றுக்கொண்டு அதில் நிலைதிருந்து செயல்படுகிறார்களோ அவர்களுக்கே அல்லாஹ்விடமிருந்து நிச்சமயாக நற்கூலி உண்டு.

180 وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ يَبْخَلُوْنَ بِمَآ
اٰتٰهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ هُوَخَيْرًا
لَّهُمْ ؕ بَلْ هُوَ شَرٌّ لَّهُمْ ؕ سَيُطَوَّقُوْنَ
مَا بَخِلُوْا بِهٖ يَوْمَ الْقِيٰمَةِ ؕ وَ
لِلّٰهِ مِيْرَاثُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ
وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ۠

*180. அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் உலோபத்தனம் செய்கிறார்களோ அது தமக்கு நல்லது என்று (அவர்கள்) நிச்சயமாக எண்ண வேண்டாம் - அவ்வாறன்று! அது அவர்களுக்குத் தீங்குதான்; அவர்கள் உலோபத் தனத்தால் சேர்த்து வைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமையில் அவர்கள் கழுத்தில் அரிகண்டமாக போடப்படும்; வானங்கள், பூமி ஆகியவற்றில் (இருக்கும் அனைத்துக்கும்) அனந்தர பாத்தியதை அல்லாஹ்வுக்கே உரியதாகும். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் அறிகிறான்.*

180. மேலும் ஒட்டு மொத்த சமுதாய பரிபாலன நலனை நோக்கமாக கொண்டு அல்லாஹ் காட்டிய வழியில் ஆட்சியமைப்பு ஏற்படுத்தப் படுகிறது. எனவே அல்லாஹ்வின் அருளினால் உங்களுக்கு கிடைத்துள்ள செல்வங்களிலிருந்து இந்த அமைப்பின் வளர்ச்சிக்காக வழங்குங்கள். அதில் உலோபித்தனம் செய்வது நல்லது என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். அது உண்மையிலேயே மிகவும் உங்களுக்கு தீங்கானதாகும். அல்லாஹ் காட்டிய வழியில் பரிபாலன அமைப்பு நிலைபெற்று முழு அளவில் செயல்படும் காலக் கட்டத்தில் இந்த செல்வக் குவியலே உங்களுக்கு அரிகண்டமாக மாறிவிடும். அதுமட்டுமின்றி இந்த வேதனை மரணத்திற்கு பின்பும் தொடரும்.

வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள பரிபாலன அமைப்பு மூலமாகத்தான் உங்களால் செல்வங்களை பெருக்கிக்கொள்ள முடிகிறது. எனவே இந்த செல்வங்கள் எல்லாம் அல்லாஹ்விற்கு சொந்தமானவை. இந்த செல்வங்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காகவே தம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவற்றை குவித்து வைத்துக் கொள்வது அல்லாஹ்வின் பரிபாலன சட்டத்திற்கு எதிரானவை. இதை உணர்ந்து நீங்கள் செயல்பட்டிருக்க வேண்டும். ஆக நீங்கள் செய்வது யாவும் அல்லாஹ்விற்கு நன்கு தெரியும் என்று அவர்களிடம் எடுத்து கூறிவிடு.

181 لَقَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّذِيْنَ قَالُوْٓا
اِنَّ اللّٰهَ فَقِيْرٌ وَّنَحْنُ اَغْنِيَآءُ ۘ
سَنَكْتُبُ مَا قَالُوْا وَقَتْلَهُمُ الْاَنْبِيَآءَ
بِغَيْرِ حَقٍّ ۙ وَّنَقُوْلُ ذُوْقُوْا عَذَابَ
الْحَرِيْقِ ۝

181. சிறப்பாக சகல வசதிகளோடு வாழும் செல்வ சீமான்கள் நாம். எனவே யாருடைய ஆதரவும் தேவையில்லை. ஆனால் அல்லாஹ்வின் பரிபாலன அமைப்பு மிகவும் வசதியற்ற நிலையில் இருக்கிறது. எனவே அது நம்முடைய ஆதரவை தேடுகிறது. இப்படி பேசிவருபவர்களின் பேச்சு அல்லாஹ்விற்கு தெரியாமல் இல்லை. இவர்களுடைய ஒவ்வொரு பேச்சும் செயலும் துல்லியமாக பதிவு செய்யப்படுகிறது. இவர்களுக்கு மற்றவர்களைப் பற்றி என்ன கவலை இருக்கப்போகிறது. தமக்கு யாருடைய ஆதரவும் தேவையில்லை என்ற மமதையில் மூழ்கியிருக்கிறார்கள். எனவேதான்

## ருகூஃ 19

*181. "நிச்சயமாக அல்லாஹ் ஏழை; நாங்கள்தாம் சீமான்கள்" என்று கூறியவர்களின் சொல்லை திடமாக அல்லாஹ் கேட்டுக் கொண்டான்; (இவ்வாறு) அவர்கள் சொன்னதையும் அநியாயமாக நபிமார்களை அவர்கள் கொலை செய்ததையும் நாம் பதிவு செய்து கொள்வோம், "சுட்டுப் பொசுக்கும் நரக நெருப்பின் வேதனையைச் சுவையுங்கள்" என்று (அவர்களிடம் மறுமையில்) நாம் கூறுவோம்.*

182 ذَٰلِكَ بِمَا قَدَّمَتْ أَيْدِيكُمْ وَأَنَّ اللَّهَ لَيْسَ بِظَلَّامٍ لِلْعَبِيدِ

*182. இதற்குக் காரணம் முன்னமேயே உங்கள் கைகள் செய்து அனுப்பிய கெட்ட செயல்களேயாகும்; நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களுக்கு எவ்வித அநீதியும் செய்பவனல்லன்.*

அல்லாஹ்வின் வழிகாட்டுதல்படி பரிபாலன அமைப்பை ஏற்படுத்த அழைப்பு விடும் இறைத்தூதர்களை கொல்லவே முற்பட்டனர். இவர்களுடைய செல்வக் குவியலும் மமதை பேச்சும் என்றென்றைக்கும் நிலைத்து நிற்குமா? சமுதாயத்தில் ஏற்படவேண்டிய மறுமலர்ச்சி ஏற்பட்டே தீரும். அப்படி ஒரு காலக்கட்டத்தில் இவர்களுடைய இந்த போக்கு நீடிக்காது. அப்போது அவர்களுடைய எல்லா சந்தோஷங்களையும் சுட்டு பொசுக்கி நரகமாக மாறிவிடும். இதை அவர்களுக்கு எச்சரித்து விடுங்கள்.

182. அவர்களுக்கு கொடுக்கப்படும் இந்த வேதனை அவர்கள் செய்து வந்த தீயச் செயல்களின் விளைவாக அவர்கள் முன் வந்து நிற்பவையே ஆகும். அவரவர் செய்த குற்றங்களுக்கு தகுந்த தண்டனைதான் கொடுக்கப்படும். அல்லாஹ்வின் புறத்திலிருந்து யாருக்கும எவ்வித அநீதியும் இழைக்கப்படமாட்டாது.

183 الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ عَهِدَ إِلَيْنَا
أَلَّا نُؤْمِنَ لِرَسُولٍ حَتَّىٰ يَأْتِيَنَا
بِقُرْبَانٍ تَأْكُلُهُ النَّارُ ۗ قُلْ قَدْ
جَاءَكُمْ رُسُلٌ مِنْ قَبْلِي بِالْبَيِّنَاتِ
وَبِالَّذِي قُلْتُمْ فَلِمَ قَتَلْتُمُوهُمْ
إِنْ كُنْتُمْ صَادِقِينَ

*183. மேலும் அவர்கள், "எந்த ரஸூலாக இருந்தாலும், அவர் கொடுக்கும் குர்பானியை (பலியை) நெருப்பு சாப்பிடு(வதை நமக்குக் காண்பிக்கு)ம் வரை அவர் மீது நாங்கள் விசுவாசம் கொள்ள வேண்டாம்" என்று அல்லாஹ் எங்களிடம் உறுதிமொழி வாங்கியுள்ளான்" என்று கூறுகிறார்கள். (நபியே!): "எனக்கு முன்னர் உங்களிடம் வந்த தூதர்களில் பலர், தெளிவான ஆதாரங்களையும், இன்னும் நீங்கள் கேட்டுக்கொண்ட (படி பலியை நெருப்பு உண்ப)தையும் திடமாகக் காண்பித்தார்கள். அப்படியிருந்தும் ஏன் அவர்களை நீங்கள் கொன்றீர்கள்? நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இதற்கு பதில் சொல்லுங்கள்" என்று நீர் கூறும்.*

183. அதுமட்டுமின்றி அவர்களுடைய பேச்சு எவ்வாறு உள்ளது என்பதை கவனியுங்கள். "ஒருவரை அல்லாஹ்வின் தூதராக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றால் அவர் இறைவனுக்கு குர்பானி கொடுக்க வேண்டும். அதை நெருப்பு தீண்டி இறைவன் ஏற்றுக் கொள்வதாக நாம் கண்கூடாக காண வேண்டும். அதன் பின்புதான் அவரை இறைத்தூதராக ஏற்று அவர் மீது விசுவாசம் கொள்ளமுடியும். இப்படித்தான் அல்லாஹ் நம்மிடம் உறுதி மொழி வாங்கியுள்ளான்" என்று பேசி வருகிறார்கள். இவைகளெல்லாம் அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட கற்பனை கதைகளாகும். அல்லாஹ் யாரிடமும் அப்படி ஒரு உறுதி மொழி வாங்கவில்லை.

நபியே நீர் அவர்களிடம், "ஒரு வேளை உங்களுடைய பேச்சில் உண்மை இருக்கிறது என்றே வைத்துக் கொள்வோம். அதாவது எனக்கு முன் வந்த இறைத் தூதர்கள் உங்கள் கூற்றின்படி இறைவனுக்கு குர்பானி கொடுத்து தம்மை இறைத் தூதர் என்று நிரூபதித்தனர் என்றே வைத்துக் கொள்வோம். இது உண்மை என்றால் நீங்கள் அவர்களை பின்பற்றி நடப்பதற்கு பதிலாக அவர்களை கொலை செய்யும் அளவிற்கு துணிந்ததற்கு காரணம் என்ன? இதற்கு பதிலளியுங்கள்." என்று கேளும்.

184 فَإِنْ كَذَّبُوكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ
مِنْ قَبْلِكَ جَاءُوا بِالْبَيِّنَاتِ وَالزُّبُرِ
وَالْكِتَابِ الْمُنِيرِ

*184. என்வே, உம்மை அவர்கள் பொய்யபித்தால் (நீர் கவலையுற வேண்டாம், ஏனெனில்) உமக்கு முன்னர் தெளிவான ஆதாரங்களையும், ஆகமங்களையும், பிரகாசமான வேதத்தையும் கொண்டு வந்த நபிமார்களும் (அக்கால மக்களால்) பொய்ப்பிக்கப் பட்டிருக்கின்றனர்.*

184. இப்படி அவர்கள் பேசி வருவது புதிதான ஒன்றல்ல. உமக்கு முன் வந்த ஒவ்வொரு இறைத் தூதரிடமும் இப்படித்தான் ஏதாவது ஒரு காரணத்தை காட்டி அவரை ஏற்க மறுத்து இறை வழிகாட்டுதல்களை புறக்கணித்தனர். உமக்கு முன் வந்த ஒவ்வொரு இறைத் தூதரும் அவர்களிடம் தெளிவான அறிவுப்பூர்வமான ஆகமங்களும் வாழ்வின் ஒளிமயமான சட்ட திட்டங்களையும் எடுத்திரைத்தனர். ஆனால் அவர்களோ இப்படிப்பட்ட சாக்கபோக்குகளை சொல்லி அவற்றை பொய்ப்பிக்கவே முற்பட்டனர்.

185 كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ الْمَوْتِ ۗ وَإِنَّمَا
تُوَفَّوْنَ أُجُورَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ ۖ فَمَن
زُحْزِحَ عَنِ النَّارِ وَأُدْخِلَ الْجَنَّةَ
فَقَدْ فَازَ ۗ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ إِلَّا
مَتَاعُ الْغُرُورِ ۝

*185. ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும்; அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும்; எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிருரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார்; இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை.*

185. மேலும் அவர்களிடம், "உங்களுடைய தர்க்கங்களும் கேலிப்பேச்சும் தவறான போக்குகளும் தற்காலிக உலக வாழ்வில் செய்துக் கொள்ளலாம். சிறிது காலத்திற்கு சுகங்களையும் அனுபவித்தும் கொள்ளலாம். ஆனால் எந்த உயிரினமும் இவ்வுலகில் தொடர்ந்து வாழ முடியாதே. இவ்வுலகை விட்டு பிரிந்து போகவேண்டிய கட்டாயத்தில் தானே இருக்கிறது. அது போல நீங்களும் மரணத்தை சந்தித்தே ஆக வேண்டுமே. மனிதனுடைய வாழ்க்கை மரணத்திற்கு பின்பும் தொடர வேண்டும் என்பதுதானே அல்லாஹ் நிர்ணயித்துள்ள சட்டம். ஆக நீங்கள் செய்து வரும் செயல்களுக்குரிய பலன்களை இவ்வுலகில் பெறவில்லை என்றாலும் மரணத்திற்கு பின் தொடர்கின்ற வாழ்வில் முழுமையாக நிச்சயமாக பெற்றுக் கொள்வீர்கள். அங்கு கிடைக்கும் சுவர்க்கமும் நரகமும் அவரவர் இவ்வுலகில் செய்து வந்த செயல்களைப் பொருத்தே அமையும். ஆக எவன் ஒருவன் இவ்வுலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் நரக வேதனையிலிருந்து மீண்டு சுவர்க்க வாழ்வை தேடிக் கொள்கின்றானோ அவன்தான் உண்மையான வெற்றியாளன். (2:201) (10:63-64) (14:27) மேலும் மரணத்திற்கு பின் தொடர்கின்ற வாழ்க்கை நிரந்தரமானதாகும். எனவே இவ்வுலகில் கிடைக்கின்ற சுகமோ சொற்ப கால பலன்களே ஆகும்." என்பதை அவர்களுக்கு விளக்கிவிடுங்கள்.

186 لَتُبْلَوُنَّ فِيٓ أَمْوَالِكُمْ وَأَنفُسِكُمْ
وَلَتَسْمَعُنَّ مِنَ الَّذِينَ أُوتُوا الْكِتٰبَ
مِن قَبْلِكُمْ وَمِنَ الَّذِينَ أَشْرَكُوٓا أَذًى
كَثِيرًا ۚ وَإِن تَصْبِرُوا وَتَتَّقُوا فَإِنَّ
ذٰلِكَ مِنْ عَزْمِ الْأُمُورِ ۝

*186. (முஃமின்களே!) உங்கள் பொருள்களிலும், உங்கள் ஆத்மாக்களிலும் திடமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்; உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டோரிடமிருந்தும், இணை வைத்து வணங்குவோரிடமிருந்தும் நிந்தனைகள் பலவற்றையும் செவிமடுப்பீர்கள்; ஆனல் நீங்கள் பொறுமையை மேற்கொண்டு, (இறைவனிடம்) பயபக்தியோடு இருந்தீர்களானல் நிச்சயமாக அதுவே எல்லாக் காரியங்களிலும் (நன்மையைத் தேடித் தரும்) தீர்மானத்துக்குரிய செயலாகும்.*

186. இறை வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டவர்களே! உங்களுடைய மோதல்கள் இப்படிப் பட்டவர்களோடுதான் இருக்கும். இந்த மோதல்களில் உங்களுக்கு பொருட்சேதமும் உயிர்சேதமும் ஏற்பட்டு பல வகையில் சோதனைகளுக்கு ஆளாவீர்கள். (2:155) அது மட்டுமின்றி வேதமுடையவர்களும் மனோ இச்சைபடி வாழும் முஷ்ரிக்குகளும் உங்களுக்கு எதிராக பல வகையில் தொந்திரவு செய்வார்கள். மனவருத்தம் ஏற்படும்படி பேசியும் வருவார்கள். இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் நீங்கள் மன உறுதியுடன் உங்கள் செயல் திட்டங்களில் நிலைத்திருந்து செயல்படுங்கள். அல்லாஹ்வின் வழிகாட்டுதலை எப்போதும் பேணி நடங்கள். இதுவே உங்களுடைய உயர் இலட்சியங்களுக்கு சான்றாக விளங்கும். இது ஒரு மாபெரும் வல்லமையாகும்.

187 وَإِذْ أَخَذَ اللّٰهُ مِيثَاقَ الَّذِينَ
أُوتُوا الْكِتٰبَ لَتُبَيِّنُنَّهُۥ لِلنَّاسِ وَلَا
تَكْتُمُونَهُۥ فَنَبَذُوهُ وَرَآءَ ظُهُورِهِمْ
وَاشْتَرَوْا بِهِۦ ثَمَنًا قَلِيلًا ۖ فَبِئْسَ
مَا يَشْتَرُونَ ۝

*187. தவிர வேதம் கொடுக்கப்பட்டோரிடம் அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும், அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீர் நினைவுபடுத்துவீராக); அப்பால், அவர்கள் அதைத் தங்கள் முதுகுகளுக்குப் பின்னல் எறிந்துவிட்டு; அதற்குப் (பதிலாகச்) சொற்ப கிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள் - அவர்கள் (இவ்வாறு) வாங்கிக் கொண்டது மிகக் கெட்டதாகும்.*

187. இந்த வேதமுடையவர்கள் அல்லாஹ் அவர்களிடம் உறுதிமொழி வாங்கியதாக ஆதாரமற்ற விஷயங்களை கூறி வருகிறார்கள்.(3:183) அவர்களிடம் அல்லாஹ் உண்மையிலேயே வாங்கிக் கொண்ட உறுதிமொழி என்னவென்று தெரியுமா? அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களின் படி தாமும் வாழ்ந்து அவற்றை அனைத்து தரப்பு மக்களிடமும் தெளிவாக எடுத்துரைத்து அனைவரும் சிறப்பாக வாழ வழிசெய்ய வேண்டும் (2:83-84). இறை வழிகாட்டுதல்களில் எதையும் மக்களிடம் மறைக்கக் கூடாது. இதுதான

அவர்களிடம் அல்லாஹ் வாங்கிக்கொண்ட உறுதிமொழி. ஆனால் அவர்களோ அந்த உறுதிமொழிகளை எல்லாம் புறந்தள்ளிவிட்டு தாமே உருவாக்கி வைத்துக்கொண்ட ஷரீயத்து என்கிற சட்ட விதிமுறைகளை பின்பற்றி வருகின்றனர். அதுவும் அவர்கள் உலக ஆதாயங்களுக்காகவே செய்து வருகின்றனர். அவர்கள் சற்றே சிந்தித்து செயல்பட்டிருந்தால் அவர்கள் செய்துவருவது எவ்வளவு பெரிய நஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்திருப்பார்கள்.(2:16)

188 لَا تَحْسَبَنَّ الَّذِينَ يَفْرَحُونَ بِمَا أَتَوا وَّيُحِبُّونَ أَن يُحْمَدُوا بِمَا لَمْ يَفْعَلُوا فَلَا تَحْسَبَنَّهُم بِمَفَازَةٍ مِّنَ الْعَذَابِ ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ ○

*188. எவர் தாம் செய்த (சொற்பமான) தைப்பற்றி மகிழ்ச்சி கொண்டும்; தாம் செய்யாததை (செய்ததாகக் காட்டிக்) கொண்டு புகழப்படவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் வேதனையிலிருந்து வெற்றியடைந்து விட்டார்கள் என்று (நபியே!) நீர் ஒரு போதும் எண்ணாதீர் - அவர்களுக்கு நோவினை தரும் வேதனையுண்டு.*

188. இந்த வேதமுடையவர்களில் உள்ள மத குருமார்கள் தாம் செய்து வரும் அற்பமான செயல்களைக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள். அதாவது மக்களிடம் போதித்து வருகிறார்கள். இவ்வாறு செய்வது மிகப்பெரிய சாதனை என்று நினைத்துக் கொள்கிறார்கள். அதை அவர்களும் பின்பற்றுவதில்லை — பின்பற்றும்படியாக எதுவும் அதில் இருக்காது. மற்றவர்கள் தம்மை பாராட்டவேண்டும் என்பதற்காகவே செயல்படுகிறார்கள். உண்மையில் பாராட்டு என்பது உலக மக்கள் நன்மைக்காக ஒருவர் செய்யும் செயற்கரிய செயலைக் கொண்டுதான் ஏற்படும். ஆக இவ்வாறு அவர்கள் மக்களை ஏமாற்றி வருவது போல அல்லாஹ்வையும் ஏமாற்றி விடலாம் என்று தப்பு கணக்கு போடுகிறார்கள். அவர்கள் செய்யும் செயல்களுக்கு அல்லாஹ்விடம் கிடைக்கும் வேதனையிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்பதை அவர்களிடம் ஆணித்தரமாக எடுத்துரையுங்கள்.

189 وَلِلَّهِ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۗ وَاللَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ○

*189. வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது; இன்னும் அல்லாஹ் எல்லாப் பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன்.*

189. ஏனெனில் வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தும் ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில்தான் செயல்பட்டு வருகின்றன. எனவே எல்லா படைப்புகளும் அல்லாஹ் நிர்ணயித்துள்ள விதிமுறைகளின் படியே செயல்படுகின்றன. ஆக அந்த விதிமுறைகளின்படி அவரவர் செய்து வரும் செயல்களுக்கு ஏற்ற பலன்களைத்தான் பெற்றுக்கொள்வார்கள். (10:4) (34:3-4) (53:31)

190 إِنَّ فِي خَلْقِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ اللَّيْلِ وَالنَّهَارِ لَآيَاتٍ لِّأُولِي الْأَلْبَابِ ○

ருகூஃ 20

*190. நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும்; இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன.*

190. கண்மூடித்தனமான மூடநம்பிக்கையில் வாழ்பவர்களுக்கு இந்த உண்மை எல்லாம் புரியாது. எதையும் சிந்தித்து செயல் படுவோர்க்குத் தான் இந்த உண்மை புரியும். நல்ல அறிவாற்றல் உடைய இவர்கள் உலகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதையும் அதன் நோக்கத்தைப் பற்றியும் சிந்திப்பார்கள். மாறி மாறி வரும் இரவு பகலைக்கொண்டு இந்த பூமி எவ்வாறு சிறப்பாக செயல்படுகிறது என்பதையும், அதைக் கொண்டுதான் உயிரினங்கள் உயிர் வாழமுடிகிறது என்பதை சிந்தித்து உணர்வார்கள். அவர்களுக்கே அல்லாஹ்வின் அளவற்ற வல்லமையைப் பற்றி அத்தாட்சிகள் பல கிடைக்கும்.

191 الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللّٰهَ قِيٰمًا وَّقُعُوْدًا
وَّعَلٰى جُنُوْبِهِمْ وَيَتَفَكَّرُوْنَ فِىْ
خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ رَبَّنَا مَا
خَلَقْتَ هٰذَا بَاطِلًا سُبْحٰنَكَ فَقِنَا
عَذَابَ النَّارِ

*191. அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங்களில் (சாய்ந்து) இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள்; வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, "எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணைகப் படைக்கவில்லை; நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!" (என்றும்;)*

191. இப்படி அறிவாற்றலுடைய இவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் அல்லும் பகலும் நின்ற நிலையிலும் அமர்ந்திருக்கும் போதும் படுத்திருக்கும் போதும் அல்லாஹ் நிர்ணயித்துள்ள சட்டதிட்டங்களைப் பற்றி ஆராய்வார்கள். அகிலங்கள் மற்றும் பூமியின் படைப்பை பற்றியும் அவைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றியும் ஆராய்வார்கள். இப்படி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளும் இவர்கள் தம்மை பரிபாலிக்கும் அல்லாஹ்வின் படைப்புகள் எதுவும் வீணானது அல்ல என்பதை அறிந்துக் கொள்வார்கள். அதாவது ஆராய்ச்சிகளின் மூலம் கிடைக்கும் கண்டுபிடிப்புகள் யாவும் உலக மக்களுக்கு பயன் தரும் வகையில் ஆக்கப்பூர்வமான நோக்கங்களுக்காகவே படைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவார்கள். மேலும் அவற்றை தவறாக பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் விபரீத விளைவுளைப் பற்றி எண்ணி அஞ்சுவார்கள்.

எனவே இவர்கள், "இறைவா! தீய விளைவுகளுக்காக நீ அவற்றை படைத்துள்ளதாக எண்ணுவதே மிகப்பெரிய பாவமாகும். இப்படிப்பட்ட எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்தான் நீ. அதே சமயம் உன் படைப்புகளை ஆய்வு செய்யாமல் அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பலன்களை பெறாமல் அழிந்து போன சமுதாயங்கள் ஏராளம். இறைவா! நீ இப்படி ஆய்வு செய்யாத சமுதாயமாக எங்களை ஆக்கிவிடாதே." என்று அறிவுப்பூர்வமாக உணர்ந்து பிரார்த்திப்பார்கள்.

192 رَبَّنَآ اِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ
اَخْزَيْتَهٗ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ
اَنْصَارٍ

*192. "எங்கள் இறைவனே! நீ எவரை நரக நெருப்பில் புகுத்துகின்றாயோ அவரை நிச்சயமாக நீ இழிவாக்கிவிட்டாய்; மேலும் அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் எவருமிலர்!" (என்றும்;)*

192. எந்த சமுதாயங்கள் அல்லாஹ்வின் படைப்புகளை ஆராய்ச்சி செய்யாமல் அவற்றிலிருந்து கிடைக்கக் கூடிய பலன்களை பெறும் பாக்கியத்தை இழந்து நிற்கின்றதோ அந்த சமுதாய மக்களின் செயல்கள் எல்லாம் வீணாகிவிடும். அதனால் அவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாகி இழிவுக்குள்ளாவார்கள். இப்படியாக அல்லாஹ்வின் மிகப்பெரிய அருட்கொடையான அறிவாற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தாமல் இழிவாக வாழும் சமுதாயங்களைப் பற்றி அக்கறை காட்டுபவர் யார் இருப்பார்கள்?

193 رَبَّنَآ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِىْ
لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا ۖ
رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا
سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ

*193. "எங்கள் இறைவனே! உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஈமானின் பக்கம் அழைத்தவரின் அழைப்பைச் செவிமடுத்து நாங்கள் திடமாக ஈமான் கொண்டோம்; "எங்கள் இறைவனே! எங்களுக்கு, எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களை விட்டும் அகற்றி விடுவாயாக; இன்னும், எங்க(ளுடைய ஆன்மாக்க)ளைச் சான்றோர்களு(டைய ஆன்மாக்களு)டன் கைப்பற்றுவாயாக!" (என்றும்;)*

193. அதே சமயம் இயற்கை சக்திகளை ஆய்வு செய்து அதில் கிடைக்கும் கண்டுபிடிப்புகளை உலக அழிவிற்காக பயன்படுத்தக் கூடாது. அவற்றை ஒட்டு மொத்த மனித இனத்தின் பரிபாலனத்திற்காக மட்டுமே பயன் படுத்தவேண்டும். அல்லாஹ்வின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படும் சமுதாயம் தான் இவ்வாறு ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தும். இவர்கள் மனதில் எழும் அரைகூவல்கள் இவ்வாறு இருக்கும்.

" உங்கள் இறைவனின் வழிகாட்டுதலை ஏற்று அனைவரும் செயல்பட முன்வாருங்கள். அதையே உங்கள் வாழ்வின் இலட்சியமாக ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறு அழைப்பவரின் அழைப்பை ஏற்று நாங்கள் உன் வழிகாட்டுதலின் நிரூபணமாகும் சத்திய உண்மைகளை அறிந்து நம்பி உறுதியோடு ஏற்றுக் கொண்டோம்."

இதன் பின் இந்த அறிவுடையோர்களின் எண்ணங்கள் இவ்வாறு இருக்கும். "இறைவா! எங்களால் ஏற்படும் சிறுசிறு தவறுகளின் பாதிப்புகளிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக. தீயச் செயல்களிலிருந்து நாங்கள் விலகியிருக்க எங்களுக்கு வழிவகுப்பாயாக. தம் வாழ்வின் இலட்சியத்தில் வெற்றி கண்ட சான்றோர்களின் வரிசையில் இடம்பெறவே நாங்கள் நாடுகிறோம். எனவே எங்களை அப்படிப்பட்ட எண்ணங்களை கொண்டவர்களோடு இணைத்து வைப்பாயாக." (2:286) என்பதாக இருக்கும்.

194 رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ
وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ؕ اِنَّكَ
لَا تُخْلِفُ الْمِيْعَادَ ۝

*194. "எங்கள் இறைவனே! இன்னும் உன் தூதர்கள் மூலமாக எங்களுக்கு நீ வாக்களித்ததை எங்களுக்குத் தந்தருள்வாயாக! கியாம நாளில் எங்களை இழிவுபடுத்தாது இருப்பாயாக! நிச்சயமாக நீ வாக்குறுதிகளில் மாறுபவன் அல்ல (என்றும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்).*

194. "அகிலங்கள் அனைத்தையும் பரிபாலிக்கும் இறைவனே! உன் வழிகாட்டுதலை பின்பற்றி நடந்தால் வளமிக்க சந்தோஷமான வாழ்வு கிடைக்கும் என்று உன் தூதர்கள் மூலமாக நீ வாக்களித்தபடி (24:55) எங்களுக்கு தந்தருள்வாயாக. மனித செயல்களுக்கு ஏற்ற விளைவுகள் தோற்றத்திற்கு வரும் காலக் கட்டத்தில் எங்களை இழிவுபடுத்தாது இருப்பாயாக. நீ அளித்த வாக்குறுதிகளில் எப்போதும் மாறு செய்வதில்லை என்ற உண்மையை நாங்கள் அறிந்தவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு செயலுக்கும் உரிய விளைவுகள் தோற்றத்திற்கு வந்துதான் ஆகும் என்பதை நாங்கள் அறிகிறோம்." என்பதாக பிரார்த்தனை இருக்கும்.

195 فَاسْتَجَابَ لَهُمْ رَبُّهُمْ اَنِّىْ لَاۤ اُضِيْعُ
عَمَلَ عَامِلٍ مِّنْكُمْ مِّنْ ذَكَرٍ اَوْ
اُنْثٰى ۚ بَعْضُكُمْ مِّنْۢ بَعْضٍ ۚ فَالَّذِيْنَ
هَاجَرُوْا وَاُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ
وَاُوْذُوْا فِىْ سَبِيْلِىْ وَقٰتَلُوْا وَقُتِلُوْا
لَاُكَفِّرَنَّ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَاُدْخِلَنَّهُمْ
جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۚ
ثَوَابًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ وَاللّٰهُ عِنْدَهٗ
حُسْنُ الثَّوَابِ ۝

*195. ஆதலால், அவர்களுடைய இறைவன் அவர்களுடைய இப்பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான்; "உங்களில் ஆணோ, பெண்ணோ எவர் (நற்செயல் செய்தாலும்) அவர் செய்த செயலை நிச்சயமாக வீணாக்க மாட்டேன், (ஏனெனில் ஆணாகவோ, பெண்ணாகவோ இருப்பினும்) நீங்கள் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தாம்; எனவே யார் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறினார்களோ*

195. அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி விடப்பட்ட அழைப்பை ஏற்று உயர்ந்த நோக்கங்களுடன் செயல்பட முன்வந்தபோது மறுபுறத்திலிருந்து அல்லாஹ்வின் நடைமுறை சட்டம் அவர்களுடைய எண்ணங்களுக்கும் செயல்பாட்டிற்கும் அங்கீகாரம் அளித்து விடுகிறது. (2:186) உங்களில் ஆணோ பெண்ணோ எவர் ஒருவர் இறை வழிகாட்டுதலின்படி ஆக்கப்பூர்வமான நற்செயல்களை செய்கிறாரோ அவருடைய செயல்கள் வீண் போகாது என்று உறுதி அளிக்கபட்டுள்ளது. மேலும் இதில் ஆண் பெண் என்ற பேதம் இருப்பதில்லை. ஏனெனில் நீங்கள் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தாம். எனவே மனித வர்க்கத்தில் ஆண் பெண் என்று பிரித்து பார்க்க முடியாது.

இதையும் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். இறை வழிகாட்டுதலின் படி ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்தும் போது நீங்கள் பல துன்பங்களையும் துயரங்களையும் சந்திக்க நேரிடலாம். உங்களுக்கு பிடித்தமான செல்வங்களை விட்டுவிட வேண்டிய கட்டாயமும் ஏற்படலாம். வீடு வாசல்களை இழக்கவும் நேரிடும். கடினமான வேதனைக்கும் ஆளாகலாம். கலகம், கலவரம், போர் போன்றவற்றையும் சந்திக்க நேரிடும். அதில் உங்கள் உயிருக்கும் பாதிப்பு ஏற்படலாம். ஆகயார் இவற்றை எல்லாம் சகித்துக்கொண்டு மனஉறுதியுடன் இறை வழிகாட்டுதலின் படி தொடர்ந்து செயல்படுகிறார்களோ அந்த சமுதாயத்தில் சீர்கேடுகள் நீங்கும் என்று வாக்களிக்கப்படுகிறது. இப்படி உருவாகும் சமுதாயத்தில் தாராளமான பொருளாதார வசதிகள் வற்றாத ஜீவ

மேலும் வெளியேற்றப்பட்டார்களோ, மேலும் என் பாதையில் துன்பப்பட்டார்களோ, மேலும் போரிட்டார்களோ, மேலும் (போரில்) கொல்லப்பட்டார்களோ, அவர்களுடைய தீமைகளை அவர்களை விட்டும் நிச்சயமாக அகற்றி விடுவேன்; இன்னும் அவர்களை எவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றனவோ அந்தச் சுவன பதிகளில் நிச்சயமாக நான் புகுத்துவேன்" (என்று கூறுவான்); இது அல்லாஹ்விடமிருந்து (அவர்களுக்குக்) கிட்டும் சன்மானமாகும்; இன்னும் அல்லாஹ்வாகிய அவனிடத்தில் அழகிய சன்மானங்கள் உண்டு.

நதியாய் பெருக்கெடுத்து ஓடும். அதனால் அங்கு சந்தோஷங்கள் பூத்து குலுங்கும். இதுவே அவர்கள் செய்து வந்த நற்செயல்களுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைக்கும் சன்மானமாகும். இப்படிப்பட்ட சன்மானங்கள் அல்லாஹ்வின் வழிகாட்டுதலின் படி ஆக்கப்பூர்வமான நற்செயல்களை செய்வதன் மூலம் மட்டுமே கிடைக்கும் என்பது திண்ணம்.

196 لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِيْنَ كَفَرُوْا
فِى الْبِلَادِ ؕ

196. காஃபிர்கள் நகரங்களில் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருப்பது (நபியே!) உம்மை மயக்கி விடவேண்டாம்.

196. இறை வழிகாட்டுதலுக்கு எதிராக செயல்படுபவர்கள் மிகவும் உல்லாசமாக வாழ்ந்துக் கொண்டிருப்பதை கண்டு உங்களுக்கு ஆச்சரியம் ஏற்படவேண்டாம். அவ்வாறு செயல்படுவதன் மூலம் தற்காலிக சந்தோஷங்களை பெறமுடியுமே தவிர நிரந்தரமாக அவ்வாறு வாழமுடியாது என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள்.

197 مَتَاعٌ قَلِيْلٌ ثُمَّ مَاْوٰهُمْ جَهَنَّمُ ؕ
وَبِئْسَ الْمِهَادُ ۝

197. (அது) மிகவும் அற்ப சுகம்; பிறகு அவர்கள் தங்குமிடம் நரகமே யாகும்; (இது) மிகவும் கெட்ட தங்குமிடமுமாகும்.

197. அப்படியும் அவர்களுக்கு கிடைக்கின்ற சந்தோஷங்கள் மிகவும் அற்பமானதுதான். அதுவும் உண்மையான நிரந்தர சந்தோஷங்கள் கிடைக்க வாய்ப்பில்லை. அதன்பின் அழிவு என்னும் நரகத்தில் பிரவேசிக்க வேண்டியதுதான். இப்படிபட்ட சமுதாயம் உருவெடுப்பது உங்களுக்கு நல்லதா?

198 لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ
جَنّٰتٌ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ
خٰلِدِيْنَ فِيْهَا نُزُلًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ
وَمَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ لِّلْاَبْرَارِ ۝

198. ஆனால், எவர் தங்கள் இறைவனுக்கு பயபக்தியுடன் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஆறுகள் கீழே ஓடிக்கொண்டிருக்கும் சுவன பதிகள் உண்டு; அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பர்: (இது) அல்லாஹ்விடமிருந்து (நல்லோருக்குக் கிடைக்கும்) விருந்தாகும்; மேலும் சான்றோருக்கு அல்லாஹ்விடம் இருப்பதே மேன்மையுடையதாகும்.

198. இதற்கு மாறாக எந்த சமுதாயம் இறை வழிகாட்டுதல்களை பேணி நடந்து உயர் பண்புகளுடன் ஆக்கப்பூர்வமான நற்செயல்களை செய்கின்றதோ அது சந்தோஷங்கள் நிறைந்த சமுதாயமாக திகழும். மேலும் தாராள பொருளாதார வசதிகள் வற்றாத ஜீவ நதிபோல் கிடைத்து அது சுவர்க்கமாக திகழும். உயர் பதவி வகிப்பவர்களுக்கு மதிப்பும் மரியாதையுடன் விருந்து உபசரிப்பு கிடைப்பது போல் அந்த சமுதாயத்தவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் கிடைக்கும். மேலும் இந்த சான்றோர்களுக்கு அல்லாஹ்விடம் கிடைக்கும் நற்பாக்கியங்கள் எவ்வளவு பெரிய சந்தோஷங்களைத் தரும் என்பதை எண்ணிப்பாருங்கள். அப்படி ஒரு சமுதாயத்தில் துன்பமோா துயரமோ அண்டுமா?

199 وَاِنَّ مِنْ اَهْلِ الْكِتٰبِ لَمَنْ يُّؤْمِنُ
بِاللّٰهِ وَمَاۤ اُنْزِلَ اِلَيْكُمْ وَمَاۤ اُنْزِلَ
اِلَيْهِمْ خٰشِعِيْنَ لِلّٰهِ ۙ لَا يَشْتَرُوْنَ
بِاٰيٰتِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا ؕ اُولٰٓئِكَ لَهُمْ
اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ؕ اِنَّ اللّٰهَ سَرِيْعُ
الْحِسَابِ ۝

199. அல்லாஹ் உருவாக்கியுள்ள இந்த சுவன வாழ்வு உலகிலுள்ள அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கும்படி பொதுவில் வைக்கப்பட்டுள்ளது. எனவே வேதமுடையவர்களுக்கும் இந்த சுவன வாழ்வு கிடைக்கும். ஆனால் அவர்களும் இந்த திருகுர்ஆனின் வழிகாட்டுதலை ஏற்று அதன்படி செயல்படவேண்டும். அதாவது இந்த இறை வேதமான திருக்குர்ஆனையும் முந்தைய வேதங்களையும் (2:285) ஏற்றுக்கொண்டு அவர்கள் செய்து வரும் தவறான செயல்களை விட்டுவிட்டு திருக்குர்ஆன் காட்டும் வழியில் வாழ முன் வரவேண்டும். அற்பமான உலக ஆதாயங்களுக்காக இறை வழிகாட்டுதலை தவறாக பயன்படுத்துவதை

199. மேலும் நிச்சயமாக வேதமுடையோரில் சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் மீதும் உங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)திலும், அவர்களுக்கு இறக்கப்பட்ட (மற்ற)வற்றிலும் நம்பிக்கை வைக்கிறார்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை அற்ப விலைக்கு விற்கமாட்டார்கள்; இத்தகையோருக்கு நற்கூலி அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; நிச்சயமாக அல்லாஹ் கணக்கு வாங்குவதில் மிகவும் தீவிரமானவன்.

200 يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

200. முஃமின்களே! பொறுமையுடன் இருங்கள்; (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள்; (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்; (இம்மையிலும், மறுமையிலும்) நீங்கள் வெற்றியடைவீர்கள்!

நிறுத்திக் கொள்ளவேண்டும். எனவே எந்த சமுதாயத்தை சேர்ந்தவராக இருப்பினும் சரியே. யாரெல்லாம் இறை வழிகாட்டுதலின்படி செயல்படுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் இறைவனிடமிருந்து நற்கூலி நிச்சயம் உண்டு. ஆக அல்லாஹ்வின் நியதிப்படி மனிதனின் எந்த செயலுக்கு என்ன விளைவுகள் என்று மிகத்துல்லியமாக கணக்கிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொருக்கும் மிகச் சரியாக கிடைத்து வரும்.

200. இறை வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டவர்களே. ஒரு சமுதாயத்தை வெற்றிகரமாக வழிநடத்திச் செல்லவேண்டும் என்றால் உங்களுள் விடா முயற்சியும் இறைக் கொள்கையில் நிலைத்திருப்பதும் ஒருவருக்கொருவர் இணைந்து ஒளிவுமறைவு இன்றி தோழமை உணர்வுடன் ஒருமித்த மனதோடு செயல்படுவதும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை பேணி நடப்பதும் மிகவும் இன்றியமையாததாகும். அப்போது தான் உங்கள் இலட்சியத்தில் வெற்றி பெறுவீர்கள்.

மூல மொழி : G.A. பர்வேஸ்
தமிழாக்கம் : N. ரூஉல்லா
உதவி : N. நூர் முஹம்மது, M.P. ரபீக் ஆஹமது.
தேதி : 20.09.2009